**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**



©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**



*வெளியீடு :* 18-7-2013 Issued : 18-7-2013


# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, பிப்ரவரி 6, 2013—தொகுதி 37—எண் 3**

**Wednesday, the 6th February 2013—Volume 37—No. 3**


*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

## 6–2–2013

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| *உடுக்குறியிட்ட வினாக்கள்* | 217-274 |
| **2. அறிவிப்பு—** | |
| *பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழு/ஆட்சிமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்* | 275 |
| **3. அறிக்கை அளித்தல்—** | |
| *சட்டவிதிகள் ஆய்வுக் குழு* | 275-276 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| *(அ) அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013* | 276-277 |
| *(ஆ) தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013* | 277-278 |
| **5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | 278-406 |
| *முனைவர் வைகைச்செல்வன்* | 278-295 |
| **மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி* | 286-287, 301,307, 310-312 |
| *திரு. வி.சி. சந்திரகுமார்* | 295-303, 305-310 |
| *மாண்புமிகு திரு. செ. தாமோதரன்* | 296-297 |
| **மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்* | 297,323-333, 377-378, 383-384 |

பக்கங்கள்

**5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா | 298, 299 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 322,334,352, 354-355, 357-358, 381, 382,386,387 |
| *மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ் | 302 |
| *மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 304,356-357 |
| *மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் | 243-248, 257,305-307 |
| *மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி | 267-271,308 |
| மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் | 260,309, 314,374,398 |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 311-312, 374,383 |
| *திரு. டி.ஆர்.பி. ராஜா | 312-316, 318-323 |
| மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு | 248,250-253 |
| *மாண்புமிகு திரு. இரா. காமராஜ் | 254-256, 258, 316-318, 347-348 |
| மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம் | 320,349 |
| மாண்புமிகு திருமதி பா. வளர்மதி | 320-321 |
| திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 322 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 232-233, 333,337-343 |





பக்கங்கள்

**5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. உ. தனியரசு | 343-345 |
| செல்வி கே. பாலபாரதி | 345-346, 348-354,356 |
| *திரு. கே. உலகநாதன் | 355,358-364 |
| திரு. சு. குணசேகரன் | 222,364-365, 393 |
| *திருமதி எஸ். கனிதா சம்பத் | 365-371 |
| *திரு. என்.ஆர். ரெங்கராஜன் | 271-273, 371-376 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 235,253-254, 256-258, 376-380, 382-392 |
| திரு. எம். ஆறுமுகம் | 258-260, 392-393 |
| *திரு. அ. சவுந்தரராசன் | 230-231, 265-268 |
| *திரு. பி.வி. கதிரவன் | 394-400 |
| திரு. ஜே.ஜி. பிரின்ஸ் | 220,397-398 |
| *திரு. எல். வெங்கடேசன் | 400-405 |
| *மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன் | 405-406 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 406-407 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நந்தன, தை 24, திருவள்ளுவர் ஆண்டு – 2044

## 2013 பிப்ரவரி 6, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை*
*எண்ணி இடத்தால் செயின்"*

செய்ய வேண்டிய செயல்கள் பற்றி நன்றாகச் சிந்தித்துத் தக்க இடம் அறிந்து செய்தால் அதில் வெற்றி பெறுவதற்கு மன உறுதி என்னும் துணிவு தவிர வேறு துணை வேண்டாம்.

### 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**11—**

### சொந்தக் கட்டடம்

***21225—திரு. ஆர். சந்திரசேகர்:**

*மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மணப்பாறை தொகுதி, மணப்பாறையில் உள்ள சார்நிலைக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மணப்பாறை சார்நிலைக் கருவூலத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக நில ஒதுக்கீடு பெற திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்டக் கருவூல அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். நிலம் ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணையினைப் பெற்று கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.

**திரு. ஆர். சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்திட அயராது உழைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மணப்பாறை தொகுதி, மணப்பாறையிலுள்ள சார்நிலைக் கருவூலம் சுமார் இருபது ஆண்டு காலமாகப் பழுதடைந்த வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மணப்பாறையிலுள்ள கருவூலமானது மூன்று ஒன்றியங்கள், ஒரு பேரூராட்சி மற்றும் ஒரு நகராட்சியை உள்ளடக்கியது. இந்தக் கருவூலத்தில் சுமார் 2,500 பென்சன்தாரர்கள் உள்ளனர். ஒரு நாளைக்கு, டிபார்ட்மென்டை சேர்ந்தவர்கள் சுமார் 130 பேரும், பொது மக்கள் சலான் கட்டுவதற்காக 200—லிருந்து 300 பேர் வரையும் வந்து செல்கின்றனர். அவர்களுக்குப் போதிய குடிநீர் வசதி, கழிவறை வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்கள் நலன் கருதி, அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடத்தைக் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை சார்நிலைக் கருவூல



2013 பிப்ரவரி 6]

அலுவலகத்திற்கு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் 20 சென்ட் அளவில் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. வருவாய்த் துறையிடமிருந்து நுழைவு அனுமதி சான்றிதழ் பெறுவதற்காக அது நிலுவையில் உள்ளது. அந்தச் சான்றிதழ் விரைவில் பெறப்படும். சான்றிதழ் பெறப்பட்டவுடன் உடனடியாக போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.

**திரு. ஆர். சந்திரசேகர்:** மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட பந்தலூர் தாலுகா செயல்படத் தொடங்கி 10 ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஆனால், அங்கு சார்நிலைக் கருவூலம் இல்லை. எனவே, அங்கே சார்நிலைக் கருவூலம் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் அரசினுடைய விதி. அதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றது. கூடிய விரைவில் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட அந்தச் சார்நிலைக் கருவூலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

[2013 பிப்ரவரி 6

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில், சுல்தான்பேட்டை ஒன்றியம், சூலூர் ஒன்றியம் ஆகிய இடங்களில் உள்ள மக்கள் 50, 60 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கோயம்புத்தூருக்கு போய்வர வேண்டும். அங்கே சார்நிலைக் கருவூலம் கிடையாது. அதனை வட்டமாகப் பிரித்து நான்கு வருடங்களாகிறது. எனவே, அரசு உடனடியாக கருவூலம் அமைத்துக் கொடுத்தால், அங்கே இருக்கின்ற மக்கள் பயன்பெறுவார்கள். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சூலூரில் ஒரு சார்நிலைக் கருவூலம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட திங்கள் சந்தையிலே ஒரு பழைய கட்டடத்தில் கருவூலம் இருக்கிறது. அங்கு வசதியே இல்லை. காவல் பணியில் இருக்கும் காவல் துறை அதிகாரிகூட அங்கு வெளியிலே நிற்கக்கூடிய நிலை இருக்கிறது. எந்தவித அடிப்படை வசதியும் இல்லை. என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற அலுவலகத்திற்குப் பக்கத்திலேதான் அந்த அலுவலகம் இருக்கிறது. அந்தப் பகுதி ஒரு முக்கியமான பகுதி. அங்கு எல்லா வசதியோடும் ஒரு சிறந்த கருவூலம் கட்டித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அலுவலகக் கட்டடங்களுக்கு எல்லாம் கூடிய விரைவில்



2013 பிப்ரவரி 6]

படிப்படியாக அரசால் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் கூறிய அந்தச் சார்நிலைக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலே சார்நிலைக் கருவூலம் பிரிட்டிஷார் காலத்திலே இருந்த குதிரை லாயத்திலே ஏறத்தாழ 130 ஆண்டு பழமையான ஒரு கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த நிலையை மாற்றி அங்கே ஒரு புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற சார்நிலை அலுவலகங்களை மாற்றி அரசின் சார்பாக சொந்தக் கட்டடங்களில் படிப்படியாக கொண்டுவருவதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியினுடைய இலக்கு. ஆகவே, தமிழகத்தில் இருக்கின்ற, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற சார்நிலைக் கருவூலங்களை படிப்படியாக அரசினுடைய சொந்தக் கட்டடங்களில் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதனுடைய முன்னோடியாக இந்த வருடத்தில் மட்டும் 14 சார்நிலைக் கருவூலங்களுக்கு நில ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. தலா ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். விரைவில் பணிகள் துவக்கப்படவிருக்கின்றன. அதற்குப் பின்னால் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அனைத்து சார்நிலைக் கட்டடங்களுக்கும் படிப்படியாக அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கருவூல அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது; அந்தக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தருவதற்கு மானாமதுரை, புறவழிச் சாலையில், புதிய பேருந்து நிலையம் அருகில் அரசு நிலம் இருக்கின்றது. அந்த இடத்தில் ஒரு கருவூல அலுவலகம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலில் திரும்பத் திரும்பக் கூறிவிட்டேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற, தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற 14 சார்நிலைக் கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. படிப்படியாக அனைத்து சார்நிலைக் கருவூலங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் எண்ணம் இனிக்கின்ற வகையில், நாளும் பல திட்டங்களை அள்ளித் தருகின்ற வண்ணத் தமிழ்நாட்டின் முதலமைச்சர், மாட்சிமைபொருந்திய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித மலர்ப்பாதங்களைப் பணிவோடு வணங்கி, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற சார்நிலைக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர மாண்புமிகு





அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அவரவர் தொகுதியில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற சார்நிலைக் கருவூலங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படுமா என்ற கேள்வியை தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அனைவருக்கும் பொதுவான பதிலை நான் இங்கே குறிப்பிட்டேன். மீண்டும் அனைவருக்கும் பொதுவான பதிலை நான் இங்கே தர விழைகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தில் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்ற சார்நிலைக் கருவூலங்களுக்கு படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றார்கள். இந்த வருடம் மட்டும் 14 சார்நிலைக் கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. கூடிய விரைவில் தமிழகத்தில் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அனைத்து சார்நிலைக் கருவூலங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**12—**

## குப்பைகள் எரித்தல்

***10911—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 பிப்ரவரி 6

*(அ) நகரங்களிலும், கிராமப் பகுதிகளிலும் சேகரிக்கப்படும் குப்பைகள் தீயிட்டு அழிக்கப்படுவதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) உள்ளாட்சி அமைப்புகளால் சேகரிக்கப்படும் குப்பைகள் அறிவியல் முறைப்படி கையாளப்பட வேண்டுமெனவும், தீர்வு செய்யப்பட வேண்டுமெனவும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 21–12–2001 ஆம் நாளிட்ட அரசாணை எண் 159–இல் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. சேகரிக்கப்படும் குப்பைகளை அறிவியல் முறைப்படி கையாளவும், தீர்வு செய்யவும், குப்பைகளை தீயிட்டு அழிப்பது போன்ற நடவடிக்கைகளைத் தவிர்க்கவும் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. குப்பைக் கிடங்குகளில் தீ விபத்து ஏற்படுகின்றபோது உடனடியாக அணைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

**திரு. பொன். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, உலகமே வணங்கும் எங்கள் வாழும் மனித தெய்வம். என்னை வாழவைத்துக் கொண்டிருக்கும் எங்கள் குலதெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித மலர்ப் பாதங்களை பணிந்து வணங்குகிறேன்.

மேன்மைமிகு தமிழகத்தின் மாண்புமிகு முதல்வராக மூன்றாவது முறையாக உலகத் தமிழர்களின் இதய சிம்மாசனத்திலே என்றும் முதல்வராய் வாழும், நான் நித்தம் நித்தம் வணங்கும் எங்கள் குலதெய்வம், பார் போற்றும் சரித்திர முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வஞ்சிக்கப்பட்ட பழவேற்காடு மீனவ மக்களுக்கு L & T மற்றும் அரசுத் துறைகளிலே வேலைவாய்ப்புகளை வழங்கி அவர்களின்



2013 பிப்ரவரி 6]

வாழ்க்கையில் மட்டுமல்லாமல், வல்லூர் வட சென்னை அனல் மின் நிலையத்தை துரிதப்படுத்தி, ஒட்டுமொத்த தமிழகத்தின் இருளை அகற்றிய, எங்கள் அரசியல் சாணக்கியரே; உலகம் எதிர்நோக்கும் நம் எதிர்கால இந்தியாவே; மாண்புமிகு அம்மா அவர்களின் புனித மலர்ப்பாதங்களை பணிந்து வணங்கி, எனது பொன்னேரி தொகுதி மக்கள் சார்பாக எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகரங்களிலும், கிராமங்களிலும் சேகரிக்கப்படும் குப்பைகளை எரிப்பதால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளைத் தவிர்க்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு ஏற்கெனவே பதில் கூறப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு குப்பைகளை அறிவியல்பூர்வமாக செயல்படுத்தி முறைப்படுத்தவேண்டும் என்பதற்காக மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று பிரித்து, மக்குகின்ற குப்பைகளை உரமாகவும்; மக்காத குப்பைகளைப் பிரித்தெடுத்து சுழற்சி முறையில் தேவையற்ற பொருட்களை ஒதுக்கிவிட்டு, பிளாஸ்டிக் போன்ற பொருட்களை மீண்டும் மறு சுழற்சி செய்வதற்கு நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், பிளாஸ்டிக் பொருட்கள் என்று வருகின்றபோது அவை தூளாக்கப்பட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 2001–ல் ஆட்சி பொறுப்பிலிருந்தபோது அதைச் சாலைகளுக்குப் பயன்படுத்தவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருந்தார்கள். அதன் அடிப்படையிலே மாநகராட்சியிலே கிடைக்கின்ற பிளாஸ்டிக் பொருட்களை தூளாக்கி சாலை போடுவதற்கு பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது என்பதையும் மாண்புமிகு

[2013 பிப்ரவரி 6

பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

**திரு. பொன். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குப்பைகளை தீயிட்டு அழிப்பதைத் தவிர்க்கும்விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு திடக் கழிவுகளை பிரிக்கும் மையத்தினை உருவாக்கினார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் புனித பொற்பாதங்களை பணிந்து வணங்கி, நன்றி கூறி இந்த அறிவியல்பூர்வமான திட்டத்திலே மக்களுக்கு சுகாதாரக் கேடுகள் ஏற்படும் என்ற அச்சத்தினைப் போக்கும்விதத்திலே தொலைக்காட்சியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விளம்பரங்களை செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுகின்ற வகையிலே ஆங்காங்கே இருக்கின்ற கள அலுவலர்கள் நேரடியாக வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்களைக் கொடுத்து இப்படியெல்லாம் குப்பைகளை நீங்கள் கையாள வேண்டுமென்று அறிவுறுத்தி வருகிறார்கள். தொடர்ந்து அந்தப் பணியாளர்களுக்கும் அப்போதைக்கப்போது விஞ்ஞானபூர்வமான பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஒட்டன்சத்திரம் தொகுதி நகராட்சியாக தரம்



2013 பிப்ரவரி 6]

உயர்த்தப்பட்டு, தமிழ்நாட்டிலேயே மிகப்பெரிய காய்கறி மார்க்கெட் ஒட்டன்சத்திரத்தில் செயல்பட்டு வருகிறது. அங்கு தினந்தோறும் சேகரிக்கப்படும் கழிவுகள் மற்றும் குப்பைகள் ஒட்டன்சத்திரம் நகராட்சி தேசிய நெடுஞ்சாலையில் கொட்டப்பட்டு வருகின்றது. நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடமோ அல்லது அரசாங்க நிலமோ ஏதும் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகராட்சி நிருவாகத்தின் மூலமாக நிதி ஒதுக்கி, தனியாரிடம் பேசி, நிலம் கையகப்படுத்தப்பட்டு, அந்தக் குப்பைகளைச் சேமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இதுகுறித்து ஏற்கெனவே துறைச் செயலாளரோடும் மற்ற நிருவாகிகளோடும் மாவட்ட வாரியாக, மண்டல வாரியாக ஆய்வு செய்தது. பல நகராட்சிகளுக்கு இதுபோன்று குப்பைகளைக் கொட்டுவதற்குரிய இடங்கள் ஒதுக்கப்படாமல் பல்வேறு இடையூறுகளிலே நகராட்சிகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதைத் தவிர்க்கின்ற வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நகராட்சிகளுக்கு இடம் அடையாளம் காணப்பட்டு, அந்த நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, முறைப்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள்.

**திரு. பு. வெற்றிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கொடுங்கையூர், பெருங்குடி ஆகிய பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் திறந்தவெளியில் குப்பைகளைக் கொட்டும் முறை இருந்து வருகிறது. வளர்ந்துவரும் விஞ்ஞான யுகத்தில் இந்தக் குப்பைகளைக் திறந்தவெளியில் கொட்டாமல் அவற்றை அழித்து, அதனை வேறுவிதமாக மின்சாரம் தயாரிக்கவோ அல்லது உரம்

தயாரிக்கவோ திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். Crow–flying distance என்று சொல்வார்கள். அப்பகுதியில் 3 அல்லது 4 கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்தில் உள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி மற்றும் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட இடத்தில் அமைந்துள்ளது. அப்பகுதியில் மக்கள் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள். மக்கள் சமையல் செய்ய முடியவில்லை. அப்பகுதிக்கு சென்றுவந்தால், உடைகளில் கரை படிகிறது. இதுபோன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண புரட்சிகரமான திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களால்தான் செய்ய முடியும். ஆகையால் சென்னை மக்களுக்கு ஒரு விடிவு காலத்தைப் பெற்றுத்தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சியில் நாள் ஒன்றுக்கு 4,500 மெட்ரிக் டன் குப்பைகள் உருவாகிக்கொண்டிருக்கிறது. அவ்வாறு உருவாகின்ற குப்பைகளில் 2,500 மெட்ரிக் டன் பெருங்குடியிலும், 2,000 மெட்ரிக் டன் கொடுங்கையூரிலும் சேகரிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதனை அறிவியல்பூர்வமாக மாற்றி அங்கு வாழ்கின்ற மக்களுக்கு ஏற்றவகையில் எவ்வித துர்நாற்றமும் இல்லாமல் ஒரு திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதை கேட்டிருக்கிறார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள் எதையுமே தொலைநோக்குப் பார்வைகொண்டு வருங்கால சந்ததியினருக்கும் அவர்கள் நல்லமுறையில் வாழ்வதற்காக திட்டங்களைத் தீட்டக்கூடியவர். அதனடிப்படையிலேதான் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திடக் கழிவு மேலாண்மைக்காக மூன்று வெவ்வேறு திட்டக் கூறுகளுக்காக உலகளாவிய அளவில் ஆர்வம்காட்டும் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

அதில் திட்டக் கூறு–I: சென்னை மாநகர் மற்றும் சென்னைக்கு அருகிலுள்ள சென்னை மாநகராட்சியின் உதவியை நாடும்



உள்ளாட்சி அமைப்புகளுக்கு நாள்தோறும் 2,500 மெட்ரிக் டன் திடக் கழிவுகளை இறுதியாகத் தீர்வு செய்ய ஒருங்கிணைந்த திடக் கழிவு மேலாண்மை வசதிகளை நிறுவுதல்; திட்டக் கூறு–2: குறிப்பிட்ட காலக்கெடு நிர்ணயித்து கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியிலுள்ள குப்பை கொட்டும் வளாகங்களைச் சீரமைத்தல் மற்றும் அவற்றை அறிவியல் ரீதியில் மூடுதல்; திட்டக் கூறு–3: சென்னை மாநகராட்சியால் படிப்படியாக குறிப்பிடப்படும் மண்டலங்களில், வார்டுகளில் உள்ள தெருக்களைப் பெருக்கி, குப்பை அகற்றுதல் மற்றும் வீட்டுக்கு வீடு சென்று குப்பை சேகரித்தல் மற்றும் அவற்றை ஒருங்கிணைந்த திடக் கழிவுகள் பதனிடுதல், திடக் கழிவு வளாகத்திற்குக் கொண்டுசென்று சேர்த்தல் ஆகிய திட்டங்களைச் செயலாக்குதல். மேற்கண்ட மூன்று திட்டக் கூறுகளுக்கு 31 நிறுவனங்கள் பங்கேற்று இருக்கின்றன. அது ஆய்விலே இருக்கிறது. இந்த ஆய்வு முடிந்த பின்பு, முறையாக செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறை நிலவி வரக்கூடிய இந்தச் சூழ்நிலையில் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கக்கூடிய திட்டத்தை அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகளுக்கு விரிவுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புரட்சிகரமான சிந்தனையில் செயல்படக்கூடியவர். குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படுகின்ற திட்டம் ஒரு முதல் முயற்சி. உலக அளவில் இது வெற்றி பெற்ற முயற்சி என்று சொல்லிவிட முடியாது.

[2013 பிப்ரவரி 6

இருந்தாலும், முழுவதுமாக குப்பைகள் அகற்றப்பட வேண்டும், குப்பையிலிருந்து வருமானம் வரவேண்டும் என்பதற்காகத்தான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படுவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதன்படி, அதிகமாகக் குப்பைகள் சேருகின்ற மாநகராட்சிகளில் முதற்கட்டமாக அந்தப் பணி தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது வெற்றியடைகின்றபட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கையைப் படிப்படியாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திடக்கழிவு மேலாண்மையில் அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை குறித்து இப்பொழுது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பிற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடுகளிலேயே தரம் பிரித்து குப்பையை எடுப்பது அவசியம். குறிப்பாக பிளாஸ்டிக் கழிவுகள், மின்னணுக் கழிவுகள் கடுமையான பாதிப்புகளை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. Nickel, lead போன்றவை பாதிப்பை உண்டாக்குகின்றன. கொடுங்கையூரில் எடுத்த சோதனையில் 19 விதமான இரசாயனத் துகள்கள் அங்குள்ள மக்களைத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. தீப்பிடித்து புகையாக வரும்பொழுது அதனுடைய பாதிப்பு கடுமையாக இருக்கிறது. ஆகவே, நீண்டகாலத் தீர்வை நான் பாராட்டி வரவேற்கிற அதேவேளையில், ஒரு பக்கம் தீ வைக்கிறார்கள், இன்னொரு பக்கம் மீத்தேன் வாயு வழியாக தீ வருகிறது. அதற்குக் காரணம் மலைபோல குப்பையைக் குவிப்பதுதான். குப்பையை land filling என்றுதான் நாம் அழைக்கிறோம். ஆனால், இப்பொழுது இங்கே மலையை உருவாக்கக்கூடிய வகையில் குப்பை எப்படிக் கொட்டப்படுகிறது என்பதை ஒரு பெரிய கேள்விக்குறியாக ஆராய்ச்சியாளர்கள் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள்.



2013 பிப்ரவரி 6]

கொடுங்கையூரில் தீப்பிடித்த இடத்திற்குத் தீயணைப்பு வண்டி போவதற்குப் பாதை இல்லை. வரிசையாகக் குப்பையைக் கொண்டிக்கொண்டே வந்துவிட்டார்கள், போவதற்குப் பாதை இல்லை. ஆகவே, பாதைகளை உண்டாக்க வேண்டும். இரண்டு தீயணைப்பு வண்டிகளை நிரந்தரமாக கொடுங்கையூரிலும், பெருங்குடியிலும் நிறுத்த வேண்டும். அங்கே தீ அணைப்பதற்கு தண்ணீர் கிடையாது. இப்பொழுது இருக்கின்ற ஏற்பாட்டின்படி ஹெலிகாப்டரில் வந்துதான் தீயை அணைக்க முடியும். அங்குள்ள மக்கள் வாகனங்களில் போக முடியவில்லை, நடக்க முடியவில்லை. ஆகவே, தீயணைப்பிற்கு உடனடித் தீர்வு என்ற வகையிலே இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்போதுமே ஒரு கற்பனை உலகத்தில் சென்று கருத்தைச் சொல்வதில் வல்லவர். அதன் அடிப்படையில்தான் இப்பொழுது ஹெலிகாப்டரில் சென்று தண்ணீர் தெளிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இருந்தாலும் அவர் நியாயமான எண்ணத்தை, கருத்தை அவையின் கவனத்தை ஈர்ப்பதற்காக இங்கே சொல்லியிருக்கிறார். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விரைவாக, வேகமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியை பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தைக் கண்காணிக்க 24 மணி நேரமும் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர்கள் சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். குப்பை கொட்டும் வளாகத்திற்குள் விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடும் நோக்கில் நுழையும் நபர்கள் காவல் துறையின் உதவியுடன் அப்புறப்படுத்தப்படுகின்றனர். குப்பை கொட்டும் வளாகத்தில் ஆங்காங்கே ஏற்படும் தீ மற்றும் புகைகள் தீயணைப்புத் துறையின் உதவியுடன் அணைக்கப்படுகின்றன. எந்த நேரத்திலும் தீயணைப்பு நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக, தீயணைப்பு வாகனம் 24

[2013 பிப்ரவரி 6

மணி நேரமும் பணியில் ஈடுபட்டிருக்கின்றது. மேலும், போக்குவரத்திற்கு இடையூறின்றி குப்பைகளை முறைப்படி கொட்டுவதற்கு அந்த இடத்திலே 5 பொக்லைன்கள் வைக்கப்பட்டு, வருகின்ற குப்பைகள் அனைத்தும் ஒவ்வொரு பகுதியாக எடுத்துச்சென்று ஆங்காங்கே நிரப்பப்படுகிறது.

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் அவ்வப்போது தீயணைப்பதற்குத் தேவைப்படும் தண்ணீரைப் பெறுவதற்காக மூன்று ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பையை எடுத்துச்செல்லும் வாகனங்கள், அதாவது வெளியிலிருந்து வரும் குப்பையை கடைசி வரைக்கும் கொண்டு போவதற்காக, வாகனங்கள் எளிதில் சென்று வருவதற்காக ரூ.65 இலட்சம் செலவில் சாலைகள் உள்ளேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. அதோடு boundary–க்குச் செல்லுகின்ற வகையிலே ரூ.509 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. குப்பை கொட்டும் வளாகத்தில் சாலையின் அருகில் குப்பை கொட்டுவது தவிர்க்கப்படுகிறது. இதன் அடிப்படையிலே ஏதாவது இடத்திலே தீப்பிடிக்கிற நேரத்தில் உடனடியாக அணைப்பதற்கு சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே தீயணைப்பு வண்டி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே தண்ணீர் எடுப்பதற்காக மூன்று ஆழ்துளைக் கிணறுகள் போடப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்புரவுத் தொழில் என்பது சமூக தூய்மைக்குரிய ஒரு தொழில். இந்தத் தொழிலிலே ஈடுபடுகிறவர்கள் மாநகராட்சியானாலும், நகராட்சியானாலும், உள்ளாட்சி அமைப்புகளானாலும் தற்காலிக அடிப்படையிலே அல்லது ஒப்பந்த அடிப்படையிலே நியமிக்கப்படுகிறார்கள். எங்கெல்லாம் 50 துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மேலே பணி நியமனம் அவசியம் ஏற்படுகிறதோ, அங்கெல்லாம் அந்தப் பணி நிரந்தரமாக்கப்படவேண்டும் என்கிற ஒரு சட்டத்தை 1999–லே



2013 பிப்ரவரி 6]

சென்னை மாநகராட்சி, 'சென்னை மாநராட்சி நீங்கலாக' என்ற ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து, அதற்குப் பின் படிப்படியாக பல நகராட்சி உள்ளாட்சி அமைப்புகளிலே இப்போது தற்காலிகமாகவும், ஒப்பந்த அடிப்படையிலுமே துப்புரவுத் தொழிலாளர்கள் பணி நியமனம் செய்யப்படுகிற ஒரு அவல நிலைமை இருக்கிறது.

மனித மலத்தை மனிதனே சுமப்பது என்பதைவிட ஒரு இழிவு 21 ஆம் நூற்றாண்டிலே வேறொன்றும் இருக்கமுடியாது என்கிற வகையிலே, அதற்காக தேசிய அளவிலே 1993–லே ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டும் பல மாநிலங்கள் நிறைவேற்றாமல் இருக்கிறபோதும், நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நலிந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரமான அவர்கள், இந்தச் சட்டமன்ற அமைப்பின் தொடக்கத்திலேயே மனித மலத்தை மனிதனே சுமக்கிற அந்த இழிவை தடுத்து நிறுத்துகிற ஒரு சட்டத்தை இந்த மாமன்றத்திலேயே நிறைவேற்றியிருக்கிறார்கள். எனவே, வருங்காலங்களிலே இதைக் கருத்திலே கொண்டு, ஒப்பந்த அடிப்படையிலே துப்புரவுத் தொழிலாளர்களை நியமிப்பதைத் தடுக்க அரசு முன்வருமா? தற்காலிக பணி நியமனங்களை மாற்றி நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்குமா? துப்புரவுத் தொழிலாளர்களுக்காக தனி குடியிருப்புகளை ஏற்படுத்திட இயலுமா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துப்புரவுப் பணியாளர்கள் சுகாதார முறைப்படிகூட அந்தப் பணியை ஆற்றவேண்டும் என்பதற்காகத்தான் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இன்றைக்கு சென்னை மாநகராட்சியை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், துப்புரவுப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் கையுறை மற்றும் செருப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குப்பைகளை கையாளுவதற்காக நவீனமயமான உபகரணங்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதன் அடிப்படையிலே பார்த்தோம் என்று சொன்னால், ஏற்கெனவே நிரந்தரத்

தொழிலாளர்களாக துப்புரவுத் தொழிலாளர்கள் இருந்துகொண்டு இருக்கிறார்கள். வருங்காலத்தில் அரசு சட்டத்தின்படி யார் யாரையெல்லாம் நிரந்தரம் செய்ய முடியுமோ அவர்களையெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிரந்தரம் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் நகராட்சிகளே இல்லாத நிலையில் பேரூராட்சிகளும், ஊராட்சிகளும் உள்ளடங்கி இருக்கின்றன. மயிலாடுதுறையிலிருந்து கும்பகோணம் செல்கின்ற வழியில் ஆடுதுறை, திருவிடைமருதூர் மற்றும் திருபுவனம் ஆகிய ஊர்கள் பேரூராட்சிகளாக இருக்கின்றன. இரட்டைக் குழந்தைகள்போல ஒட்டி இருக்கிற பேரூராட்சிகளாக இருக்கிற அந்த மூன்று பேரூராட்சிகளில் கொட்டப்படுகிற குப்பைகளைப் பல்வேறு இடங்களில் பராமரிக்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே, நகராட்சிகளுக்கு ஓரிடத்தில் அந்தக் குப்பைகளை அழித்து சுகாதாரத்தைத் தருவதைப்போல, மூன்று பேரூராட்சிகளையும் இணைத்து ஒரே இடத்தில் அந்தக் கழிவுகளை அழிக்க முறையாக, நவீன முறையில், செயல்படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல, மண்டல வாரியாக நாங்கள் ஆய்வு செய்தபோது, தஞ்சை மாவட்டத்திலே ஒரு பிரத்தியேகமான நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டம் தண்ணீர் சூழ்ந்துள்ள பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், அங்கே இருக்கின்ற நிலங்கள் கோயில் நிலங்களாகவே இருக்கின்ற காரணத்தினாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்கின்றபோதுகூட, அரசு





நிலங்கள் இல்லாத காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, பல்வேறு பேரூராட்சிகளில் குப்பைகள் கொட்டுவதற்கு இடம் இல்லாமல் இருக்கிறது. அதைக் கருத்தில்கொண்டுதான் அந்த அந்தப் பகுதியிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இடங்களைத் தேர்வு செய்வதற்கும், எங்கள் துறையின் அலுவலர்கள் அதற்கு உறுதுணையாக இருந்து செயல்படுவதற்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை நல்ல கோரிக்கை. மூன்று பேரூராட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு பகுதியிலே அந்தக் குப்பைகளைக் கொட்டி, அதை முறைப்படுத்துவது செயல்படுத்தப்படுமா என்று கேட்டிருக்கிறார். அதுபோன்று ஒரு சூழ்நிலை வருகின்றபட்சத்தில் அதை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

*முற்பகல் 10–30*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குப்பைகளை அகற்றவும், அவற்றை அழிக்கவும் நகர்ப் பகுதிகளில் இருப்பதைப்போன்று கிராமப்புறங்களில் போதிய வாகன வசதிகள் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா என்பதையும், அத்தகைய வாகன வசதிகளை கிராமப்புறங்களுக்கு செய்து கொடுப்பதற்கும், அந்தக் குப்பைகளை அழிப்பதற்குண்டான நவீன வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் அரசு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி என்று வருகின்றபொழுது, மக்கள் நெருக்கம் அதிகமாக இருக்கின்ற பகுதிகளில் அந்தப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு வாகனங்கள் தேவைப்படுகின்றன. ஊராட்சி கிராமப் பகுதி என்று

வருகின்றபொழுது, அங்கே 50 வீடுகள், 30 வீடுகள், 25 வீடுகள், என்று இருக்கின்றன. அப்படி இருக்கின்ற பகுதிகளிலே வெளியிடங்கள் நிறைய இருக்கின்றன. நிறைய இடங்கள் இருக்கின்ற காரணத்தினால் அந்த அந்தப் பகுதியினுடைய குப்பைகளை அந்த அந்தப் பகுதியிலே பயன்படுத்திக்கொள்ள முடியும். அதனடிப்படையிலேதான் ஊராட்சிகளுக்கு இதுபோன்ற வாகனங்கள் வழங்கப்படுவதில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபோன்ற பெரிய கிராமங்கள் இருக்கின்றன என்று சொன்னால், அதற்குரிய மாற்று ஏற்பாடு என்ன செய்ய முடியும் என்பதை அரசு சிந்தித்து செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே கேட்டதுபோல, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டிலே, பேரூராட்சிகள் இருக்கின்ற பகுதிகளில் cluster முறையிலே குப்பைகளைக் கையாளுவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதை அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகராட்சியில் குப்பை கொட்டுவதற்கான இடம் முழுக்க, முழுக்க குப்பைகளால் நிரம்பி, இப்போது குப்பை கொட்டுவதற்கே இடமில்லாமல் மலைபோல் குவிந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அதைத் தீ வைத்துக் கொளுத்துகிற காரணத்தினால், சிதம்பரம் நகரம் முழுவதும் மக்கள் வாழ முடியாதபடி சுகாதாரத் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். கொசுத் தொல்லையால் டெங்கு காய்ச்சல் போன்ற பல நோய்கள் பரவுகிற ஆபத்து ஏற்படுகிறது. எனவே, அந்தக் குப்பைகளை re–cycle செய்வதற்கான மாற்று வழியினை மேற்கொள்ள அரசு முன்வருமா? குப்பைகளை re–cycle செய்து, அதை மறுபயன்பாட்டுக்குப் பயன்படுத்துகிற மாற்று வழி ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு ஏற்ப, அரசு குப்பை தளங்களில் விழுகின்ற குப்பைகளைப் பிரித்தெடுத்து, மக்கும் குப்பைகளை ஒரு பகுதியாகவும், மக்காத குப்பைகளைப் பிரித்து, சுழற்சி முறையில் பயன்படக்கூடிய பொருட்களை எடுத்துக்கொண்டு, எதற்குமே பயன்படாத பொருட்களை நிலத்திலே பரப்பி அதை மூடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையிலே சிதம்பரம் நகராட்சியில் இந்தப் பணியைத் தொடங்கி இருப்பார்கள். அப்படி இல்லையென்று சொன்னால், பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சியில் அள்ளப்படும் குப்பைகளைக் கொட்டுவதற்காக சேலம் மாநகரை ஒட்டியுள்ள சேலம் ஒன்றியத்தில், செட்டிச்சாவடி ஊராட்சியிலே திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. ஆனால், அந்தத் திட்டம் முழுமையாக செயல்படாததால், மாநகராட்சியில் வாகன வசதிகள் இல்லாத காரணத்தினாலே கிச்சிப்பாளையம் பகுதியிலே ஏறக்குறைய 30, 35 ஆண்டுகளாக மக்கள் நெருக்கடி மிகுந்த பகுதிகளிலே குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்கூட தேர்தல் பிரச்சாரத்தின்போது அந்தக் குப்பைகள் அப்புறப்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அதுமட்டுமில்லாமல், புதிய பேருந்து நிலையம் அருகில் இருக்கும் காலியாக உள்ள இடத்திலே, ஏறக்குறைய பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து போகிற இடத்திலே குப்பைகளைக் கொட்டுகிறார்கள்.

சேலம் வடக்கு தொகுதி, 10–வது கோட்டத்திலும், அதுமாதிரி குப்பைகளைக் கொட்டுகிறார்கள். ஆகவே, அந்த குப்பைகளையெல்லாம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்மூலம் கொண்டு செல்ல உரிய வாகன வசதிகளை அமைச்சரவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாகனங்கள் வாங்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற உடனேயே, நகர்ப்புறங்களை மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தை அறிவித்து, 750 கோடி ரூபாய் மற்ற மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 500 கோடி ரூபாய் சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் வாயிலாக, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய சேலம் மாநகராட்சிக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கிட்டத்தட்ட 5½ கோடி ரூபாய் வாகனங்கள் வாங்குவதற்காக நிதியொதுக்கி, வாகனங்கள் வாங்கப்பட்டு, இப்போது எல்லாக் குப்பைகளும் உரிய இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அள்ள அள்ளக் குறையாத ஒரு அட்சய பாத்திரம். அந்த வகையில், துறையூர் நகராட்சிக்கு மட்டும், நகராட்சி அலுவலகக் கட்டடம் கட்டிட 3 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்தும், நகராட்சி முழுவதும் புதிய பைப்லைன் அமைக்க நிதியொதுக்கீடு செய்தும், நூலக அலுவலகக் கட்டடம் கட்டிட நிதியொதுக்கீடு செய்தும் தந்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துறையூர் தொகுதி, துறையூர் நகராட்சியில், 18–வது வார்டு, ஆதி திராவிட மயானப் பகுதி அமைந்துள்ள இடம், பல ஆண்டுக்



2013 பிப்ரவரி 6]

காலமாகக் குப்பைகளைக் கொட்டி, ஒரு மலைபோலக் காட்சியளிக்கிறது. குப்பைகளைக் கொட்ட முடியாத அளவிற்கு உள்ள அந்த இடத்தை விட்டுவிட்டு, அந்த இடத்திற்குப் பதிலாக, நகராட்சி அலுவலகம் இப்போது வேறு ஒரு இடத்தைத் தேர்வு செய்து, அங்கே குப்பைகளைக் கொட்டிக் கொண்டிருந்தாலும்கூட, அந்த இடத்தில் உள்ள குப்பைகளை அள்ளாமல் இருப்பதால், மயானப் பகுதிக்குச் செல்ல அது இடையூறாக இருப்பதோடு, குடியிருப்புப் பகுதிகளில் குப்பைகள் சேருவதால், அங்கே சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அளவிற்கு மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளது. எனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்துகூட மயானப் பாதை அமைக்க நிதியொதுக்கீடு செய்தும், எந்தவொரு ஒப்பந்தக்காரரும் அந்த வேலையைச் செய்ய முன்வரவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் குப்பைகளை அகற்றி, ஆதி திராவிட மக்கள் செல்லுகின்ற மயானத்திற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மயானத்திற்குச் சுற்றுச்சுவர் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்குச் சொந்தமாக குப்பை கொட்டும் தளங்கள் இருக்கின்றன. அவை நகர்ப்புறப் பகுதிகளின் அருகில் இருக்கின்ற காரணத்தினால், யாரும் அவற்றை ஆக்கிரமிப்பு செய்துவிடக் கூடாது என்பதற்காக, எங்கெங்கெல்லாம் அவற்றிற்குச் சுற்றுச்சுவர் கட்டப்பட வேண்டுமோ, அங்கெங்கெல்லாம் சுற்றுச்சுவர் அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே ஆய்வின்போது அந்தந்தத் துறை அலுவலர்களிடத்திலே அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதனடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிற பகுதியில் இந்த நிதியாண்டிலேயே சுற்றுச்சுவர் கட்டுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு

[2013 பிப்ரவரி 6

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாநகராட்சியிலிருந்து பெறப்படுகின்ற கழிவுகளையெல்லாம் அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட சதுப்பேரி கிராமத்தில் கொட்டுவதால், மிகவும் மோசமான சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், பல ஆண்டுக் காலமாக அங்கே கொட்டப்பட்ட கழிவுகளெல்லாம் மலைபோல் தேங்கிக் கிடக்கின்றன. இது ஒருபுறம் இருக்க, அங்கே நாய்களெல்லாம் கூட்டம் கூட்டமாகச் சென்று, அந்தக் குப்பைகளை எடுக்கின்றபோது, வழியிலே செல்லுகின்ற வாகனங்களின் குறுக்கும் நெடுக்குமாக அவை செல்லுகின்றபோது, விபத்துகள் ஏற்படுகின்றன. சமீபத்தில் பள்ளிக் குழந்தைகள் செல்லக்கூடிய ஒரு வாகனம் கவிழ்ந்து உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியைக் கேட்டு விடுகிறேன். ஆகவே, அந்தக் குப்பை கூளங்களையெல்லாம், கழிவுகளையெல்லாம் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத பகுதியாகப் பார்த்து, சுகாதாரச் சீர்கேடு ஏற்படாதவண்ணம், வேறு எங்காவது கொண்டு சென்று கொட்டுவதற்கு அரசு திட்டம் வைத்திருக்கிறதா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை, ஏற்கெனவே வேலூர் மாநகராட்சியை ஆய்வு செய்கின்றபோது, அதன் காரணமாக என்னென்ன இடர்பாடுகள் ஏற்படுகின்றன என்பது ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. அதனடிப்படையிலே, உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 பிப்ரவரி 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாம்பு கடித்தால் மனிதன் பிழைத்து விடுவான்; ஆனால், டெங்கு கொசு கடித்தால் பிழைக்க வாய்ப்பே இல்லை என்று ஒரு பெரிய சவால் சமுதாயத்திலே இருந்து கொண்டிருக்கிறது. நகரத்தினுடைய, கிராமப்புறங்களுடைய தூய்மையை அரசினுடைய கொள்கையாக மாற்றவேண்டும். அப்படியானால், அந்த மன்றங்களுடைய அதிகாரம், நிதி, இவற்றைப் பயன்படுத்தி, தூய்மைக்கு முதலிடம் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டும். அந்த வகையில், துப்புரவுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும், நவீன கருவிகள் வாங்கவும் மாநில அரசினுடைய இத்துறை திட்டமிட வேண்டும். திண்டுக்கல் உட்பட சில நகராட்சிகளில் பல மாதங்களாக துப்புரவு அதிகாரிகள்கூட இல்லை. மாநில அரசினுடைய இத்துறை திட்டமிடுகிறபொழுது, காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப ஆவன செய்யுமா என்பதையும், தூய்மையை அரசினுடைய கொள்கையாக மாற்ற முன்வருவீர்களா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூய்மை என்பது அரசினுடைய கொள்கையில் ஒரு பகுதி; அரசினுடைய கொள்கை திட்டங்களில் ஒரு பகுதி. அதில் எந்தெந்தத் திட்டங்கள் வருகின்றனவோ அந்தத் திட்டங்களின் வாயிலாக என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ, அந்தப் பணிகள் எல்லாம் எந்தவகையில் தூய்மையுடன் இருக்க வேண்டும் என்பதற்கேற்றவாறு அந்தத் தூய்மை மேம்படுத்தப்படும். அதனடிப்படையில், குப்பைகளை அகற்றுவது என்பது அரசுப் பணி; அதில் தூய்மை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னை மாநகராட்சியைத் தவிர, மற்ற

மாநகராட்சிகளுக்கு 750 கோடி ரூபாயை ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிதிகள் குப்பைகளை, திடக் கழிவுகளை வெளியேற்றுவதற்கும், அதை முறைப்படுத்துவதற்கும்தான் பெருமளவில் செலவழிக்கப்படுகிறது.

பல மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் குப்பைகளை அகற்றுவதற்குப் போதிய வாகனங்கள் இல்லை. 15 ஆண்டு காலமாக வாகனங்கள் வாங்க இயலாத பல மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள் உள்ளன. அவற்றுக்கெல்லாம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்தபிறகு, 2011–2012 ஆம் ஆண்டிலே வாகனங்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையிலேதான் எல்லா வகையான மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளும் தூய்மைப்படுத்தப்பட்டு வருகின்றன. மக்கள் எப்போதுமே சுகாதாரமாக வாழ வேண்டும் என்பதுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் கொள்கையாகும். அதன் அடிப்படையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒவ்வொரு திட்டத்தையும் ஆய்வு செய்து, கூர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் கூறியதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்களும் கூறி இருக்கிறார்கள். துப்புரவுப் பணியாளர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் குறிப்பிடும்போது, 'டெங்குக் கொசு கடித்தால் இறப்பு ஏற்படும்' என்ற ஒரு தவறான செய்தியைக் கூறினார். டெங்கு காய்ச்சல் என்பது ஒரு சாதாரண வைரஸ் காய்ச்சல்தான்; அது 'உயிர்க்கொல்லி நோய் அல்ல' என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

## அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***14331—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், ஈடியார் தோப்பில் வீட்டு வசதி வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு ஆரணி ஒன்றியம், ஈடியார் தோப்பு என்ற பகுதியில் ஏறத்தாழ 5, 6 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கின்றது; அது, வேலூருக்கும், திருவண்ணாமலைக்கும் இடைப்பட்ட பகுதி. அந்தப் பகுதியிலிருந்து அரசு ஊழியர்கள் மிகுந்த அளவிலே வேலூருக்கும், திருவண்ணாமலைக்கும் செல்கின்ற சூழ்நிலை நிலவிக் கொண்டிருக்கிறது. அதேபோல, அரசு கட்டித் தரும் வீடுகளுக்கு, தவணை முறையில் பணம் செலுத்துவதற்குத் தயாராக இருக்கின்ற, வீடுகள் இல்லாத மக்கள் அங்கே இருக்கின்றார்கள். எனவே, அவசியமாக, அந்த இடத்திலே, வீட்டு வசதி வாரியத்

[2013 பிப்ரவரி 6

துறை மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தால் மக்களுக்கு மிகுந்த பயன் உள்ளதாக இருக்கும். எனவே, அப்பகுதியிலே அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடுக்குமாடி வீடுகள் கட்ட அரசு முன்வருமா என்றுதான் கேட்டிருந்தார். இப்பொழுதுதான் அரசு ஊழியர்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஆரணி தொகுதியில், எத்தனை அரசு அலுவலகங்கள் உள்ளன, எத்தனை அரசு ஊழியர்கள் பணிபுரிகின்றனர் என்பதையெல்லாம் ஆராய்ந்து, வீட்டு வசதி வாரியத்திற்குத் தேவையான இடம் கிடைத்தால், அரசு ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

*முற்பகல் 10–45*

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ச்சியாக அதே மேற்கு ஆரணி ஒன்றியத்திலே, முள்ளிப்பட்டி என்கின்ற ஊராட்சிக்குட்பட்ட பகுதியிலே வீட்டு வசதி வாரியத்தினுடைய வீடுகள் இருக்கின்றன. அந்த வீடுகளைப் பராமரிக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. அதைப் பராமரிப்புப் பணி செய்து, அங்கே இருக்கக்கூடிய 200-க்கும் மேற்பட்டவர்களுக்குத் தடையின்மைச் சான்றிதழ் வழங்காத சூழ்நிலை இன்று நிலவிக்கொண்டு இருக்கிறது. ஆரணி தொகுதியிலே மட்டுமல்லாமல், தமிழகத்திலே ஏறத்தாழ 15 ஆயிரம் வீடுகளுக்கு பணத்தை முழுவதுமாக செலுத்தியும், வீட்டின் உரிமையாளர்கள் தங்கள் பெயரிலே பத்திரப் பதிவு செய்துகொள்ள முடியாத சூழ்நிலை, தடையின்மைச் சான்றிதழ் கிடைக்காத ஒரு சூழ்நிலை நிலவிக்கொண்டு இருக்கின்றது. இதைக் கருத்திலேகொண்டு உடனடியாக தடையின்மைச் சான்றிதழ் வழங்கியும், முள்ளிப்பட்டி ஊராட்சியிலே இருக்கக்கூடிய வீட்டு



2013 பிப்ரவரி 6]

வசதி வாரியக் குடியிருப்புக்களை பழுது நீக்கித் தருவதற்கும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடையின்மைச் சான்றிதழ் என்றால் என்ன என்று தெரியவில்லை. விளக்கமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூற வேண்டும். அடுத்தது, பழுது பார்ப்பதற்கு இந்த வருடம் 10 கோடி ரூபாய் நிதியை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கி இருக்கின்றார்கள். எங்கெங்கே வீடுகள் பழுதடைந்திருக்கின்றனவோ, அத்தனை வீடுகளையும் பழுதுபார்ப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர் தடையில்லாச் சான்று என்று சொல்வது Sale Deed என்று நினைக்கின்றேன். அது, சில வாரிசுதாரர்கள் போட்டி, கடன் வாங்கி, வீடு வாங்கி, N.O.C. வாங்கிக் கொடுக்காமல், இப்படி பல வழிகளில் கொடுக்க முடியாமல் இருக்கிறது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 3–வது முறை ஆட்சியில் இதுவரைக்கும் 23,759 Sale Deed கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பணம் கட்டியவர்கள் யாருக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னால் கொடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், தமிழகத்தின் விடிவெள்ளி, இந்தியாவின் வழிகாட்டி புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் 25 ஆண்டுகளுக்கு முன்பு அரசுக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அக்குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. அந்த பழுதடைந்த வீடுகளைச் சரி செய்து கொடுப்பதற்கு நமது அமைச்சர் அவர்கள் திட்டம் ஏதேனும் வைத்திருக்கிறார்களா என்பதை நான் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதடைந்த வீடுகளைச் சீர் செய்ய குடிசை மாற்று வாரியத்திற்கு கிட்டத்தட்ட இந்த வருடம் 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங்களில் தமிழ்நாட்டில் குடிசை மாற்று வாரிய வீடுகள் பழுதடைந்திருக்கின்றனவோ அந்தப் பகுதிகளைச் சீர்செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக கூறிக்கொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.*

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சென்னையை அடுத்த திருவள்ளூர் மாவட்டத்திலே திருமழிசை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் 2 ஆயிரம் ஏக்கர் நிலத்திலே அதி நவீன வசதி படைத்த வீடுகள் கட்டுவதற்காக* Satellite town *அமைப்பதற்காக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த ஆட்சிக் காலத்திலே திட்டமிட்டு, அந்த 2 ஆயிரம் ஏக்கர் நிலத்திலே தற்போது 400 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அந்த 400 ஏக்கரில் வீட்டு வசதி அமைப்பதற்கான அணுகு சாலை அமைப்பதற்காக 40 ஏக்கர் விரைவிலே எடுக்கப்பட்டு, அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று கடந்த கூட்டத் தொடரிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா; என்ன நிலையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உடைமைதாரர்களிடம் பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 90 சதவிகிதம் முடிக்கப்படும் தருவாயில் இருக்கிறது. இன்னும் 2, 3 மாதத்திற்குள் பணிகள் தொடங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*



2013 பிப்ரவரி 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட குழித்துறை நகராட்சியில் பல பகுதிகளில் குடிசைகள் அடுக்கடுக்காக இருக்கின்றன. மக்கள் மழைக் காலங்களில் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். அவர்களுக்குக் குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாகவோ அல்லது வீட்டு வசதி வாரியத்தின் வாயிலாகவோ வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஆய்வு செய்து நிதி நிலைமைக்கு ஏற்ப தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியில், மதுராந்தகம் நகராட்சியில் 21–வது வார்டில் வசிக்கின்ற ஏழை எளிய குடிசைவாழ் மக்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட இந்த கேள்விக்கும், இனிமேல் இதுபோன்று கேட்கப்போகின்ற கேள்விகளுக்கும் சேர்த்து ஒரே பதிலைச் சொல்லி விடுகிறேன். குடியிருப்புகள் எங்கெங்கு தேவைப்படுகின்றவோ அங்கெல்லாம்*

ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**14—**

**கட்டட வசதி**

*__11621—திரு. சி. சண்முகவேலு:__

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குழிப்பட்டி மலைவாழ் பகுதியிலுள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம், குழிப்பட்டி கிராமத்தில் செயல்படும் பகுதி நேர நியாய விலைக் கடையை, தளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் நடத்தி வருகின்றது. இக்கடை வாரத்தில் ஒரு நாள், அதாவது வியாழக்கிழமை மட்டும் குழிப்பட்டியிலுள்ள பள்ளிக்கூடத்தில் தற்காலிகக் கடையாக செயல்பட்டு வருகின்றது. இப்பகுதியில் வாழும் ஐந்து மலைக்கிராமங்களைச் சேர்ந்த 215 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பகுதியில் புதிய பகுதி நேர கடை கட்ட வேண்டுமானால், மத்திய, மாநில வனத் துறையினரின் அனுமதி பெற்றுத்தான் கடையைக் கட்ட வேண்டும். இவ்வனுமதி பெறுவதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ள நிலையில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் டிசம்பர் 2012—இல் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் அறிவித்த 341 அறிவிப்புகளில் ஒன்றான நடமாடும் நியாய விலைக் கடைகள் நடத்துவதற்கு, திருப்பூர் மாவட்டத்திற்கு ஒரு வாகனம்*





*வாங்குவதற்கு அனுமதி அளித்தார்கள். அந்த உத்தரவை செயல்படுத்துகின்ற வகையில் தளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு 13 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் வாகனம் வாங்க கொள்முதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் குழிப்பட்டி கிராமத்தில் நடமாடும் வாகனம்மூலம் பகுதி நேர நியாய விலைக் கடை விரைவில் செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

**திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எங்களது மாவட்டத்துக்குட்பட்ட உடுமலை வட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மலைவாழ் மக்கள் வாழ்கின்ற 18 செட்டில்மெண்ட் பகுதிகளில் ஐந்து இடங்கள் ஒருங்கிணைந்த குழிப்பட்டி என்ற இடத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தளி பேரூராட்சி மூலமாக 215 கார்டுகளுக்கு பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்று கூறினார்கள். வாரத்திற்கு ஒரு நாள் வழங்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து அனைத்துப் பகுதிகளுக்கும் தளி பேரூராட்சி கடையின் மூலமாக வழங்கப்படவேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் 13 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, நடமாடும் நியாய விலைக் கடையை அறிவித்து, அதைப் பயன்பாட்டிற்கு கொடுத்திருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியை அன்போடு கூறிக்கொள்கிறேன். இந்த செட்டில்மெண்ட் பகுதி என்பது இந்த ஒரு பகுதி மட்டுமல்ல, மூன்று பகுதிகளையும் கொண்ட இடமாக உள்ளது. ஒன்று தளி பகுதி; இன்னொன்று காட்டுப்பட்டி, மாவடப்பு போன்ற பகுதிகள் உள்ளிட்ட அந்த இடங்களும், வனத் துறையால் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடத்தில்தான் கடை இயங்கி வருகின்றன. அதேபோல தளிஞ்சி, கோடந்தூர், ஈசல்திட்டு போன்ற இடங்களிலும் மானுப்பட்டி கடையின் மூலமாக பொருட்களை விநியோகம் நடைபெற்று வருகின்றது. மூன்று இடங்களையும் ஒருங்கிணைத்து நடமாடும் நியாய விலைக்*

[2013 பிப்ரவரி 6

கடையை அந்த மூன்று பகுதிகளுக்கும், 18 செட்டில்மெண்ட்டுகளுக்கும் வாரத்திற்கு ஒரு நாள் அங்கு பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, நடமாடும் நியாய விலைக் கடை அந்தப் பகுதியிலும் செயல்படுத்துவதற்கான பணி விரைவில் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய நன்றியை கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் பல்வேறு வகையான Godown–களை அந்த கூட்டுறவு சொசைட்டிக்கு கட்டிக் கொடுத்தார்கள். எங்களது பகுதியிலும் இன்னும் சில இடங்களுக்கு அந்தியூர், பூலாங்கிணறு, இராமநாதபுரம், குமரலிங்கம், கனியூர், ராமையகவுண்டன்புதூர், துங்காவி ஆகிய பகுதிகளில் Godown கட்டுவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்து தருவார்களா என தங்கள்மூலம் கேட்டுக்கொண்டு, செட்டில்மெண்ட் பகுதியிலே, பேரூராட்சிக்குட்பட்ட இடங்களிலே 5 லிட்டர் மண்ணெண்ணையும், ஊராட்சிக்குட்பட்ட இடங்களிலே 3 லிட்டர் மண்ணெண்ணையும், எதற்கும் கட்டுப்படாத இடங்களிலே 10 லிட்டர் மண்ணெண்ணையும் வழங்குகிறார்கள். செட்டில்மெண்ட் பகுதியில் வாழும் மலைவாழ் மக்கள் அத்தனை பேர்களுக்கும் எவ்வித பாகுபாடின்றி அரசின் G.O.–ன்படி 10 லிட்டர் மண்ணெண்ணை வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய துறை அதனை ஒட்டிய துறையாக இருந்தாலும்கூட, அதை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமருகிறேன்.



2013 பிப்ரவரி 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Godown கட்டுவதற்கு மூன்று, நான்கு இடங்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியாவில் ஒரு மாநிலத்தில், நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட 1,166 கிடங்குகளில் 1,141 கிடங்குகளை ஏறத்தாழ 9 மாதங்களிலே கட்டி முடித்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்குத்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, மாண்புமிகு அம்மாவினுடைய திட்டங்கள் ஏழையெளிய விவசாயிகளுடைய நலன்கருதி, அவர்கள் விளைவித்த பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கின்ற வகையில் இதுபோன்ற கிடங்குகளைப் பயன்படுத்த வேண்டுமென்பதற்காக சென்ற நிதியாண்டில், 2012–2013 ஆம் நிதியாண்டிலும் 1,104 கிடங்குகள் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்தப் பணியும் விரைவாகத் தொடங்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பகுதியில் அந்தக் கிடங்குகள் இல்லாமல் இருக்குமேயானால், எதிர்காலத்தில் அதுவும் சேர்த்து கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

அடுத்து ஒன்றைச் சொன்னார்; மண்ணெண்ணை வழங்குவதைப் பற்றி. மண்ணெண்ணை வழங்குகின்றபோது, ஒவ்வொரு பகுதிக்கும் எவ்வாறு வழங்க வேண்டும் என்பது இப்போது நம்முடைய மாநில உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அதிகாரிகளால் பல்வேறு பகுதிகளிலே பிரிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் பாராமுகத்தால் நம்முடைய மாண்புமிகு அம்மாவினுடைய கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளாத சூழ்நிலையில், மாநிலத்திற்கு வழங்குகின்ற மண்ணெண்ணை அளவு மிகக் குறைவாக இருப்பதனால், இருக்கிற மண்ணெண்ணையை அனைத்து மக்களுக்கும் சரியான முறையில் கிடைக்கின்ற வகையில் மாநிலத்தின் தலைமையிடமாக இருக்கும் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் எரிவாயு இணைப்பு

வசதி இல்லாதவர்களுக்கு 10 லிட்டர் மண்ணெண்ணையும், ஒரு எரிவாயு உருளை உள்ளவர்களுக்கு 3 லிட்டர் மண்ணெண்ணையும், இதர நகராட்சிகளில் 6 லிட்டர் மண்ணெண்ணையும், ஒரு எரிவாயு உருளை உள்ளவர்களுக்கு 3 லிட்டரும், பேரூராட்சி மற்றும் நகராட்சிகளில் எரிவாயு வசதி இல்லாதவர்களுக்கு 5 லிட்டர் மண்ணெண்ணையும், ஒரு உருளை வைத்திருப்பவர்களுக்கு 3 லிட்டரும், ஊராட்சிப் பகுதிகளில் எரிவாயு வசதி இல்லாதவர்களுக்கு 3 லிட்டரும், ஒரு எரிவாயு உருளை இணைப்பு இருப்பவர்களுக்கு 3 லிட்டரும், அதேமாதிரி நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தளவுக்கு தலைமையிடமாக செயல்படுகின்ற இடத்தில் 15 லிட்டர் மண்ணெண்ணையும் வழங்கப்படுகிறது. ஒரு எரிவாயு உருளை உள்ளவர்களுக்கு 3 லிட்டர் மண்ணெண்ணை வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில், பேரூராட்சி மற்றும் நகரியங்களில் 10 லிட்டர் மண்ணெண்ணை வழங்கப்படுகிறது. ஒரு எரிவாயு உருளை வைத்திருப்பவர்களுக்கு 3 லிட்டர் மண்ணெண்ணை வழங்கப்படுகிறது. ஊராட்சிப் பகுதியில் எரிவாயு வசதி இல்லாதவர்களுக்கு 5 லிட்டரும், ஒரு எரிவாயு உருளை வைத்திருப்பவர்களுக்கு 3 லிட்டர் மண்ணெண்ணையும் இப்படி பகிர்ந்து அளிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதி, கங்குவார்பட்டி பேரூராட்சியிலிருந்து 4 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய பாலப்பட்டி என்ற கிராமத்திற்கு அந்த மக்கள் ரேஷன் பொருட்கள் வாங்க செல்ல வேண்டியிருக்கிறது. அதற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்த மக்களுக்கு, 240 கார்டுகளைக் கொண்ட அந்த ஊர் மக்களுக்கு ஒரு கடை கட்டித் தரப்பட்டிருக்கிறது. ஒரு மாதத்தில் இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் அங்கே போய் அந்தப் பொருட்களை விநியோகிக்க வேண்டுமென்று சொல்லியும், அந்தக் கடை கட்டிக் கொடுக்கப்பட்டும், இதுவரை அந்தப் பணி நடக்கவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் நான் ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறேன். அந்தக் கட்டடம் முடிந்தும் இதுவரை அந்தப் பணி தொடங்கப்படாமல் இருக்கிறது. அந்த மக்களுக்கு அந்த வாய்ப்பை செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, கட்டடம் கட்டப்பட்டு—எத்தனை கார்டுகள் இருக்கின்றன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** 240 கார்டுகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** உறுதியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி, துறையின் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்கான பணியை விரைவாகத் தொடங்கி அந்தக் கடை செயல்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**15—**

## பட்டை தீட்டப்படாத அரிசி

***21194—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டை தீட்டப்படாத அரிசியின் நன்மைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு முன்வருமா?

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, உணவு வகைகள், அவற்றின் தரம் குறித்த விழிப்புணர்வினை பிரச்சாரங்கள் மூலமும், பொருட்காட்சிகள் மூலமும் மற்றும் ஆயிரம் பள்ளிகளிலும், 500 கல்லூரிகளிலும் செயல்படும் குடிமக்கள் நுகர்வோர் மாணவர் மன்றங்களின்மூலமும் மேற்கொண்டு வருகின்றது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டில் பாரம்பரிய உணவு வகைகளில் இருந்து வெகுதூரம் விலகிச் சென்ற காரணத்தினால் சர்க்கரை வியாதி இதய நோய், புற்றுநோய் போன்ற நோய்கள் புதிது புதிதாக அதிகரித்து வருகின்றன. இந்திய நாட்டில், குறிப்பாக, தமிழகத்தில் அரிசியைப் பயன்படுத்தாதவர்கள் எவரும் இல்லை என்ற நிலை உருவாகியிருக்கின்றது. ஆனால், இப்போது நாம் பயன்படுத்தக்கூடிய இந்த அரிசி பலமுறை பட்டை தீட்டப்பட்ட காரணத்தினால் அந்த அரிசியில் இருக்க வேண்டிய நல்ல சத்துக்கள் எல்லாம் அகற்றப்பட்டு விடுகின்றன. அதன்காரணமாகத்தான் சர்க்கரை வியாதி அதிகரிக்கின்றன. இதய நோய்கள் அதிகரிக்கின்றன. புற்றுநோய்கள் உருவாகின்றன. எனவே, பட்டை தீட்டப்படாத அரிசியைப் பயன்படுத்துவது குறித்து பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் பொது இடங்களில் இதுபற்றி அதிக அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதேவேளையில் இந்தப் பட்டை தீட்டப்படாத அரிசி கிடைக்கக்கூடிய வகையில் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 பிப்ரவரி 6]

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே 1,000 பள்ளிகளிலும், 500 கல்லூரிகளிலும் செயல்படும் குடிமக்கள் நுகர்வோர் மாணவர் மன்றங்கள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை இங்கே கோடிட்டுக் காட்டியிருந்தேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்களுக்குத் தற்போது வருகிற வியாதிகள் எல்லாம் பட்டை தீட்டப்பட்ட அரிசியினால் வருகிறது. அதைக் களைவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா, விழிப்புணர்வை ஏற்படுத்த முடியுமா என்கிற வினாவை இங்கே தொடுத்துள்ளார்கள். மாநில அரசு கொள்முதல் செய்கின்ற நெல் அரைவை செய்யப்படும்பொழுது புழுங்கலரிசிக்கு 68 சதவீதம் கொள்முதலும், பச்சரிசிக்கு 67 சதவீதமும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி அரிசி தயார் செய்யும்போது புழுங்கல் அரிசிக்கு 8 சதவீதம் மட்டுமே பட்டை தீட்டப்பட்டு அரிசி பெறப்படுகிறது. இதனால் நெல்லை தண்ணீரில் ஊற வைக்கும்போது ஏற்படுகின்ற இராசயன மாற்றங்களினால் நெல் உமியின் அடிப்பகுதியிலுள்ள புரோட்டீன் சத்து முதலானவை அரிசியின் உள்ளே ஊடுருவிச் சென்று விடுகிறது. அரைவையின்போது மேற்படி சத்தில்லாத உமியும், தவிட்டுப் பகுதி மட்டுமே பிரித்தெடுக்கப்படுகிறது. இதனால் அரிசியிலுள்ள ஊட்டச்சத்தின் அளவு குறைவதில்லை. மேலும், அனைத்துச் சத்துக்களும் புழுங்கலரிசியில் முழுமையாக கிடைக்கப் பெறுவதால், இரத்தத்தில் சர்க்கரையின் அளவு வேகமாக அதிகரிக்காமல் மெதுவாகவே உயர்வதால் இவ்வகை அரிசி நுகர்வோருக்கு எவ்விதத் தீங்கும் விளைவிப்பது கிடையாது. புழுங்கலரிசியைத்தான் தமிழகத்தில் அதிகமாகச் சாப்பிடுகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், பச்சரிசியைப் பொறுத்தவரையில் சென்னை, திருவள்ளூர், கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற மாவட்டங்களில் பச்சரிசியை உண்ணுகிறார்கள். பச்சரிசியானது நெல்லை நேரடியாகக் காய வைத்து, இயந்திரங்கள்மூலம் அப்படியே அரைத்து அரிசி ஆக்கும்போது, நெல்லில் உள்ள உமியின் அடிப்பகுதியில் Endosperm என்கின்ற அரிசிக்கும் உமிக்கும் இடையில் உள்ள Aleurone படலம் என்கிற புரதச் சத்து, வைட்டமின்கள் மற்றும் தாது உப்புக்கள் தவிட்டுடன் சேர்ந்து வெளியில் சென்று விடுகின்றன. மாவுச்சத்து மட்டுமே எஞ்சி நின்று உடலில் இரத்தச் சர்க்கரையை அதிகப்படுத்துவதைத் தடுக்கும்வகையில் பச்சரிசிக்கு 5 சதவீதம் மட்டுமே பட்டை தீட்டப்படுகிறது.

[2013 பிப்ரவரி 6

பொது விநியோகத் திட்டத்தின்மூலம் வழங்கப்படும் அரிசி இரண்டு முதல் நான்கு மாதங்கள் வரை சேமிப்புக் கூடங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டியிருப்பதால் அரிசியின் நிறம் பழுப்பாக மாறாமல் இருப்பதற்காக சிறிதளவாவது மேற்கண்ட அளவில் பட்டை தீட்ட வேண்டியுள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல், பட்டை தீட்டப்படாத அரிசியைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் கைக்குத்தல் அரிசியைத்தான் கொடுக்கமுடியும். கைக்குத்தல் அரிசியை ஒரு தெரு அல்லது ஒரு கிராமம் என்று சொன்னால் கொடுத்து விடலாம். இதைத் தமிழகத்திற்கே கொடுக்க வேண்டுமென்று சொன்னால், பொது விநியோகத் திட்டத்தின்மூலம் மட்டும் நாம் கொடுக்கிற அரிசியின் அளவு 3 இலட்சத்து 18 ஆயிரம் இலட்சம் மெட்ரிக் டன், ஒவ்வொரு மாதமும் கொடுக்கிறோம். வருடத்திற்கு 40 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை நாம் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் மட்டுமே கொடுக்கிறோம். எனவே, 40 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியில் தமிழகத்திலே நெல்லிலிருந்து பெறப்படுகிற அரிசி எவ்வளவு என்று சொன்னால், 15 இலட்சத்திலிருந்து 16 இலட்சம் மெட்ரிக் டன் மட்டும்தான் பெறப்படுகிறது. மற்றவை எல்லாம் மத்திய அரசின் பொதுத் தொகுப்பில் இருந்து வாங்கப்படுகிறது. இருந்தபோதிலும் விழிப்புணர்வை இன்னும் தீவிரப்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னுமா கேள்வி கேட்கிறீர்கள்? விரிவாகத்தான் பதில் சொல்லிவிட்டார்களே? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, பட்டை தீட்டப்படாத அல்லது கைக்குத்தல் அரிசியில் இருக்கக்கூடிய நுண் சத்துக்கள், குறிப்பாக fibre content, ஒரு நாளைக்கு சராசரியாக ஒரு மனிதர் 25 கிராம் fibre content எடுக்க வேண்டும். ஒரு கப் சாதத்தில் கைக்குத்தல் அரிசியில் 3.5 கிராம் fibre content இருக்கிறது...



2013 பிப்ரவரி 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, கேள்வி மட்டும் கேளுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** கேன்சருக்காக, விளக்கமாகச் சொல்லிவிடுகிறேன், இதில் ஒன்றும் தவறில்லை. 3.5 கிராம் நார்ச் சத்துண்டு. ஆனால், பட்டை தீட்டப்பட்ட அரிசியில் 1 கிராமுக்கும் குறைவாகத்தான் இருக்கிறது. Fibre content தான் மிக முக்கியம். இது intestine cancer–ஐ உருவாக்குகிறது. கேன்சர் என்றவுடன் பயப்படவேண்டிய அவசியம் இல்லை. எனவே, கோலான் கேன்சர், இன்டஸ்டைன் கேன்சர், constipation இவை எல்லாம் இதுபோன்ற காரணங்களால் வருகின்றன. இவற்றையெல்லாம் வராமல் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

அடுத்தது, முக்கியமாக கைக்குத்தல் அரிசிதான் சிறந்தது, இருந்தாலும்கூட கோடிக்கணக்கான மக்களுக்கு கைக்குத்தல் அரிசியைக் கொடுக்க இயலாது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி மட்டும் கேளுங்கள். நீங்கள் ஒரு நல்ல டாக்டர் என்று எல்லோருக்கும் தெரியும். எனவே, கேள்வி மட்டும் கேளுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதாவது, கோடிக்கணக்கான மக்களுக்கு கைக்குத்தல் அரிசி கொடுக்க முடியாது என்பதை நான் அறிவேன். இருந்தாலும்கூட அதைப்பற்றிய ஒரு விழிப்புணர்வு இருந்தால் மக்கள் அதை அதிகமாகப் பயன்படுத்துவார்கள். அடுத்தது . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் கைக்குத்தல் அரிசி சாப்பிடுகிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, கேள்வி மட்டும் கேளுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதாவது, நவீன ஆலைகள் Rice Huller rubber roller என்பது ஒரு புதிய முறை. அதன்மூலமாக பட்டை தீட்டினால் பெரும்பாலான சத்துக்கள் அப்படியே

[2013 பிப்ரவரி 6

*இருக்கும். எனவே, நமது அரசு சார்பாக வழங்கப்படக்கூடிய அரிசி ஆலைகளில் இந்த* Rice Huller rubber roller *என்பதை அறிமுகப்படுத்தினால்—பொதுமக்கள் வாங்கிய அரிசியைக்கூட மீண்டும் பட்டை தீட்டி சாப்பிடுகிறார்கள். அந்தப் பழக்கத்தையாவது தவிர்க்கவும், கைக்குத்தல் அரிசி இப்போது எங்குமே கிடைக்கும் சூழ்நிலையில் இருக்கிறது. அதை அரசு மூலமாக நீங்கள்—அறிமுகப்படுத்தினால் நன்றாக இருக்கும். என்னைப் பொறுத்தமட்டில். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *டாக்டர் நீங்கள் கேள்வி கேட்காமல் விரிவாக சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் நிறைய கேள்விகள் இருக்கின்றன. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், சீக்கிரம் பதில் சொல்லி முடியுங்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு மட்டும் வருடத்திற்கு ரூ.12 இலட்சத்து 50 ஆயிரம் செலவு செய்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஆலோசனை சொல்கிறார்கள். அது வரவேற்கக்கூடியது என்று சொன்னாலும், மருத்துவர் என்கிற ரீதியில் சொல்லப்படுகிற அந்த அறிவுரைகள், நடைமுறைச் சிக்கலையும் ஏற்படுத்திவிடும் என்பதால்தான் முழுமையாக இதனைக் கடைப்பிடிப்பதற்கு வாய்ப்பில்லை என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**16—**

## தடுப்பணை திட்டம்

*__4882—திரு. எம். ஆறுமுகம்:__

*மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2013 பிப்ரவரி 6]

*கோயம்புத்தூர் தெற்கு வட்டம், தொண்டாமுத்தூர் ஒன்றியம், ஆனைமடுவுப் பள்ளத்தின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்"*

*என்ற வள்ளுவன் வழியிலே ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் அம்மா அவர்கள் அரசு, ஏற்கெனவே தொண்டாமுத்தூர் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வேலுமணி அவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், உடனடியாக ஆனைமடுவுப் பள்ளத்தின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்குண்டான பணியை நிறைவேற்ற உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தப் பணிக்காக ரூ.1.1 கோடி மதிப்பில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பணிகள் நடைபெறுவதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களிடம் கோரிக்கை வைத்து, அதனை நடைமுறைப்படுத்துகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியமைக்கு அவருக்குப் பாராட்டுக்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள தாடியூர் பேரூராட்சிக்கு உட்பட்டிருக்கக்கூடிய பாறைக்கிணறு என்ற இடத்தில் உற்பத்தியாகி ஆனைமடம் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்து அந்தத் தண்ணீர் பரவலாக செல்கிற காரணத்தினால், அதனை விவசாயத்திற்கு பயன்படுத்த முடியாது. அந்தப் பகுதியை ஒட்டி இருக்கக்கூடிய குக்கிராமங்களுக்கும்*

[2013 பிப்ரவரி 6

பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைப்பதற்கான வாய்ப்பு வசதிகள் உருவாகும். எனவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா; அந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு; அந்தத் திட்டம் எப்போது நிறைவேறும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பணிக்கான மதிப்பீடு ரூ.1 கோடியே 10 இலட்சத்தில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, விரைவில் பணிகள் நடைபெறுவதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பகுதியில் தடுப்பணை கட்டினால் இப்பகுதியில் உள்ள மக்கள் மற்றும் வன விலங்குகளுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதோடு மட்டுமல்லாமல், அங்கேயுள்ள 7 ஊராட்சிகளில், சுமார் 24 கிராமங்கள் பயன்பெறுகின்ற வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டாமுத்தூர், தொண்டாமுத்தூர் சுற்றியுள்ள பகுதிகளில் தற்போது யானைகள் ஊருக்குள்ளே புகுந்து நடமாட்டம் செய்வதால் தொந்தரவு அதிகரித்துள்ளது. இது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. எனவே, இதனைப் பயன்படுத்தி அவற்றிற்கு குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தவும், ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டுவதற்கும், அதுபோல் இந்த அணையைக் கட்டுவதினால் அந்தப் பகுதி முழுவதும் இருக்கக்கூடிய வறட்சியைப் போக்கக்கூடிய நிலை ஏற்படும். எனவே இதனை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நிதியாண்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 பிப்ரவரி 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.

**திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது குடும்ப தெய்வம், வருங்கால பாரதம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, தொண்டாமுத்தூர் தொகுதி விவசாயிகளுடைய 40 வருட கோரிக்கையை ஏற்று, விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும், 24 கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சினையையும், வன விலங்குகளுடைய குடிநீர்ப் பிரச்சினையும் தீர ஆனைமடுவில் தடுப்பணை கட்ட ஆணையிட்ட காவிரித் தாய், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொண்டாமுத்தூர் தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றி மலர்களை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**17—**

## கால்நடை கிளை நிலையங்கள்

***226—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மனாபபுரம் தொகுதி, பேச்சிப்பாறை, சுருளக்கோடு ஆகிய பகுதிகளில் கால்நடை கிளை நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேச்சிப்பாறை பகுதியிலும், சுருளக்கோடு பகுதியிலும் கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படுமா என்று வினா

[2013 பிப்ரவரி 6

எழுப்பியிருக்கிறார்கள். அரசிலே ஒரு விதி இருக்கிறது. அவர் குறிப்பிடுகின்ற கிராமத்திலே 3,000 கால்நடை அலகுகள் இருந்தால், அங்கே கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும். ஆனால், உறுப்பினர் குறிப்பிடுகின்ற கிராமங்களிலே 3,000–க்கும் குறைவாக கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினால், அங்கே கால்நடை கிளை நிலையம் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், எதிர்காலத்திலே 3,000 கால்நடை அலகுகள் அதிகரிக்கும் பட்சத்தில் அங்கே கால்நடை கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மனாபபுரம் தொகுதிக்குட்பட்ட பேச்சிப்பாறை, சுருளக்கோடு ஆகிய மலைப் பகுதி கிராமங்களில் 3,000–க்கும் அதிகமாக பழங்குடி மக்கள் ஆடு, மாடு ஆகிய கால்நடைகளை வளர்த்து வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். அவர்கள் குலசேகரத்தில் அமைந்துள்ள கால்நடை மருத்துவமனைக்கு வரவேண்டுமானால், சுமார் 15 முதல் 20 கிலோ மீட்டர் தூரம் வரை பயணம் செய்ய வேண்டியிருக்கின்றது. ஆகவே, இப்பகுதியில் விரைவில் கால்நடை கிளை நிலையம் அமைக்கவும், கால்நடை வளர்க்கும் ஏழை மக்கள், பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு சங்கங்களின் மூலமாக மானிய விலையில் கால்நடைத் தீவனம் வழங்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குலசேகரம் பகுதியில் ஒரு கால்நடை மருந்தகமும், திருவட்டாறு பகுதியில் ஒரு கால்நடை மருந்தகமும், அதற்கு அருகில் இருக்கக்கூடிய ஆத்தூரில் ஒரு கால்நடை கிளை நிலையமும், பூவன்கோட்டில் ஒரு கால்நடை கிளை நிலையமும், பொன்மனையில் ஒரு கால்நடை கிளை நிலையமும் என



2013 பிப்ரவரி 6]

திருவட்டாறு ஒன்றியத்தில் இரண்டு கால்நடை மருந்தகமும், மூன்று கால்நடை கிளை நிலையமும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அங்கு இருக்கின்ற கால்நடைகளுக்கு அந்த மருத்துவ வசதிகளே போதுமானது என்பது அரசினுடைய கருத்து. இருந்தாலும், எதிர்காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கால்நடை கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மனாபபுரம் தொகுதிக்கு உட்பட்ட, சடையமங்கலம் ஊராட்சியில், கால்நடை கிளை நிலையக் கட்டடம் எஸ்.ஜே.ஜி.எஸ்.ஒய். திட்டத்தின்கீழ் கட்டிமுடிக்கப்பட்டு, அங்கு மருத்துவர் இல்லாத காரணத்தால், கிளை நிலையம் இயங்காமல் இருக்கிறது. ஆகவே, உடனடியாக கால்நடை மருத்துவரை நியமனம் செய்யவும், குக்கிராமங்களில் உள்ள கால்நடைகள் பயன்பெறும் வகையில் வாங்கப்பட்டுள்ள நடமாடும் கால்நடை மருந்தக வாகனம் ஓட்டுனர் இல்லாமல் இருப்பதால் உடனடியாக ஓட்டுனரை நியமனம் செய்யவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**18—**

## சுற்றுலாத் தலம்

*__6829—திருமதி ம. சக்தி:__

*மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

*(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், சீர்காழி தொகுதிக்குட்பட்ட பகுதியில் வைத்தீஸ்வரன்கோவில் உள்ளது. நவக்கிரக ஸ்தலமான செவ்வாய்க்குரிய ஸ்தலமாக வைத்தீஸ்வரன்கோவில் கருதப்பட்டு வருகிறது. ஏற்கெனவே சுற்றுலாத் துறை சார்பாக ரூபாய் 6.50 இலட்சம் மதிப்பீட்டில் அருள்மிகு வைத்தீஸ்வரன் திருக்கோயில் பகுதியில் குளியலறை மற்றும் கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டில் உள்ளது. மேலும், தற்போது அந்தக் கோயில் பகுதியிலே சுற்றுலாப் பயணிகள் மற்றும் ஆன்மிகப் பயணிகளின் வசதிக்காக அந்தக் கோயிலில் உள்ள குளத்தைச் சுற்றி தடுப்பு வேலிகள், ஒளி அமைப்பு வசதிகள், 28,800 சதுர அடி பரப்பளவில் பக்தர்கள் தங்கும் கூடம், ஓய்வறைகள், கழிப்பறைகள், குளியலறை வசதிகள், வாகனம் நிறுத்துமிடம் ஆகிய அடிப்படை வசதிகளை மேற்கொள்ள ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் 3 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்ட மதிப்பீடும் பெறப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு விரைவாக அந்தப் பணிகளை எடுத்துச் செய்யும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவிப்பதோடு, கடந்த 2012–2013 ஆம் ஆண்டு நிதியொதுக்கீட்டிலே ஒன்பதாவது அறிவிப்பாக சீர்காழி பகுதியும் அந்த மெகா சுற்றுலாவிலே சேர்க்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

**திருமதி ம. சக்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணை இமை காப்பது போல் தமிழக மக்களை அனுதினமும் காத்துவரும் தாயுள்ளம் கொண்ட தரணிபோற்றும் தங்கத்தாரகை தமிழக முதலமைச்சர், நான் அனுதினமும் வணங்குகின்ற கடவுள், என் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித பொற்பாதங்களை வணங்கி, சோழர் காலத்தில் புலவர்கள் பாடிய 'தீராத நோயும் தீர்க்கவல்லோன்' என்று பெயர் பெற்ற ஊர் வைத்தீஸ்வரன்கோவில். இக்கோயிலுக்கு தமிழக முதலமைச்சர், தமிழக மக்களின் பசிப்பிணி மருத்துவராக வாழும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்து சுற்றுலாப் பயணிகளும் பயன்பெறும் வகையில், அடிப்படை வசதிகளை செய்து கொடுத்ததற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்கி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**19—**

## அடிப்படை வசதிகள்

*__5356—திரு. அ. சவுந்தரராசன்:__

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மாநகரப் போக்குவரத்துக் கழக பேருந்து நிலையங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யவும், பெண் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

*சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் 28 பேருந்து நிலையங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதில் 26 பேருந்து*

[2013 பிப்ரவரி 6

நிலையங்களில் பெண் பயணிகளுக்காக சுகாதார வளாக வசதி ஏற்கெனவே அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அய்யப்பன்தாங்கல், சுங்கச்சாவடி ஆகிய இரண்டு பேருந்து நிலையங்களில் பெண்களுக்கான சுகாதார வளாக வசதிகள் இந்த நிதியாண்டில் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, மேலும் 28 பேருந்து நிலையங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

*முற்பகல் 11–20*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு நன்றி. ஆனால், சென்னை நகரில் இப்போது திருவேற்காடு, அம்பத்தூர் இன்டஸ்டிரியல் எஸ்டேட், இரண்டு பேருந்து நிலையங்கள் தவிர மற்ற பகுதிகளில் உள்ள பேருந்து நிலையங்களில் குடிநீர் வசதி இல்லை. இன்னும் சொல்லப்போனால், ஓட்டுநர், நடத்துனர்களுக்குக்கூட இல்லை. கழிப்பறை வசதி சில இடங்களிலே ஏற்பாடு செய்யப்பட்டு, கட்டணக் கழிப்பிடம் என்று ஒப்பந்ததாரர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் எங்களால் நடத்தமுடியவில்லை என்று அவற்றை நடத்தாமல் இப்போது விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அநேகமாக அனைத்துப் பேருந்து நிலையங்களிலும் குறிப்பாகப் பெண்களுக்கு கழிப்பறை வசதி இல்லை. 50 இலட்சம் பேர் பயணம் செய்கிறார்கள். ஒரு நாளைக்கு 5 இலட்சம் பேர் பெண்கள் மட்டும் பேருந்து நிலையங்களுக்கு வந்து செல்கிறார்கள். மாற்றுத் திறனாளிகள் ஏராளமாக வருகிறார்கள். நான் எல்லா பேருந்து நிலையங்களையும் ஆய்வு செய்துவிட்டுத்தான் சொல்கிறேன். ஆகவே, விரைவாக அனைத்து இடங்களிலும் குறிப்பாக பெண்கள் பயன்படுத்துவதற்குண்டான கழிப்பறை ஏற்பாட்டையும், குடிநீர் ஏற்பாட்டையும் செய்ய அரசு முன்வருமா என்பதையும், அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



2013 பிப்ரவரி 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற 28 பேருந்து நிலையங்களில் 26 பேருந்து நிலையங்களில் ஏற்கெனவே பெண்களுக்கான சுகாதார வளாக வசதி ஏற்பாடுகள் செய்யப்பட்டு இப்போது அவை நடைமுறையில் இருக்கின்றன. எஞ்சி இருக்கின்ற இரண்டே இரண்டு இடங்கள், அய்யப்பன்தாங்கல் பேருந்து நிலையம், சுங்கச்சாவடி பேருந்து நிலையம் ஆகிய இரண்டு இடங்களில் மட்டும் பெண்களுக்கான சுகாதார வளாக வசதி இல்லை. அவற்றையும் இந்த ஆண்டு கட்டி முடிப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதற்குண்டான பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, குடிநீர் வசதி அனைத்துப் பேருந்து நிலையங்களிலும் அவர்களுக்குத் தேவையான அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றன. வேறு எங்கேனும் கூடுதலாக குடிநீர் வசதி தேவைப்படும் பட்சத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு அதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுத்து, பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் வசதிகளுக்குண்டான ஏற்பாடுகளையும் செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. என்னுடைய தொகுதியில் முல்லைநகர் பேருந்து நிலையம் ஒன்று உள்ளது. அது முழுக்க முழுக்க கைவிடப்பட்டதாக இருக்கிறது. சமூக விரோதிகளும் மற்றவர்களும் அவற்றை கழிப்பறையாகப் பயன்படுத்தி வருகிறார்கள். அதைச் சுற்றி காம்பவுண்ட் சுவர் போட்டு சுத்தம் செய்யவேண்டும். அப்படி சில பேருந்து நிலையங்கள் இருக்கின்றன. பேருந்து நிலையங்கள் அல்லாமல், சாலை ஓரங்களிலேயே பேருந்துகள் நிறுத்தப்படுகின்ற இடங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலேயும் கழிப்பறை வசதி அறவே இல்லாமல் இருக்கிறது. அங்கும் சிறிய

[2013 பிப்ரவரி 6

அளவிலே கழிப்பறை வசதிகளைச் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கேட்கின்றபோது ஓட்டுநர்களுக்குண்டான வசதிகளைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, சென்னை மாநகரில் இருக்கின்ற போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 18 பணிமனைகளில் இருக்கின்ற ஓட்டுநர்களுக்குண்டான ஓய்வறைகளை மேம்படுத்துவதற்கு ரூபாய் 6 இலட்சத்து 13 ஆயிரம் நிதியைக் கொடுத்து ஓட்டுநர்களுக்குண்டான ஓய்வு அறைகள் 15 பணிமனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக 115 பணிமனைகள். இதற்கு ரூபாய் 41 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து ஓய்வு அறைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

முந்தைய ஐந்தாண்டுக் காலம் சென்னை மாநகரில் இருக்கின்ற ஒட்டுமொத்தமாக பராமரிக்கக்கூடிய அந்தப் பணிமனைகளுடைய எண்ணிக்கை, புதியதாக தொடங்கப்பட்ட எண்ணிக்கை பூஜ்ஜியம். ஒரு புதிய பணிமனைகூட முந்தைய ஐந்தாண்டுக் கால ஆட்சியில் இருந்தவர்கள் தொடங்கவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேருந்துகளின் எண்ணிக்கைகளுக்கேற்ப, அதைப் பராமரிப்பதற்கு ஓட்டுநர்களுடைய வசதிகளுக்காக சாலை ஓரங்களில் பேருந்துகளை நிறுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு, புதியதாக சென்னை மாநகரில் மட்டும் 7 புதிய பணிமனைகளைத் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) உத்தரவிட்டு, டெண்டர் விடப்பட்டு, அதற்குண்டான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு அடிப்படை வசதிகளை சென்னை மாநகரைப் பொறுத்தவரை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். படிப்படியாக சென்னை மாநகரத்தினுடைய, அரசு போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்து இயக்கங்களின் எண்ணிக்கை உள்ளிட்ட அத்தனை வசதிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லி, பேருந்தை பயன்படுத்தக்கூடிய பொதுமக்களுடைய எண்ணிக்கை எந்த அளவுக்கு கணிசமாக உயர்ந்திருக்கிறது என்பதற்கு இரண்டு உதாரணங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்கிறேன். 1–2–2012 அன்று ஒருநாள் சராசரி வருவாய் ரூபாய் 16 கோடி 76 இலட்சம். அதுவே 1–2–2013 அன்று ஒருநாள் சராசரி வருவாய் ரூபாய் 19 கோடி 71 இலட்சம் இருக்கிறது. இது 17.55 சதவீதம் அளவுக்கு வருவாய் உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2–2–2012 அன்று ஒருநாள் வருவாய் 16.61 கோடி ரூபாய். 2–2–2013 அன்று ஒருநாள் சராசரி வருவாய் ரூபாய் 19.14 கோடி. 13.86 சதவீதம் அளவிற்கு பேருந்து இயக்கத்தினுடைய வருவாய் உயர்ந்திருக்கிறது. அது மக்களுடைய வசதிகளுக்குகேற்ப, பயணிகளின் எண்ணிக்கை கூடியதற்கேற்ப இந்த வருவாய் உயர்ந்திருக்கிறது. அனைத்து புதிய பணிமனைகளோடும் சேர்ந்து இன்னும் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். படிப்படியாக அந்தத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 பிப்ரவரி 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள்.

முற்பகல் 11–25

**திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் சிங்கம்புணரி பேரூராட்சியில் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் புதிய பணிமனை அமைப்பதற்கான அறிவிப்பு சட்டமன்றத்தில் அன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அதற்கான நிலம் கையகப்படுத்துகின்ற பணி நடைபெற்று வந்தது. ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, இப்பொழுது அந்தப் பணி தொடர்ந்து,

விரைந்து முடிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். விரைந்து அதைச் செய்து தருமாறும் தொகுதி மக்கள் சார்பாக கேட்டுக்கொள்வதோடு, பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பொதுவாக ** அதைப்போல, கேள்வி–பதில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெரியகருப்பன், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** இருங்கள் ஐயா, கேள்வி–பதிலுக்காகத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினருடைய துணைக் கேள்வி மட்டும் வைத்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடு) உறுப்பினர் பேசிய மற்றவை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) உட்காருங்கள் திரு. பெரியகருப்பன். இதையெல்லாம் என் அறையிலே வந்து கேளுங்கள். நீங்கள் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்கிறேன். இதை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், அவருடைய கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஐந்தாண்டுக் காலம் ஆட்சியிலிருந்த மைனாரிட்டி தி.மு.க. அரசில் புதிதாக தமிழகம் முழுவதும் ஏற்படுத்தப்பட்ட புதிய பணிமனைகளுடைய எண்ணிக்கை வெறும் பத்து பணிமனைகள்தான். பல்வேறு காலகட்டங்களிலே அப்பொழுது அமைச்சராக இருந்தவர்; கேள்வி நேரத்தின்போதும் சரி, மானியக் கோரிக்கையின்போதும் சரி, புதிய பணிமனைகள் என்று அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்பு வெறும் காகிதத்தோடு, பத்திரிகையினுடைய செய்தியாக, தலைப்புச் செய்தியாக மட்டுமே வந்ததே தவிர, அதற்குண்டான எந்த நடவடிக்கையும் அப்பொழுது ஆட்சியில் இருந்தவர்களால் செய்யப்படவில்லை. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின்மீது, அம்மா அவர்கள்மீது நம்பிக்கை வைத்து இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு போக்குவரத்துக் கழகத்தின் இயக்க பேருந்துகளுடைய எண்ணிக்கைகளுக்கேற்ப புதிய பணிமனைகள் தொடங்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் புதிதாக 7 பணிமனைகள், அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்திற்கு புதிதாக 7 பணிமனைகள், மற்ற போக்குவரத்துக் கழகங்களுக்குப் புதிதாக 25 புதிய பணிமனைகளைத் தொடங்குவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) நிதியைக் கொடுத்து உத்தரவிட்டு, நிலங்கள் எடுக்கப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, இந்தப் பணிகள் படிப்படியாக நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பணிமனை பணிகளுக்கு, பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருக்கைகளை ஒதுக்குவது, பேரவைத் தலைவருடைய முழு அதிகாரம். என்னுடைய உரிமை. (குறுக்கீடு) இல்லை, அதில் நீங்கள் தலையிட முடியாது. அதைப்பற்றி விவரம் வேண்டுமென்றால், என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள், சொல்கிறேன். ** திரு. பெரியகருப்பன், உட்காருங்கள்.

வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**20—**

**காலிப் பணியிடங்கள்**

***1116—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2013 பிப்ரவரி 6

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மற்றும் இராசா மிராசுதார் மருத்துவமனையிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியிலுள்ள 175 மருத்துவப் பணியிடங்களில் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெரியகருப்பன், உட்காருங்கள். இதை எனது அறையில் வந்து கேளுங்கள், நான் உங்களுக்குப் பதில் சொல்கிறேன். இதையெல்லாம் இந்த அவையிலே பேச முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) இந்த அவையிலே பேச முடியாது, உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அமைச்சராக இருந்தவர்; திட்டமிட்டு, இந்த அவையினுடைய நடவடிக்கைகளைக் குலைக்க வேண்டுமென்று, அவர் கருத்துகளை சொல்லிக்கொண்டிருக்கிறார். தயவு செய்து அதன்மீது பேரவைத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசியதில், தொடர்புடைய கேள்வியைத் தவிர, வேறெதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியிலுள்ள 175 மருத்துவப் பணியிடங்களில் 34 பணியிடங்களும், 44 இதர பணியாளர் பணியிடங்களில் 16 பணியிடங்களும் காலியாக உள்ளன. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துமனையில் உள்ள 36 மருத்துவர் பணியிடங்களில் 3 பணியிடங்களும், 156 செவிலியர் பணியிடங்களில் 6 பணியிடங்களும் மற்றும் 85 இதர பணியாளர் பணியிடங்களில் 33 பணியிடங்களும் காலியாக உள்ளன.



2013 பிப்ரவரி 6]

முற்பகல் 11–30

மேலும், அரசு இராசா மிராசுதார் மகப்பேறு மருத்துவமனையில் உள்ள 54 மருத்துவர் பணியிடங்களில் 2 பணியிடங்களும், 123 செவிலியர் பணியிடங்களில் 8 பணியிடங்களும் மற்றும் 240 இதர பணியாளர் பணியிடங்களில் 64 பணியிடங்களும் காலியாக உள்ளன. மேற்படி காலிப் பணியிடங்களை மருத்துவப் பணிகள் தேர்வாணையத்தின்மூலம் நிரப்பத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலைப் பார்க்கின்றபோது, குறிப்பாக, சுகாதாரப் பணியாளர்களுடைய எண்ணிக்கைதான் சற்றுக் குறைவாக இருக்கிறது என்று இதன்மூலம் புலப்படுகின்றது. எனவே தஞ்சை மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையிலே இந்த மூன்று மாவட்டங்களுக்கும் முக்கியமான reference centre–ஆக இருக்கக்கூடிய காரணத்தினாலே, வெகு விரைவில் அந்தப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பதவி ஏற்கும்போது தமிழக மருத்துவத் துறையில் கிட்டத்தட்ட 15,000 காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. இதனைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழகத்தில் மருத்துவப் பணியாளர் தேர்வாணையத்தை ஏற்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை உதவி மருத்துவர் 2,300 பேரும், மற்றப் பணியாளர் 4,500 பேரும் தேர்வு செய்து பணியமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது 2,151 மருத்துவப் பணியிடங்கள் காலியாகவுள்ளன. அனைத்துப் பணியிடங்களையும் உடனே நிரப்பும்படி மாண்புமிகு அம்மா அவர்கள்

[2013 பிப்ரவரி 6

ஆணையிட்டுள்ளார்கள். தற்போது தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, இராசா மிராசுதார் மருத்துவமனையைப் பொறுத்தவரையில் மருத்துவ செவிலியர் மற்றும் இதர பணியாளர்களுக்கான காலிப் பணியிடங்கள் குறைவாகவே உள்ளன. எனினும், இக்காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும். வருங்காலத்தில் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாநிலத்தில் உள்ள அனைத்து காலிப் பணியிடங்களும் நிரப்பப்பட்டு, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் காலிப் பணியிடங்களே இல்லை என்ற ஒரு நிலை ஏற்படுத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு திருத்தத்தைத் தெரிவிக்கிறார்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்குக் கொடுத்த பதிலில் ஒரு திருத்தத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக பதிவு செய்ய விரும்புகிறேன்.

சேலம் மாநகராட்சி திடக் கழிவு மேலாண்மையில் 2011–2012–இல் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் ரூபாய் 1 கோடி ஒதுக்கப்பட்டு, 9 Metric Ton எடை எடுக்கக்கூடிய 2 வாகனங்கள், Compactors Bin–100 எண்ணிக்கை, Push carts 50 ஆகவும், 2012–2013 ஆம் நிதியாண்டில் 5.40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் இரண்டு நிதியாண்டுகளிலும் சேலம் மாநகராட்சிக்கு மட்டும் 6 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு JCB–2, Compactor–6, Compactor Bins–200, Dumper Placer–6, Dumper Placer Bins–115, Tipper Lorries–10 ஆக இந்த திடக் கழிவு மேலாண்மை திட்ட பயன்பாட்டிற்காக வாகனங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2013 பிப்ரவரி 6]

## 2. அறிவிப்பு

### பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழு / ஆட்சிமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு (Syndicate) ஒரு சட்டமன்ற உறுப்பினரையும், சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு (Senate) ஆறு சட்டமன்ற உறுப்பினர்களையும், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு (Senate) நான்கு சட்டமன்ற உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்குமாறு அப்பல்கலைக்கழகங்களின் பதிவாளர்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

மேற்குறிப்பிட்ட மூன்று பல்கலைக்கழகங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பெறும் நாளிலிருந்து மூன்று ஆண்டு காலமாகும்.

தேர்ந்தெடுக்கப்பெற விரும்புகிற வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 7–2–2013 அன்று பிற்பகல் 1–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்புமனு படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வேட்புமனுக்கள் 7–2–2013 அன்று பிற்பகல் 3–00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 7–2–2013 அன்று மாலை 5–00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

## 3. அறிக்கை அளித்தல்

### சட்டவிதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல்.

[பேரவைத் தலைவர்] [2013 பிப்ரவரி 6

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன், சட்டவிதிகள் ஆய்வுக் குழுத் தலைவர் அவர்கள்.

*முற்பகல் 11–35*

**திரு. ஞா. செந்தமிழன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறியவர் தம் வாழ்வு வளம்பெற, தமிழகத்தில் யாரும் எதற்காகவும், எந்தச் சூழ்நிலையிலும் கை ஏந்தக்கூடாது, வறுமை முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் பணியாற்றி வரும் என்னுடைய அன்னையாய், ஆசானாய், இதய தெய்வமாய் விளங்குகின்ற கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் 2012–2013 ஆம் ஆண்டிற்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது (பதினான்காவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2013 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)*



2013 பிப்ரவரி 6] [பேரவைத் தலைவர்]

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

### (ஆ) தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா, முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.

**முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானம் தன் மேகச் சிறகை விரித்துப் பறக்க வட்டமிடுகிற வேளையில், பூமி தன் புன்னகையால் புலர்காலை விடுவிக்கின்ற பூபாளம் கடந்த நேரத்தில், வானம் முட்டி நிற்கிற கோபுரம், அதை தட்டிச் செல்கிற விண்மேகம், நம்மைத் தொட்டுச் செல்கிற காற்று, நம்மை பட்டுப் படர்ந்திருக்கும் வெளிச்சம், “கீ” “கீ” என்று பறவைகள் எழுப்பும் ஓசை என்று ஓர் இதமான சூழ்நிலையில், மகிழ்ச்சியும், ஆனந்தமும், செம்மையும், செழுமையும், உண்மையும், திண்மையும், நிறைந்ததாகக் கருதப்படுகிற வேளையில், வசந்தம் வீசும் ஒரு வசந்தகால தட்பவெட்ப நிலையில், திருவள்ளுவர் ஆண்டு, நந்தன வருடம், தைத் திங்கள் 19 ஆம் நாளில், பதினான்காவது சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது நடைபெறுகிற விவாதத்தில் கலந்துகொண்டு, கடமையாற்றுவதற்கு உயர்ந்ததொரு சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்திருக்கிற தமிழகத்தின் தன்னிகரில்லாத முதலமைச்சர், தன் நேர் இல்லாத தலைவர், மின்னலைக் கொப்பளித்து மின்சாரத்தைத் துப்புகிற ஆற்றல், நெருப்பைப் பிழிந்தெடுத்த அக்கினிக் குஞ்சு, கக்கும் எரிமலையின் கீற்றாய் வந்த வரலாறு, மின்னல், இடி இடித்து பாட்டில் நுழைத்த பாரதம், வாக்கில் தேயாத நிலா, வரலாற்றில் நிரந்தரமாக உலாவும் உலா, மின்னலுக்கு வெப்பத்தையும், கண்ணலுக்குச் சத்தத்தையும், கனலுக்கு முத்தத்தையும் தந்தவர் எங்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் ஊனில், உணர்வில், உதிரத்தில், நாடி நரம்பில் கடந்திட்ட உயிரணையத் தலைவி அம்மா அவர்களுக்கு, எனது நெஞ்சார்ந்த நன்றியறிதலை அடக்கத்துடனும், பணிவுடனும் முன்வைக்கிறேன்.



2013 பிப்ரவரி 6] [முனைவர் வைகைச்செல்வன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல’ என்று ஒரு குறளைப் பற்றி வள்ளுவப் பேராசான் பேசுவார். நிலத்தை வெட்டுபவர்களுக்கு அந்த நிலம் பொறுமையாக காத்தருளும் என்கிற அந்தக் கருத்தை ஒப்ப, தன்னை வளர்த்தெடுத்தவர்களே தடுமாறிப் போய், நிறம் மாறிப் போய் நிற்கின்ற இந்த வேளையில் நிமிடத்திற்கு நிமிடம் நிறம் மாறிக்கொண்டிருப்பவர்கள் மத்தியிலே உண்மையான உணர்வுகளைக் கொண்டு தமிழகத்தில் நல்லாட்சி செய்து கொண்டிருக்கிற ஒரு நயத்தகு இலக்கணத்தின் பண்பாடாக விளங்குகிறவர்தான் எம்ஜி.ஆரின் வாரிசாக விளங்குகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையிலே, மிகத் தெளிவாகவும், அழகாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவற்றில், தளர்வறியாத துணிவும், அசையாத உறுதியும், திடமான முடிவும், தீர்க்கமான நடவடிக்கையும், தன்னிகரில்லா மக்கள் தலைமைப் பண்பும், ஏழை எளியோரின்மீது கொண்டுள்ள எல்லையில்லா பரிவுக்கும் எடுத்துக்காட்டாக திகழ்கிற மதிநுட்பத்திற்கும், வினைத் திட்பத்திற்கும் சாட்சியாக விளங்குகிறவர்தான் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மிகத் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையிலே நாட்டில் முதல் முறையாக காவல் துறையினருக்காக மூன்று சலுகைகள், அங்காடிகள் தந்திருக்கிற ஒரே அரசாங்கம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாங்கம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலாக வீட்டு வசதிக்காக 472.50 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) 36,000 காவலர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மற்றும் சிறைத் துறைப் பணியாளர்களுக்காக சொந்த வீடு கட்டித்தரும்பொருட்டு, ‘உங்கள் சொந்த இல்லம்’ தந்திருக்கிற ஒரு மாதரசிதான் தமிழகத்தினுடைய வரலாற்றுச் சிறப்பு மிகுந்த முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[முனைவர் வைகைச்செல்வன்] [2013 பிப்ரவரி 6

எல்லோர் இல்லத்தையும் தங்கள் இல்லமாக்கிக் கொண்டவர்கள்தான் கடந்தகால ஆட்சியிலே இருந்தவர்கள். 1 முதல் 12 குறுக்குத் தெருக்களையும் வைத்துக்கொண்டு கோபாலபுரத்தில் வாழும் குடியிருப்போர் சங்கத்தை வைத்திருந்தவர்தான் கடந்த ஆட்சியாளர்கள். ஆனால், காவலர்களுக்கு மாத்திரமல்ல, அனைத்து மக்களுக்கும் நன்மை செய்கிற ஒரே ஒரு நல்லாட்சியாக, சிறந்த ஆட்சியாக, மனிதாபிமானமிக்க ஆட்சியாக, மானிடப்பற்றுள்ள ஆட்சியாக, கருணை மிக்க ஆட்சியாக, காருண்யம் மிக்கதொரு ஆட்சியாக செய்துகொண்டிருப்பவர்தான் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவுடனும் அடக்கத்துடனும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆளுநர் உரையிலே, சித்திரை தமிழ்ப் புத்தாண்டை மீண்டும் கொண்டு வந்திருக்கிற தமிழகத்தினுடைய தன்னிகரில்லாத முதலமைச்சரை ஒட்டுமொத்த உலகத் தமிழ் இனமே கொண்டாடி மகிழ்கிறது. கடந்த கால ஆட்சியாளர்கள், தமிழ்ப் புத்தாண்டை தைத் திங்கள் என்று குறித்தார்கள். தமிழ்த் தாய்க்கு 12 குழந்தைகள். முதல் குழந்தை சித்திரை, 10–வது குழந்தை தை. முதல் குழந்தை ‘சித்திரை’ இருக்க, 10–வது குழந்தை ‘தை’–யைக் கொண்டுபோய் முதல் குழந்தை என்று இனிமேல் ‘தை’–யை சொல்ல வேண்டுமென்று சொன்னால் அதை யார் ஏற்றுக்கொள்வார்கள் என்பதுதான் உலகம் முழுவதும் எழுப்பப்படுகிற கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் இருக்க, தம்பிக்கு மகுடம் சூட்டுவதற்கு நீங்கள் தயாரா என்று கேட்பதைப் போலத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கேள்வி இருக்கிறது. பாவம், அண்ணனுக்கும் விஷயம் இல்லை, தம்பிக்கும் விஷயம் இல்லை. எட்டாவது படித்துக்கொண்டிருக்கிறபோது ஆசிரியர் கணக்குப்பாடப் புத்தகத்தை வாங்கி வரச் சொன்னாராம். கடைக்குப்போன அண்ணனோ எட்டாவது வகுப்பு பாடப் புத்தகம், கணக்குப் புத்தகம் இல்லை என்பதற்காக நான்காவது வகுப்பு 2 புத்தகம் வாங்கி வந்ததாக சற்று முன்னர் கிடைத்த செய்திகள் சொல்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட அறிவாளிகள் எல்லாம் கடந்த காலத்தில் செய்திருக்கிற தவறுகளை மிகச் சரியாக திருத்தி, மானிட பற்றோடு தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒரு நன்மை செய்தவர்தான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



2013 பிப்ரவரி 6] [முனைவர் வைகைச்செல்வன்]

அவற்றோடு மாத்திரம் அல்ல, பல்வேறுபட்ட விருதுகள், தமிழ்த் தாய் விருது என்றும், கபிலர் விருது என்றும், உ.வே.சா. விருது என்றும், ஔவையார் விருது என்றும் பல்வேறுபட்ட விருதுகளை சரியானவர்களுக்கு, தகுதியுள்ளவர்களுக்குத்தான் தர வேண்டும் என்பதற்காக பல்வேறு விருதுகளை உருவாக்கி இருக்கிற தமிழ்த்தாயினுடைய மொத்த வடிவமாக விளங்குபவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கெங்குக் காணினும் சக்தியடா, தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா! அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம் அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா! ஒரு
கங்குலில் ஏழு முகிலினமும் வந்து
கர்ச்சனை செய்வதுகண்டதுண்டோ? எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம் அவன்
மந்த நகையங்கு மின்னுதடா!
காளை ஒருவன் கவிச்சுவையைக் கரை
காண நினைத்த முழுநினைப்பில் அன்னை
தோளசைத்தங்கு நடம்புரிவாள் அவன்
தொல்லறிவாளர் திறம் பெறுவான் ஒரு
வாளைச் சுழற்று விசையினிலே இந்த
வையமுழுவதும் துண்டு செய்வேன் என
நீள இடையின்றி நீ நினைத்தால் அம்மை
நேர்படுவாள் உன்றன் தோளினிலே!

என்று பாவேந்தன் சிலாகிப்பானே, அதைப்போல ஒரு பாவேந்தனைப்போல, ஒரு பாரதியைப் போல, ஒரு தமிழ்த் தாயினுடைய வடிவமாகத் திகழ்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் தமிழனுடைய உண்மையான நுண்மான் நுழைபுலம் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ வசனம் எழுதுகிறவர்கள், ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காக ஒட்டிக்கொண்டவர்கள் எல்லாம் தமிழுக்குப் பிறவியை எடுத்ததைப்போல சொல்லிக்கொண்டிருக்கின்றபோது, ஆழங்கால் கண்டவர், தமிழில் எந்த இடத்தில் comma போடவேண்டும், எந்த இடத்தில் full stop வைக்க வேண்டும், எந்தச் சொற்றொடரை எந்த நேரத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதை மிக அழகாக

உணர்ந்தவர் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழ் மொழியில் மாத்திரம் அல்ல, 8 மொழிகளில் விற்பன்னர் அவர். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் ஆங்கிலத்தில் பார்த்தீர்கள் என்று சொன்னால், நாம் சில பேரைக் கூப்பிடுகிறபோது சொல்வோம் – What is your good name please, என்று கேட்போம். What is your good name please என்று சொன்னால், உங்கள் நல்ல பெயரைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறோம் என்று பொருள். நல்ல பெயரைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறோம் என்று சொன்னால், ஏற்கெனவே கெட்ட பெயர் இருக்கின்றது என்று உனக்குத் தெரியுமா என்று அர்த்தம். ஆக, name என்று சொன்னால் name தான். இதுதான் நுட்பம். சில பேர் கேட்கலாம். What is your telephone number, please என்று கேட்டால், my telephone No. is two, four, nine, eight, double seven, double zero என்று சொல்வார்கள். Double seven, double zero, triple two, triple three –ஆங்கிலத்திலே இப்படி ஒரு வார்த்தை இல்லை. It says only two, two, three, three, zero, zero என்று நுட்பத்தை இப்படித்தான் கற்க வேண்டும், இப்படித்தான் இருக்கிறது என்பதை அறிந்த பிதாமகனாக வாழ்கின்றவர்தான் தமிழகத்தின் தன்னிகரில்லாத முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

விருதுகளையெல்லாம் கடந்த காலத்திலே, ஒன்று அவர்கள் வைத்துக்கொள்வார்கள், இல்லையென்று சொன்னால் அவர்களுக்குத் துதி பாடுகின்ற அடிவருடிகளெல்லாம் வைத்துக்கொள்வார்கள். தகுதி இருக்கிறதா, தகுதி இல்லையா, என்றெல்லாம் பார்ப்பதில்லை. தன்னைச் சுற்றி நிற்கின்றவர்களுக்குத்தான் அந்த விருது போகவேண்டுமென்ற அடிப்படைக் கோட்பாட்டு விதிகளை வைத்திருந்தவர்கள்தான் கடந்த காலத்தில் இருந்த ஆட்சியாளர்கள். ஆனால் இப்போது அப்படியல்ல. பல்வேறுபட்ட விருதுகளை உருவாக்கி, அந்த விருதுகளுக்குச் சரியானவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய மதிநுட்பம் படைத்தவர்தான், வினைத்திட்பம் படைத்தவர்தான் நம்முடைய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், அப்படிப்பட்ட உணர்வுகளை ஏற்படுத்தி, அப்படிப்பட்ட விருதுகளை ஏற்படுத்தி,



தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒரு மகத்தான பணியை ஆற்றி வருவதோடு மாத்திரமல்லாமல், வீரநங்கை வேலுநாச்சியாருக்கு, தீரன் சின்னமலைக்கு, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருக்கு, சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினத்திற்கு, தியாகி சங்கரலிங்கனாருக்கு நினைவிடம் அமைத்திருக்கின்ற மகத்தான மானுடப் பற்று கொண்டிருக்கிற தலைவர்தான் நம்முடைய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கர்னல் பென்னிகுவிக்கிற்கு சிலையுடன் கூடிய மணிமண்டபம், நன்றிக்குரியவர்கள் தமிழர்கள். சாதாரணமாக ஒரு தேநீர் வாங்கிக் கொடுத்தால்கூட நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு வீட்டிலே சாப்பிட்டுவிட்டால்கூட நாம் சொல்வோம், அவர் வீட்டில் கையை நனைத்துவிட்டோம், அவருக்கு ஒரு போதும் துரோகம் இழைக்கக் கூடாது என்று கருதுகின்றவர்கள்தான் தமிழர்கள். அப்படி நன்றிக்கு இலக்கணமாக, நயத்தகு பண்பாடோடு விளங்குகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், பென்னிகுவிக்கிற்கு ஒரு சிலை வடித்ததோடு மாத்திரமல்லாமல், தஞ்சைப் பெருவளத்தான் கரிகால் சோழனுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மணிமண்டபம் கட்ட வேண்டுமென்ற ஒரு பிரகடனத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால், நன்றிக்குரியவர் அவர்கள்.

நான் தஞ்சையில் பிறந்தவன், தஞ்சைப் பெருவளத்தானுக்கு சொந்தக்காரர் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள் கடந்த காலத்தில், காவிரிக்கு என்ன செய்தார்கள்? வேருக்கு வெந்நீரும், விவசாயிக்குக் கண்ணீரும் தந்ததுதான் மிச்சம். கரிகாலனுக்கு சிலை வைப்பதைவிட தனக்குச் சிலை வைத்தால் எப்படி நன்றாக இருக்கும் என்று யோசித்துப் பார்ப்பவர்கள் மத்தியிலே, கரிகாலனுக்குச் சிலை வைக்கின்ற ஒரு ஆற்றலை, ஒரு மதிநுட்பத்தைப் படைத்து (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்த உலகத் தமிழினத்திற்கு இப்படி ஒருவன் வாழ்ந்திருக்கிறான் என்ற வரலாற்றை மீண்டும் புடம்போட வைத்திருக்கிற ஆற்றல் படைத்த தலைவர்தான் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதோடு மாத்திரம் அல்ல, மதுரையில் உள்ள உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு 100 கோடி ரூபாய், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு 11.84 கோடி ரூபாய், தரமணியில் உள்ள

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 3.23 கோடி ரூபாய், சரஸ்வதி மகால் நூலகத்திற்கு பராமரிப்பு உதவித்தொகை 40 இலட்சம் ரூபாயாக இருந்ததை 75 இலட்சம் ரூபாயாக உயர்த்தி அதை உலகளாவச் செய்ய வேண்டுமென்கிற ஒரு பிரகடனமும் இன்று ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்து தமிழுக்குத் தொண்டு செய்யும் தமிழ்த் தாயாக புரட்சித் தலைவி அம்மா அவர்களை ஒட்டுமொத்த உலகத் தமிழினமும் பார்க்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கதிர் வெடித்து பிளம்பு பல, கடல் கொதித்துச் சூடாற்ற, முதுமைமிகு நிலப் பரப்பின் முதற் பரப்பு தோன்றிவிட, நதி வருமுன், மணல் தருமுன், நலம் வளர்த்த தமிழன்னையாய் வாழுகின்ற தமிழன்னை, பூ மலர்ந்த நேரத்தினை வண்டறியும், புலதலர்ந்த நேரத்தினை புல் அறியும், சேய் பிறந்த நேரத்தினை தாய் அறிவாள், செந்தமிழே, உன் பிறப்பை யார் அறிவார் என்று கவிமார்கள் கேட்பார்களே, அப்படிப்பட்ட அந்தத் தமிழுக்கு தொண்டூழியம் செய்கிற, தமிழைப் பெருமைப்படுத்துகிற, ஆற்றல் கொண்டிருக்கிற ஒரு தமிழ்த்தாயின் வடிவமாக, ஒட்டுமொத்தத் தமிழினமுமே ஏற்றுக் கொள்கிற உலகத் தமிழினத்தின் தலைவியாய் விளங்குகிறவர்தான் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட அம்மா அவர்களின் ஆட்சியிலே பல்வேறுபட்ட திட்டங்கள் இன்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

கடந்த காலத்திலே செம்மொழி மாநாடு என்று கோயம்புத்தூரில் கொடீசியா மகாலில் ரூ.500 கோடிகளை கொட்டிக் கவிழ்த்துவிட்டு, கோடானு கோடிகளைக் கொட்டி ஈழத்தின் படுகொலையை மறைக்கப் பார்த்த ஒரு நாடகத்தைத்தான் அம்பலப்படுத்தினார்களே தவிர, தமிழுக்கு உண்மையான ஒரு சேவையை அவர்கள் செய்யவில்லை. தாத்தாவிற்கு கவியரங்கம், பேரனுக்கு பேச்சரங்கம், பேத்திக்கு வீணை அரங்கம், அண்ணனுக்கு கருத்தரங்கம், (மேசையைத் தட்டும் ஒலி) தம்பிக்கு பவுடர் அரங்கம் (மேசையைத் தட்டும் ஒலி) தங்கைக்கு இன்னொரு அரங்கம், 'வாழ்க செம்மொழி மாநாடு, வளர்க அவர்களின் தமிழ்த் தொண்டு' என்றுதான் தமிழறிஞர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். இலங்கையில் நடைபெற்றிருக்கின்ற மனித உரிமை மீறல்களுக்கு, அவர்கள் ஆட்சியில் இருந்தபோது அந்த மீறல்களைத் தடுத்தார்களா? படுகொலை நிகழ்ந்தபோது அதைப்பற்றி ஏதாவது





பேசினார்களா? கடிதம் எழுதினார். (குறுக்கீடுகள்) காலை உணவுக்கும், மாலை உணவுக்கும் . . . (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் யாரையும் குறிப்பிடாமல்தான் பேசுகிறார். (குறுக்கீடுகள்) அவர் யாரையும் குறிப்பிடாமல்தான், அவர் பேசுகிறார். அவர் பெயரைக் குறிப்பிடாமல்தான் பேசுகிறார். நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) அவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் objection சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. (குறுக்கீடுகள்) அவர் யார் பெயரையும் குறிப்பிடாமல்தான் பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் யார் பெயரையும் குறிப்பிடாமல், அழகு தமிழில் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் ஏன் அதில் குறுக்கிடுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) குறுக்கிடாதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் யார் பெயரையும் குறிப்பிடவில்லை. (குறுக்கீடுகள்) அவர் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. தவறான பேச்சும் பேசவில்லை. (குறுக்கீடுகள்) அவர் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் அனுமதியில்லாமல் இதுமாதிரி பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) நீங்கள் அவரை பேச விடுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கும்போது நீங்கள் உட்கார வேண்டும், (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் வைகைச்செல்வன், பேசுங்கள்.

**முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடீசியா மகாலில் நடந்த கொடுமையான காட்சிகளை இன்னும் புள்ளிவிவரங்களோடு எடுத்துவைத்தால் (குறுக்கீடுகள்) வீணை அரங்கம் நடந்ததா, இல்லையா என்பது அவர்கள் மனசாட்சிக்கே தெரியும். (குறுக்கீடுகள்) ஆக, . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் கொறடா, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். கொறடா, நீங்கள்

*பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எழுந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் உட்காரட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதில்* objection *என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்)* Point of order *அதிலே என்ன இருக்கிறது? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) என்ன* Point of order*? (குறுக்கீடுகள்) யார் கேட்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) கொறடா நீங்கள்தானே? நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்) யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) கொறடா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) யார்? (குறுக்கீடுகள்) அது எப்படி? (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர்* point of order *கேட்கிறார். இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்துகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். இதிலே* point of order *ஏதும் இருக்க வாய்ப்பே இல்லை. (குறுக்கீடுகள்)* Point of order *என்று திசை திருப்ப முயற்சி செய்கிறார்கள். (குறுக்கீடுகள்) நடந்தவற்றைச் சொல்லிக்கொண்டிருக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். (குறுக்கீடுகள்) அதை அமைதியாகக் கேட்கும்படி கேட்டுக்கொள்கிறேன். வேறு வழியே கிடையாது. (குறுக்கீடுகள்) அவர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எல்லோரும் உட்காருங்கள். திரு. சக்கரபாணி, இதிலே ஒன்றுமே இல்லை. அவர் அமைதியாகப் பேசிக்கொண்டிருக்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவருடைய கருத்தை அவர் சொல்கிறார். (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நீங்கள் இதுமாதிரி எழுந்து பேசி இடையூறு செய்வது நன்றாக இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இதற்கு மேலும் நான் பொறுமையாக இருக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதற்கு மேலும் நான் பொறுமையாக இருக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முனைவர் வைகைச்செல்வன், நீங்கள் பேசி முடியுங்கள் அமைதியாக.*

**முனைவர் வைகைச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்த பாவத்திற்கு தற்போது டெசோ என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எப்போதுமே திருடர்கள்,*





*'திருடர்கள் ஜாக்கிரதை' என்கிற போர்டின் முன்னால்தான் இருப்பார்கள். (குறுக்கீடுகள்) ஆக, இவர் தன்னுடைய பாக்கெட்டில் இருக்கின்ற பொருளை . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான கருத்தை—டெசோ மாநாடு என்று சொல்லி, திருடர்கள் என்று சொல்ல வருகிறார். அதற்குப் பின்பு அதற்கான காரண காரியத்தைச் சொன்னால்தானே புரியும், யார் திருடர் என்று. சொல்வதற்கு முன்னாலே எழுந்து நின்றால் இவர்கள் உண்மையாகவே திருடர்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *உட்காருங்கள். இதுமாதிரி* disturb *செய்தால் எப்படி? (குறுக்கீடுகள்) நான் அவையை எப்படி நடத்துவது? (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, உட்காருங்கள். நீங்கள் எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்கார்ந்துகொண்டு, பேசுவதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*முற்பகல் 11–55*

**முனைவர் வைகைச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலை உணவுக்கும், மதிய உணவுக்கும் இடைப்பட்டதுதான் உண்ணாவிரதம் என்று சொல்கிற ஒரு கோட்பாட்டைக் கண்டறிந்தவர்கள் அவர்கள். அவற்றோடு மாத்திரமல்லாமல் மகிந்திர ராஜபக்ஷே டெல்லிக்கு வருகிறபோது கருப்புச் சட்டையை அணிவோம் என்று தற்போது கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். யாருக்குத் தேவை இந்த நாடகம்? இது நாடகம் என்பது முன்னரே அறிந்துதான், தமிழ் இனமும், ஒட்டுமொத்த உலகத் தமிழகமும் உங்களை ஒதுக்கி வைத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2011 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8 ஆம் நாள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டுமென்று இந்த வரலாற்றுச் சிறப்புமிகுந்த சட்டமன்றத்தில் நிறைவேற்றித் தந்தவர்தான் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய தன்னிகரில்லாத முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். நீங்கள் 5 ஆண்டுக் காலம் முதலமைச்சராக கடந்த முறை பணியாற்றினீர்கள். மத்திய அரசின் செல்வாக்கை நீங்கள் பெற்றிருந்தீர்கள். ஆனை, சேனை, ஆள், அம்பு, கோட்டை கொத்தளம் எல்லாம் உங்கள் கட்டுப்பாட்டிலே இருந்தது. எல்லா அதிகாரமும் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறபோது, கூப்பிடு தூரத்தில் இருக்கிற தமிழனுடைய உயிரைக் காப்பாற்றத் தவறிய நீங்களா தமிழன் என்று சொல்லிக் கொள்கிறீர்கள். வெட்கமாக இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) வேதனையாக இல்லையா? இப்பொழுதெல்லாம் நீங்கள் நாடகம் நடத்திக் கொண்டிருப்பதுதானே டெசோவைப் புலப்படுத்திக் காட்டுகிறது.

பாவம் செய்தால் கோயிலுக்குப் போக வேண்டுமென்று சொல்வார்கள். ஒரு பழமொழிகூட உண்டு. ஓர் ஊரிலே பாவம் செய்துவிட்டால் கோயிலுக்குச் செல்ல வேண்டுமென்று சொல்வார்கள். கோயிலே இல்லாத ஊரிலே ஒருவன் பாவம் செய்துவிட்டால் எங்கே போகவேண்டும் என்று சொன்னால், அவன் வாரணாசிக்கு அதாவது காசிக்கு போகவேண்டும் என்று சொல்வார்கள். வாரணாசியிலே ஒருவர் பாவம் செய்துவிட்டால் எங்கே போவது என்று கேட்டால், அவர் கும்பகோணத்திற்கு வரவேண்டுமாம். கும்பகோணத்திற்கு வந்தால் பாவத்திற்கு விமோசனம் கிடைத்துவிடும். சரி, கும்பகோணத்தில் இருக்கிறவர்கள் பாவம் செய்தால் அவர்கள் எங்கே போவார்கள் என்று கேட்டால், அவர்கள் கும்பகோணத்திலே இருந்தாலே போதும் என்று சொல்கிறது ஒரு சுலோகம்.

> அந்நிய ஷேத்ரே கிருதம் பாவம், புண்ணிய ஷேத்ரே விநியத்ரி;
> புண்ணிய ஷேத்ரே கிருதம் பாவம் வாரணாஸ்யாம் விநியத்ரி;
> வாரணாஸ்யாம் கிருதம் பாவம் கும்பகோணே விநியத்ரி,
> கும்பகோணே கிருதம் பாவம், கும்பகோணே விநியத்ரி

என்று ஒரு சமஸ்கிருத சுலோகம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)





ஆக, செய்த பாவத்தைத் தொலைப்பதற்கு இவர்கள் தேடுகிற இடம்தான் டெசோ. ஆக, பாவம் செய்தது உண்மை. தமிழர்களைக் கொன்று குவிப்பதற்கு காரணமாக இருந்தவர்களுக்கு பக்க பலமாக, பக்க வாத்தியம் வாசித்தவர்கள்தான் இவர்கள் என்பதை இந்த மன்றத்திலே நான் பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். ஆனால், தமிழர்களுக்கு ஒரு பாதுகாப்பு வேண்டும்; அவர்களுக்கு ஒரு விடுதலை வேண்டும்; அவர்களுக்கு ஒரு விடியல் வேண்டும் என்பதற்காக, அல்லும் பகலும் உழைத்து, 2011 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8 ஆம் நாளில் இந்த பேரவையில் வரலாற்றுச் சிறப்புமிகுந்த தீர்மானத்தை நிறைவேற்றி மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால் இவர்தான் உண்மையான தமிழினத்தின் தலைவர். அவர்தான் நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவற்றோடு மாத்திரமல்ல, இத்தகைய ஆற்றலும், திறமையும் பெற்றிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்லிக்கு செல்கிறார்கள். டெல்லிக்கு சென்றால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற முதல்வர்கள் அத்தனை பேரும் மாநாட்டில் அமர்ந்திருக்கிறார்கள். 10 நிமிடங்கள்தான் உங்களுக்கு ஒதுக்குவோம் என்று சொல்லி 10 நிமிடத்தில் மணியடித்து உட்கார வைக்கிறார்களே, கோவாவிற்கு 10 நிமிடம், தமிழ்நாட்டிற்கு 10 நிமிடம் என்று பாரபட்சம் பார்க்கவில்லை என்று சொல்கிறார்களே, கோவாவிற்கும் 10 நிமிடம், தமிழ்நாட்டிற்கும் 10 நிமிடம். இது ஏற்றுக்கொள்கிற கருத்தா? அஸ்ஸாமுக்கும் 10 நிமிடம், தமிழ்நாட்டிற்கும் 10 நிமிடம் என்பது ஏற்றுக்கொள்கிற கருத்தா? திரிபுராவும், தமிழ்நாடும் ஒன்றா? அஸ்ஸாமும், தமிழ்நாடும் ஒன்றா? பரப்பளவில் விரிந்து பரந்து கிடக்கிற தமிழ்நாட்டினுடைய எல்லைப் பகுதிகளில் 40 நாடாளுமன்றத் தொகுதிகளை தீர்மானித்து, இந்தியாவின் தலையெழுத்தை நிர்மாணிக்கிற சக்தி படைத்தவராக தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபோது (மேசையைத் தட்டும் ஒலி) யாருக்கு நீங்கள் மணி அடிக்கிறீர்கள், வெகுவிரைவிலே உங்களை வீட்டிற்கு அனுப்புவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். அவர் பேசி முடித்துவிடட்டும். பிறகு நீங்கள் பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடித்துவிடட்டும், உட்காருங்கள். பிறகு நீங்கள் பேசலாம்.*

**முனைவர் வைகைச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை உச்ச நீதிமன்றம் சொன்னால் கர்நாடகம் மறுத்த நிலையில் மத்திய அரசு கையில் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். முல்லைப் பெரியாறு அணை வலுவிழந்து போய்விட்டது என்று சொல்கிறார்கள். வலுவிழந்து இருக்கிறதா, இல்லையா என்று தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு நீதிபதி ஆனந்த் தலைமையில் கூட்டப்பட்டு இருக்கிற குழுவால் முடிவு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நீதிபதி ஆனந்த் குழு பார்வையிட்டது. அணை வலுவாக இருக்கிறது என்று சொன்னது. ஆனால், மத்திய அரசுதான் வலுவில்லாமல் இருக்கிறது. அதற்கு ஒரு தீர்வை அவர்களால் எட்டிப்பிடிக்க முடியவில்லை.*

*அரசு கேபிள் டி.வி–யை டிஜிட்டல்மயப்படுத்த வேண்டுமென்று தமிழக முதலமைச்சர், தலைமை அமைச்சருக்கு கடிதம் எழுதினார். இதுவரை பதில் இல்லை என்கிற நிலைமையில் இருக்கிறபோது இப்படிப்பட்ட தொடர் துரோகச் செயலுக்கு தமிழக மக்கள் மாத்திரமல்ல இந்திய மக்களே பதில் அளிக்கிற காலம் வெகு விரைவில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

நண்பகல் *12–00*

*இன்றைய யுத்தப் போராட்டம்–காவிரி ஆணையத்தின் இறுதி ஆணையை அரசிதழில் வெளியிடவேண்டும் என்பதற்காக யுத்தப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார். இந்தியாவிலேயே யாரும் துணிய முடியாத போராட்டம் ஒன்றை நடத்துகிற ஆற்றல் படைத்தவராக புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்திய மக்கள் பார்க்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*காலம் ஒரு வெற்றியாளரை எவ்வாறு தீர்மானிக்கிறது என்று சொன்னால், தொடர்ந்து வெற்றி பெற்றவர்களை அல்ல; தோல்வியடைந்து, அத்தோல்வியிலிருந்து மீண்டு எழுபவர்களையே காலம் வெற்றியாளர் என்று தீர்மானிக்கிறது. அப்படிப்பட்ட வெற்றியாளராகத்தான் தமிழக முதலமைச்சரை இந்தியாவில் இருக்கிற ஒட்டுமொத்த மக்கள் பார்க்கிறார்கள்.*



2013 பிப்ரவரி 6] [முனைவர் வைகைச்செல்வன்]

*இந்தியா ஒரு வல்லரசு நாடாக மலரவேண்டுமா, இந்தியா ஒரு மகத்தான கனவு காணவேண்டுமா, அத்தகைய கனவிற்கும் சாத்தியமாக இருக்கிற, சத்தியமாக இருக்கக்கூடியவர் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் என்பதை இன்று இந்திய மக்கள் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டின் வரைபடமாக இருக்கிறவர், நாளை இந்தியாவின் வரைபடமாக மாறப்போகிறார் என்பதுதான் சத்தியத்தின் சாட்சியாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*அதோடு மாத்திரமல்ல; நமது ஆளுநர் உரையிலே பல்வேறு சிறப்பான திட்டங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இன்று ஏற்பட்டிருக்கிற மின் தட்டுப்பாட்டிற்கு உறுதியான நடவடிக்கைகள் மூலமும், பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மூலமும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மகத்தான வரலாற்றின் பாதையை நோக்கி தமிழகத்தை இட்டுச்செல்கிறது.*

*பொங்கல் பண்டிகை மலர்ந்திருக்கிற வேளையிலே, ஏழையெளிய தாய்மார்கள் அத்தனை பேருக்கும், 1.84 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கும், ரூ.300 கோடி செலவில் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, ரூ.100 ரொக்கம் தந்திருக்கிற இந்தியாவிலே ஒரு அரசாங்கம் இருக்கிறது, ஒரு மாநிலம் இருக்கிறது, ஒரு முதலமைச்சர் இருக்கிறார் என்று சொன்னால், அது தமிழ்நாடுதான், அது தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)*

*தமிழக முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் நோய்வாய்ப்பட்டு கடல் கடந்து புரூக்ளின் மருத்துவமனையிலே சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிற தருவாயிலே இருந்தபொழுது அவரால் வாய் பேச முடியாத நிலைமை, சுய நினைவை இழந்திருந்த தருணம். அப்பொழுது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் எதையோ பேச நினைக்கிறார், என்ன பேச வருகிறார் என்று புரியவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இரண்டு மூன்று நாட்கள் போராடியபிறகு, இதைத்தான் அவர் சொல்ல வருகிறார் என்று மருத்துவர்கள் குறிப்பறிந்து குறித்து, இதைத்தான் நீங்கள் சொல்ல வருகிறீர்களா என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களிடத்திலே கேட்டபொழுது, குற்றால அருவியிலிருந்து எப்படி தண்ணீர் வருமோ, அதுபோல் அவர் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது, 'ஆமாம், ஆமாம்' என்று தலையசைத்தார். அவர்*

என்ன சொன்னார் தெரியுமா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ மைல்கள் கடல் கடந்திருந்த நிலையிலும்கூட, சுய நினைவற்ற நிலையிலும்கூட தமிழகத்திலே தைத் திங்கள் வரவிருக்கிறது, ஏழையெளிய மக்களுக்கு இலவச வேட்டியும், சேலையையும் தருவதற்கு மறந்துவிடாதீர்கள் என்று சொன்ன மானிடப் பற்றுள்ள தலைவர்தான் தமிழகத்தினுடைய முதலமைச்சராகயிருந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் என்ன பொருளாதார மேதையா? அடுத்தவருடைய பசியை அறிந்த தலைவர் என்கிற காரணத்தினால்தான், அடுத்தவரின் துயரை அறிந்த தலைவராக இருந்த காரணத்தினால்தான், இன்று வாழும், எம்.ஜி.ஆர்.—ஆக விளங்குகிற புரட்சித் தலைவி அம்மா அவர்களும் அத்தகைய ஒரு மகத்தான பணியைச் செய்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற உறுப்பினர்கள் ஆங்காங்கே பச்சரிசியையும், சர்க்கரையையும், 100 ரூபாயையும் கொடுக்கின்றபோது அந்த ஏழையெளிய மக்கள் எத்தனை ஆனந்தமடைகிறார்கள், மகிழ்ச்சியடைகிறார்கள், சந்தோஷப்படுகிறார்கள் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மனிதநேயத்திற்கு சாட்சி.

ஒருவர் சதி செய்து தலைவர் ஆகலாம், இன்னொரு சதியால் அவர் வீழ்த்தியடிக்கப்படுவார்; சூழ்ச்சி செய்து ஒருவர் தலைவராகலாம் அல்லது பெரிய ஆள் ஆகலாம், இன்னொரு சூழ்ச்சியால் அவர் வீழ்த்தியடிக்கப்படுவார். அன்பு செய்து ஒருவர் உயர்ந்தால், இன்னொரு அன்பால்தான், அவரை வீழ்த்தியடிக்க முடியாத இரட்டிப்பு அன்பாக வளருமே தவிர எத்தகைய துரோகச் செயலும் அவரை வீழ்த்தியடிக்க முடியாது. அத்தகைய ஆற்றலும், இமய மனம்போல் உயர்ந்தும், வானமாய் நிமிர்ந்து நிற்கிற ஆற்றல் படைத்த தலைவர்தான் நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் பல்நோக்கு மருத்துவமனை அமைவதை எதிர்த்து உயர் நீதிமன்றம் சென்றார்கள். உயர் நீதிமன்றம் நமக்கு சரியான தீர்ப்பைத் தந்தது. மருத்துவமனை இன்று செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இன்று மக்கள் அத்தனைபேரும் பாராட்டுகிறார்கள்.





அவற்றோடு மட்டுமல்ல; கல்வியிலே ஒரு மகத்தான புரட்சி. மனசாட்சியை மதிப்பவர்கள் என்று சொன்னால், பேருந்து பயண அட்டையில் தொடங்கி, புத்தகங்களில் தொடங்கி, நோட்டுப் புத்தகங்கள், மிதிவண்டிகள், காலணிகள், சீருடை, புத்தகப் பை, பெட்டி மற்றும் உலகப் படப் புத்தகம், வரைபடங்கள், கலர் பென்சில், லேப்டாப் வழங்கும் திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிற, இந்தியாவிலேயே இவற்றையெல்லாம் தருகிற ஒரே மாநிலம், நம்முடைய தமிழ் மாநிலம்தான், தந்தவர் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய தாயுள்ளம் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை இந்திய நாட்டிலேயே முதல் மாநிலமாக மாற்றிக் காட்டுகிற மகத்தான பணியில் தன்னைக் கரைத்துக் கொண்டிருக்கிறார். அவர் தாயின் வடிவம், வெளிச்சத்தின் வடிவம், திட வடிவம் நெடுங்கையில் ஒளிந்துகொள்ளாத தியாக உருவமாகத் திகழ்கிறார்.

பிற்பகல் 12—05

எங்கள் சென்னைப் பகுதியில், வடசென்னைப் பகுதியில் கொடுங்கையூர் என்ற ஓர் ஊர் உண்டு. அந்த பகுதியிலே நடந்த ஒரு சம்பவத்தை இந்த மன்றத்திலே நான் பதிவு செய்ய விழைகிறேன். சற்றேறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம்; ஒரு தாய்க்கு இரண்டு குழந்தைகள். பிறவியிலேயே அந்த இரண்டு குழந்தைகளுக்கும் பார்வை போய்விட்டது. காலம் எழுதிய கோலம், விதிப்பயன் அல்லது ஏதோ ஒரு சூழல் அப்படி ஆகிவிட்டது. குழந்தைகள் வளர்கிறார்கள், வளர்ந்து வளர்ந்து வருகிறபோது, அவர்கள் கனவுகளும் வளர்கின்றன. தாய் அவர்களுக்கு நம்பிக்கையூட்டி வளர்க்கிறாள். மகனே உங்களுக்கு ஒருநாள் கண்பார்வை கிடைக்கும், நம்புங்கள், மாற்று கண் சிகிச்சை உங்களுக்குத் தந்து, நீங்களும் இந்த உலகத்தைப் பார்ப்பதற்கு வழி செய்யப்படும் என்று சொல்கிறாள் தாய். காலம் உருண்டோடிவிட்டது. வளர்ந்து வருகிற குழந்தை, எட்டு ஆண்டுகளைத் தொட்டு முத்தமிடுகிற வேளையில், அண்ணன் பள்ளிக்கூடத்திற்குச் சென்றுவிட்டான், அந்தச் சிறு குழந்தை தம்பி கேட்கிறான் ‘அம்மா எனக்குப் பார்வை கிடைக்கும் என்று சொன்னாயே, பெற்றெடுத்த தாயை நான் எப்போது பார்க்க இயலும்? பேணி வளர்த்த தந்தையை எவ்வாறு நான் பார்க்க இயலும்? நடந்து செல்லுகிற பாதையை, வளர்ந்து நிற்கிற மரக்

கிளையை, அருகில் இருக்கிற சகாவை, தோழனை, எனக்குப் பாடம் நடத்துகிற ஞானாசிரியரை நான் எவ்வாறு பார்க்க இயலும்' என்று கேட்டான். தான் ஆடாவிட்டாலும், தன் சதை ஆடுமென்று சொல்வார்களே, பெற்ற மனம் அல்லவா! அவளின் கண் கலங்கிவிட்டது. மகனே ஒவ்வொரு நாளும் நான் உனக்கு நம்பிக்கையூட்டிச் சொன்னேன், பார்வை வரும், பார்வை வரும் என்று. இனிமேலும் தாமதித்திருக்கமாட்டேன். இன்று மாலையே உனக்குப் பார்வை வரும் மகனே, போய் வா பள்ளிக்கு என்று சொல்லி அனுப்பினாள்.

வெளியூருக்குச் சென்றிருந்த கணவன், வீட்டிலே தனியாக இருந்த குடும்பத் தலைவி வெள்ளைத் தாளை எடுத்தாள், அன்புள்ள அத்தான் என்று கடிதத்தை வரைந்தாள். 'பிள்ளைகள் பிறவியிலேயே பார்வையற்றவர்களாகப் பிறந்துவிட்டார்கள். நாம் செய்த துரதிருஷ்டம். இனிமேல் பிள்ளைகளுக்கு யார் இருக்கிறார்கள்? நாம்தான். அவர்களுக்குப் பார்வை வேண்டும். ஆகவே, பார்வைக்கு என்ன செய்ய வேண்டுமென்று பல வழிகளில் நாம் யோசித்தோம். இதுவரை வழிவகை கிடைக்கவில்லை. ஆகவே, அத்தான் நானே அதற்கு ஒரு விடிவுகாலமாக, விடியலாக இருக்க விரும்புகிறேன். நான் தற்கொலை செய்து கொள்கிறேன், என் இரு கண்களையும் எடுத்து, மூத்தவனுக்கு வலது கண்ணையும், இளையவனுக்கு இடது கண்ணையும் பொருத்திவிடுங்கள், மன்னித்துக்கொள்ளுங்கள் அத்தான்' என்று எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்துகொண்டாள். இது இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன்பு கொடுங்கையூர் பகுதியிலே நடந்தது. தற்கொலை செய்துகொண்ட தாயின் கண்கள் துரதிருஷ்டவசமாக மகன்களுக்குப் பொருத்த இயலாமல் போய்விட்டன. மிகப் பெரிய ஒரு கொடூரம். தாய் இறந்து கிடக்க, மகன்கள் இருவரும் கதறி ஓலமிட, கணவன் சேலத்திலிருந்து வந்தபோது ஓலமிடுகிற கூச்சலை மனிதாபிமானமுள்ள எவனும், கல்நெஞ்சக்காரனும்கூட கரைகிற, கசிகிற உணர்வுகளாக அந்தக் காட்சி நிகழ்ந்தது.

இதை எதற்குச் சொல்கிறேன் என்று சொன்னால், ஒரு தாய் எத்தகைய தியாகத்தையும் செய்வாள் என்பதற்கு ஓர் உதாரணம்தான் இது. அப்படிப்பட்ட தாய்தான் நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தனக்கென்று யாரும் இல்லை. தனி மனுஷியாக உழைக்கிறவர், எவ்வளவோ துன்பம், எவ்வளவோ





துயரம், எவ்வளவோ ஏச்சுகள், எவ்வளவோ பேச்சுகள், எத்தனையோ ஏளனங்கள் அப்படி இருந்த நிலையிலும் யாருக்காக அவர் உழைக்க வேண்டும், யாருக்காக அவர் பாடுபட வேண்டும், தன்னை நம்பியிருக்கிற மக்களுக்கு, தன்னை நம்பியிருக்கிற இயக்கத்தின் பற்றாளர்களுக்கு தன் வாழ்க்கையை அர்ப்பணிக்கிற, உலக அரசியல் வரைபடத்தில் எங்கேயாவது ஒரு தலைவரை நீங்கள் குரல் கொடுத்து காட்ட இயலுமா? அப்படிக் காட்ட இயலாது. அத்தகைய சக்திமிக்க தலைவர்தான், அத்தகைய தாயின் வடிவமுள்ள தலைவர்தான், உண்மையான தலைவர்தான், ஊருக்காக உழைக்கிற தலைவர்தான் நம்முடைய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட தலைவரைப் பெற்றிருக்கிற, அவர்களை நாம் வணங்குவோம். இந்த ஆளுநர் உரைக்கு நன்றி சொல்லி நிறைவு செய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013 ஆம் ஆண்டு ஆளுநர் உரையின்மீதான விவாதத்திலே பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஏழை எளியவர்கள் நலன் காக்கும் எங்கள் தேசிய முற்போக்குத் திராவிட கழக தலைவர் கேப்டன் அவர்களுக்கு நன்றி கூறி (மேசையைத் தட்டும் ஒலி) எனது விவாதத்தைத் தொடங்குகிறேன். விவசாயிகளுக்கு நெல்லுக்கும், கரும்புக்கும் மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையைவிட மாநில அரசு உயர்த்திக் கொடுத்துள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. நெல்லாகட்டும், கரும்பாகட்டும், மாநில அரசின் விலை கட்டுப்படியாகவில்லையென்று சொல்லி கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.3,500 கொடுக்க வேண்டுமென்று விவசாயிகள் இப்பொழுதும் போராடி வருகிறார்கள். நெல்லுக்கும், கரும்புக்கும் அடுத்தபடியாக தமிழ்நாட்டிலே மஞ்சளைத்தான் விவசாயிகள் அதிகமாக சாகுபடி செய்கிறார்கள். தற்போது அதன் விலை ரூ.5,000–லிருந்து ரூ.6,000 வரையில்தான் செல்கிறது. ஆனால், உற்பத்திச் செலவு ரூ.8,000–க்கும் அதிகமாக ஆகிறது.

[திரு. வி.சி. சந்திரகுமார்] [2013 பிப்ரவரி 6

பிற்பகல் 12–10

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கர்நாடகாவிலே ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையாக அந்த மாநில அரசு விவசாயிகளுக்கு அளிக்கிறது. அதேபோல, தமிழ்நாட்டிலும் கொடுக்கவேண்டுமென்று கேட்டபோது, கர்நாடகாவிலே கொடுப்பதற்கான ஆதாரங்களை இந்த அவை கேட்ட மறுதினமே அந்த ஆதாரங்களை நாங்கள் கொடுத்தோம். அப்படிக் கொடுத்தும்கூட இதுவரையிலும் மாநில அரசு அந்த மஞ்சள் விவசாயிகளுக்கு எந்தவிதமான ஊக்கத் தொகையும், சலுகையும் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சளைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநில அரசு மத்திய அரசு கொடுக்கின்ற விலையிலே, ஈரோட்டிலே மஞ்சள் கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது மஞ்சள் விலை ஏற்றத்திலே இருப்பதனால் அங்கே மஞ்சள் கொள்முதலுக்கு யாரும் வருவதில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கரும்பைப் பொறுத்தவரையிலே, மத்திய அரசு டன் ஒன்றுக்கு ஆதாய விலையாக ரூ.1,700/–ஐ நிர்ணயம் செய்தது. நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், கரும்புக்கு கூடுதலாக ரூ.2,350/– என்று நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். கரும்பைப் பொறுத்தவரையிலே, ஒரு ஹெக்டேருக்கு 85 மெட்ரிக் டன் உற்பத்தி ஆகிறது. டன் ஒன்றுக்கு கரும்பு உற்பத்தி செய்வதற்கு ஆகின்ற செலவு ரூ.1,870/– ஆகும். இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.2,350/– வழங்குவதின் அடிப்படையிலே டன் ஒன்றுக்கு நம்முடைய விவசாயிகளுக்கு ரூ.480 இலாபம் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு மட்டும் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே கடந்த ஆண்டைவிட கூடுதலாக 44,000 ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது என்பதையும் இந்த



2013 பிப்ரவரி 6] [திரு. செ. தாமோதரன்]

நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். கரும்பு பயிரைப் பொறுத்தவரையிலே நீடித்த நவீன கரும்பு உற்பத்தித் திட்டம் என்ற திட்டத்தை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன்மூலமாக இடுபொருட்கள் மானியமாக வழங்கப்படுவதால் கரும்பு மகசூல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதோடு, இதனால் விவசாயிகளுக்கும் கூடுதலாக இலாபம் கிடைக்கிறது. அதேவேளையில், பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் மற்றும் அதிலே பணிபுரியும் தொழிலாளர்கள் நலனையும் கவனத்தில் கொள்ளவேண்டியது அரசினுடைய கடமையாகும். எனவே, விவசாயிகளைப் பாதுகாக்கின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருங்காலங்களில் கரும்புக்குக் கூடுதலான விலை கிடைக்க உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையிலே பேசுகின்றபோது, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு எங்கள் கட்சி உறுப்பினர்களைப் பார்த்து, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கத்தை அளித்திருக்கிறார்கள். அதற்குப் பின்பும் உங்களுக்குப் புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் இல்லையென்று சொன்னால், அதைப் புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் இல்லை என்பதை மீண்டும் நீங்கள் நிரூபித்திருக்கிறீர்கள் என்றுதான் பொருள். (மேசையைத் தட்டும் ஒலி)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் 'நேற்று' என்று சொல்லி சொன்ன ஆட்சேபகரமான சொற்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நடைபெற்ற நிகழ்வை மட்டும் குறிப்பிட விரும்புகின்றேன். நேற்று பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. சுந்தரம் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார். பவானிசாகர் தொகுதி, பவானிசாகரிலே* Theme Park *அமைக்கவேண்டுமென்று பேசியபோது, இங்கே இருக்கின்ற மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார். பவானி கூடுதுறையிலே அமைத்திருப்பதைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார். பவானிசாகருக்கும், பவானி கூடுதுறைக்கும் 90 கிலோ மீட்டர் தூரம் வித்தியாசம் இருக்கிறது. அது சத்தியமங்கலம் தொகுதி, இது பவானி தொகுதி.* ** *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா பற்றி பேசும்போது இதுபோன்று ஈரோடு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் 'மெகா திட்டம்' என்பதிலே அமைக்கப்படும் என்பதைச் சொல்லி, 2001–2002–லே முதன்முதலாக அந்தப் பகுதியிலே ஆரம்பிக்கப்பட்டது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே என்பதை ஈரோடு மாவட்டத்திலே செய்யப்பட்ட நிகழ்வுகளைச் சொல்கின்றோம். இவர்கள் சட்டமன்றத்திலே மக்களுக்காகப் பேச வருகின்றார்களா அல்லது எங்களோடு சண்டை போட வேண்டுமென்ற அந்தத் தொனியிலே பேச வந்திருக்கிறார்களா என்பதை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலேதான் சுற்றுலாவில் உள்ள அத்துணை துறைகளும் பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது என்பதை நிரூபிக்கும்வகையில் பதில் சொல்லக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக உள்ளது. துணைக் கேள்விகளை எடுத்துக்கொண்டால் பல்வேறு மாவட்டங்களிலிருந்து கேட்கின்றார்கள். அத்துணை கேள்விகளுக்கும் நாங்கள் மிகச் சரியாக விளக்கம் அளித்து வருகின்றோம் என்பதை அவர்கள் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டுமென்று இந்த மாமன்றத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*



2013 பிப்ரவரி 6] [திருமதி எஸ். கோகுல இந்திரா]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், ஆளுநர் உரைமீது பேசுங்கள். (குறுக்கீடு) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுங்கள்.*

*பிற்பகல் 12–15*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே நூலகத்திற்குச் சென்று படித்துவிட்டுத்தான் வந்து பேசிக் கொண்டிருக்கிறேன். புரியாமல் பேசவில்லை. நான் அந்த விவாதத்திலே இருந்து விடுபடுகிறேன். காவிரி பாசனப் பகுதியில். . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி கூடுதுறை என்பது எந்த மாவட்டத்தில் இருக்கின்றது? அது ஈரோடு மாவட்டத்தில் இருக்கின்றதா அல்லது வேறு மாநிலத்தில் இருக்கின்றதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக விளக்கமாகச் சொல்லும்படி தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் பேசுங்கள்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகரும், பவானியும் என்னுடைய ஈரோடு மாவட்டத்திலேதான் இருக்கின்றன. அதிலே எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. சந்திரகுமார், பேசி முடியுங்கள்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. அவர் கேட்ட கேள்விக்கு அது பதில் இல்லையென்றுதான் சொன்னேன்.*

வேறு எதுவும் சொல்லவில்லை. காவிரி பாசனப் பகுதியிலே 12 மணி நேரம் தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டதாலே சம்பா பயிர்களை ஓரளவு காத்திட அது உறுதுணையாக இருந்தது என்று சொல்லப்பட்டது. அது உண்மையானால், காவிரியின் கடைமடைப் பகுதிகளான திருவாரூர் மற்றும் நாகை மாவட்டங்களில், மாவட்ட நிருவாகத்தையே ஸ்தம்பிக்கச் செய்யும் அளவிற்கு விவசாயிகள் ஏன் அங்கே கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டார்கள்? அதேபோல, வறட்சியை ஆய்வு செய்ய உயர்மட்டக் குழு சென்றபோது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எல்லாம் சென்றார்கள். தமிழ்நாடு அரசு உழவர் (குறுக்கீடு) நாங்கள் எப்பொழுதுமே நிதானத்திலே இருப்பவர்கள்தான். நிதானம் தவறியவர்கள் நாங்கள் இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்களின் பேச்சை நான் ஆரம்பத்திலிருந்து கவனித்துக்கொண்டிருக்கிறேன். அவர் காலையிலே பச்சை மிளகாயை சாப்பிட்டுவிட்டு வந்து பேசுகிறார் என்று நினைக்கிறேன். நீங்கள் மிகவும் பொறுமையாக, நிதானமாக கேளுங்கள். உரிய பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உங்களுக்கு பிரஷர் இருந்தால், பிரஷர் மாத்திரை போட்டுக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரகுமார், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், உங்கள் நலனில் அக்கறையோடுதான் பேசுகிறார். அதனால் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு ஆட்சிக்கு வந்ததும் ஒவ்வொரு கிராமத்திலும் உழவர் நண்பன் என்கிற பணியாளர்களை நியமித்தார்கள். ஆனால், அந்தப் பணியாளர்கள் அந்தந்த கிராமங்களில் ஏற்பட்டுள்ள வறட்சியைப்பற்றி அரசுக்கு தகவல் சொல்லியிருக்கிறார்களா இல்லை, அவர்கள் அந்தப் பணியைச் செய்யவில்லையா என்பதுதான் என்னுடைய கேள்வியே தவிர, அவர்கள் ஆய்வுக்குச் சென்றபோதுதான் அந்த வறட்சியை ஆராய முடியும் என்று சொல்லப்படுகிறது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 12 மணி நேரம் தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு, சம்பா பயிர்கள் காப்பாற்றப்பட உறுதுணையாக இருந்தது என்று சொல்லிவிட்டு, கடைமடைப் பகுதியான நாகை, திருவாரூர் மாவட்டங்களில் விவசாயிகள் போராட்டம் என்று சொன்னார்கள். அந்த மாவட்டங்களில் நிலத்தடி நீர் தோண்டினாலே 5 அடிக்குக் கீழே போனால் உப்பு நீர் வந்துகொண்டிருக்கிறது. அங்கே பம்புசெட்டு போட்டு தண்ணீர் இறைக்க முடியாது. பூகோள ரீதியாக உள்ள பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். தெரிந்து கொண்டு கருத்தைச் சொல்ல வேண்டும். கடலோரப் பகுதியில் பம்புசெட்டு போட்டால் என்ன தண்ணீர் வரும்? இதைக்கூட அறியாமல் இருக்கிறார்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். கடுமையான போராட்டத்திற்கிடையிலும் கிட்டத்தட்ட 400 மெகா வாட் மின்சாரம் ஒரு நாளைக்கு டெல்டா பகுதிகளுக்கு மட்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுகூட மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசுகின்றபொழுது, விவசாயிகள் பிரச்சினையிலே**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரகுமார், இதுபோல் பேசுவதாக இருந்தால் ** என்னிடம் கொடுத்துவிட்டு பேசுங்கள். நீங்களாக பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) குற்றச்சாட்டு சொல்லும்போது என்னிடம் கொடுத்துவிட்டுப் பேசுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2013 பிப்ரவரி 6

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி. கவர்னர் உரையிலே கைத்தறித் துறையை புத்துயிரூட்டி சீர்பொருந்த 171 கோடி ரூபாய் அரசு ஒதுக்கியுள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர்கள் நலனுக்காக இலவச வேட்டி சேலை திட்டத்தைக் கொண்டுவந்தார். எந்த கைத்தறி நெசவாளர் நலனுக்காக இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டதோ, அந்த கைத்தறி நெசவாளர்கள் முற்றிலும் இந்த ஆட்சியில் புறக்கணிக்கப்பட்டதாகவே கருதுகிறேன். ஏனென்றால், இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ள சேலைகள் எல்லாம் வெளி மாநிலங்களிலே கொள்முதல் செய்யப்பட்டு, இங்கே விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இத்தகைய நிலையில் கைத்தறி நெசவாளர்கள் நலன் உள்ளது என்பது எங்கே என்பதுதான் என் போன்றவர்களின் கேள்வியாக இருக்கின்றது.*

*அதேபோல, அரசுப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்குவதால்தான். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 12–20*

***மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சொசைட்டி மூலம் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் 1 கோடியே 78 இலட்சம் சேலைகள், 1 கோடியே 77 இலட்சம் வேட்டிகள். ஆனால், டெண்டர் மூலமாகக் கொள்முதல் செய்யப்பட்டது 46 இலட்சம் வேட்டிகள்தான். மீதமிருக்கின்ற துணிகள் அனைத்தும் சொசைட்டியின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள்தான் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதேபோன்று, 14 இலட்சத்து 50 ஆயிரம் சேலைகள்தான் டெண்டர் மூலமாகக் கொள்முதல் செய்யப்பட்டன. மீதமிருக்கின்ற சேலைகள் அனைத்தும் சொசைட்டியின் மூலமாகத்தான் உற்பத்தி செய்யப்பட்டன என்பதை நான் இங்கே தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*



2013 பிப்ரவரி 6]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு வருடம் முழுவதும் வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் இலவச வேட்டி–சேலை வழங்குகின்ற திட்டம். அதன்படி, இந்த வருடத்தில் கைத்தறி நெசவாளர்கள் நெய்த அனைத்துச் சேலைகளையும், வேட்டிகளையும், இலவச வேட்டி–சேலைத் திட்டத்திற்காகக் கொடுத்துவிட்டார்கள். அவர்களால் கொடுக்கமுடியாத எண்ணிக்கையிலான இலவச வேட்டி–சேலைகளைத்தான் வெளி மார்க்கெட்டிலிருந்து வாங்கவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டதேயொழிய, ஏற்கெனவே, இலவச வேட்டி–சேலைத் திட்டத்திற்கென நெசவாளர்களால் தயாரிக்கப்பட்ட வேட்டி–சேலைகள், கைத்தறி நெசவாளர்களுடைய பொருட்கள் எங்கும் இருப்பில் இல்லை; கொள்முதல் செய்யப்படாமல் தேக்க நிலை எங்கும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நெசவாளர்கள் நெய்த, அனைத்து வேட்டி சேலைகளும் இலவச வேட்டி–சேலைத் திட்டத்திற்காக வாங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *பள்ளிகளில் படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்குப் பல்வேறு உதவிகள் வழங்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அரசுப் பள்ளிகளிலே பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, கல்லூரிப் படிப்பிற்குச் செல்லும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைந்து வருவதாக ஒரு சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதாவது, அரசுப் பள்ளியிலே படித்துவிட்டு கல்லூரிக்குப் போகின்றவர்களுடைய எண்ணிக்கை.*

*அதேபோல, மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் தேசிய அளவிலே பாராட்டப்பட்டதாக இந்த ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் அந்த மடிக்கணினிகளைக் குறிப்பிட்ட காலத்திலே தரவில்லை என்கின்ற காரணத்தைச் சொல்லி, மூன்றாம் ஆண்டு கல்லூரி மாணவர்கள் ரோட்டிலே இறங்கிப் போராடுகின்ற அவல நிலையைப் பத்திரிகைகள் வாயிலாகப் பார்க்கின்றோம். இதனைச் சரிசெய்ய வேண்டும்.*

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடிக்கணினி வழங்குகின்ற திட்டத்தை, இந்தியாவிலேயே முதன்மையாக தமிழகத்தில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். வேறு எந்த மாநிலத்திலும் இந்தத் திட்டம் கிடையாது. ஆகவே, 9 இலட்சத்து 12 ஆயிரம் மடிக்கணினிகளை வழங்குவதாக அறிவித்து, கடந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 1,000 கோடி ரூபாய் நிதியினை இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கித் தந்தார்கள். அதற்குப்பிறகு, டெண்டர் விடப்பட்டு, தாய்லாந்திலிருந்து மடிக்கணினிகள் வாங்கப்பட்டு, தமிழகத்தில் உள்ள கல்லூரிகளில் இறுதியாண்டு படிக்கின்ற அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் கடந்த ஆண்டு வழங்கப்பட்டிருக்கின்றன. எந்தக் கல்லூரியிலும் மடிக்கணினி வழங்கப்படாத நிலை இல்லை. சென்ற ஆண்டு வழங்கப்படுவதாக இருந்த மீதி 2 இலட்சத்து 12 ஆயிரம் மடிக்கணினிகள் இந்த ஆண்டு தற்போது வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர் சேர்க்கை விகிதம், அதாவது, Gross Enrolment Ratio என்று சொல்வார்கள். உயர் கல்வியில் மாணவர்கள் சேர்க்கை விகிதம் தற்போது இந்திய அளவில் 13 சதவிகிதமாக இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, அது 18 சதவிகிதமாக இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். உயர் கல்வியில் சேருகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை, அதாவது, 18 வயதிலிருந்து 23 வயது வரை இருக்கக்கூடியவர்களில், உயர் கல்விப் படிப்பில் சேருபவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்பதற்காகத்தான், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ‘Vision 2023’–இல் உயர் கல்வித் துறையை ஒரு முக்கியமான துறையாகச் சேர்த்து, அதிலே புதிய புதிய கல்லூரிகளை, இதுவரை வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, 45 கல்லூரிகளை உருவாக்கிய பெருமை மாண்புமிகு முதல்வர்



2013 பிப்ரவரி 6] [திரு. பி. பழனியப்பன்]

அம்மா அவர்களைச் சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், உங்களுடைய ஈரோடு மாவட்டத்தில்கூட, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் குடிசைவாசிகள் 86 இலட்சம் எனவும், வீட்டு வசதிப் பற்றாக்குறை 28 இலட்சம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. மத்திய அரசின் பல திட்டங்களின் உதவியோடு, இந்தப் பற்றாக்குறை சரிசெய்யப்படும் என்று சொல்லிவிட்டு, தொடக்கமாக 206.09 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2,775 வீடுகளைக் கட்டுவதற்கு மத்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளோம் என்றும், இந்தப் பெரும் பிரச்சினை குறிப்பிட்ட கால வரையறைக்குள் தீர்க்கப்படும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. குறிப்பிட்ட கால வரையறை என்று சொன்னால், இங்கே 2,775 வீடுகள் என்கின்ற அடிப்படையில் பார்க்கின்றபோது, இந்த 28 இலட்சம் பேருக்கும் வீடுகளைக் கொடுக்கின்றபோது, சுமார் 100 ஆண்டுகள் ஆகும். அப்படியென்று சொன்னால், இந்த 100 ஆண்டுகளிலே எத்தனை பேர் பயன்பெறப் போகிறார்கள் என்பதை தயவுசெய்து தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–25

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு, மத்திய அரசு நிதி ஒதுக்குவதைவிடக் கூடுதலாக நிதி ஒதுக்கி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ‘Vision 2023’–ல், ‘தமிழ்நாட்டை குடிசைகளே இல்லாத மாநிலமாக இன்னும் 10 ஆண்டுகளில் உருவாக்குவோம்’ என்ற திட்டத்தினை தொலைநோக்கு சிந்தனையோடு அறிவித்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது, இத்திட்டம் நிறைவேற 100 ஆண்டுகள் ஆகும் என்று கூறினார். 2023 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் எந்த நகரத்திலும் குடிசைகளே இல்லாத ஒரு நிலையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்குவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சந்திரகுமார், இரண்டு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேள்விகளாகக் கேட்டுக்கொண்டேயிருப்பதால், மாண்புமிகு அமைச்சர்கள் தொடர்ச்சியாக பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 20 நிமிடங்கள்தான். (குறுக்கீடு) இன்னும் 12 உறுப்பினர்கள் உரையாற்ற வேண்டும்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ், சுமார் 8 வருடங்களுக்கு முன்னால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளின் மேற்கூரைகளில், தற்பொழுது நீர்க் கசிவுகள் ஏற்பட்டுள்ளன. அதன் மேற்கூரைகளில் ஓடுகள் பதிப்பதற்காக, 30.69 கோடி ரூபாயை அரசு ஒதுக்கியுள்ளதாக ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாகக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள், தொகுப்பு வீடுகள் எல்லாம் சுமார் 30, 40 ஆண்டுகளாகியுள்ள நிலையில், இலட்சக்கணக்கான வீடுகள் பழுதடைந்து, இடிந்து விழும் அபாயத்தில் உள்ளன. அவ்வீடுகளில் வசிப்பவர்களும் தமிழ்நாட்டு மக்கள்தான். எனவே, அவர்களுக்கும் இதுபோன்ற ஒரு சிறப்பு நிதி ஒதுக்கி, பழுதடைந்த வீடுகளைச் சரி செய்ய வேண்டும்; மோசமான வீடுகளை இடித்து விட்டு, புதிதாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நபார்டு வங்கியின் நிதி உதவியோடு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 17 இடங்களில் பழுதடைந்த வீடுகளை





இடித்துவிட்டு, புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று 2, 3 நாட்களுக்கு முன்னால் அறிவித்திருக்கின்றார்கள். அதுபோன்று, படிப்படியாக தமிழ்நாட்டில் பழுதடைந்த வீடுகளை இடித்து விட்டு, இப்பொழுது இருக்கின்ற வீடுகளைவிட இரண்டு மடங்கு அதிகமான வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'யானை வரும் முன்னே, மணி ஓசை வரும் பின்னே' என்பார்கள். அதுபோல, அரசு போக்குவரத்துக் கழகத்தைப் பற்றி ஆளுநர் உரையிலே சொல்லுகின்றபோது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பழமொழி 'யானை வரும் முன்னே, மணி ஓசை வரும் பின்னே' அல்ல; 'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' என்பது ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறை ஒத்துக்கொள்கிறேன். 'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' என்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரகுமார், பழமொழி சொல்லும்போது நன்றாக யோசனை செய்து சொல்லுங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பக்கம் எவ்வளவு கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்கள்.

[2013 பிப்ரவரி 6

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் அரசினுடைய போக்குவரத்துக் கழகம் குறித்த புள்ளிவிவரங்கள் இரண்டு பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தால், முழுக்க, முழுக்க போக்குவரத்துக் கழகத்தினுடைய நஷ்டக் கணக்காகத்தான் இருக்கிறது. ஏற்கெனவே, எந்தவிதக் காரணமும் இல்லாமல், திடீரென்று பேருந்துக் கட்டணம் 75 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. தற்பொழுது, இதையெல்லாம் காரணம் காட்டி, மேலும் பேருந்துக் கட்டணம் உயர்த்தப்படுமோ என்ற பயம் தமிழக மக்களுக்கு, இந்த கவர்னர் உரையின் மூலமாக ஏற்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிக்கின்ற நலத் திட்டங்களை, அரசினுடைய அறிக்கைகளை படிப்பதில்லை என்றே நான் கருதுகிறேன். கடந்த முறை, 6 ரூபாய் 7 பைசா டீசல் விலை உயர்வு ஏற்பட்டபோது, அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்படும் கூடுதல் செலவினமான 383 கோடி ரூபாயை அரசே வழங்கும் என்று முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதற்குண்டான நிதிகளை கொடுத்து, அரசுப் போக்குவரத்துக் கழகத்தையும், பொதுமக்களையும் காப்பாற்றியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, இந்தமுறை மத்திய அரசு டீசலுக்கு இரட்டை விலைக் கொள்கையைக் கொண்டு வந்தபோதிலும், அதனால் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்படுகின்ற ஒட்டுமொத்தக் கூடுதல் செலவினமான சுமார் ஆயிரம் கோடி ரூபாயை அரசே ஏற்கும் என்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொதுமக்கள்மீது, அரசுப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள்மீது அக்கறை கொண்டு அறிவித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரகுமார், புது சப்ஜெக்ட்டிற்குப் போகாதீர்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.



2013 பிப்ரவரி 6]

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டே இரண்டு point-கள் தான் உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரகுமார், நன்றி சொல்லி சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கூட்டத் தொடரின்போது 'எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய தொகுதிகளின் நலத் திட்டங்களெல்லாம் புறக்கணிக்கப்படுகின்றன' என்று நான் கூறியபோது, 'அப்படியெல்லாம் இல்லை' என்று இந்த அவையிலே மறுக்கப்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தொகுதியில் நலத் திட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் கூறுகிறேன். கடந்த 2011–2012 ஆம் ஆண்டில், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து, 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி, ஈரோடு தொகுதி, காளிங்கராயன் வாய்க்கால், குயிலான் தோப்பு பகுதியில் ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்று ஒரு கடிதம் கொடுத்தேன். அதுசம்பந்தமாக, பொதுப் பணித் துறைச் செயலாளர் அவர்களை அவரது அலுவலகத்திலே நேரிலே சென்று சந்தித்துவிட்டு, சொல்லிவிட்டு வந்தேன். ஆனால், கடந்த 10 நாட்களுக்கு முன்பு 'நீங்கள் கேட்ட பாலம் அமைக்கின்ற பணி அரசின் பரிசீலனையில் இருக்கிறது' என்று எனக்கு ஒரு கடிதம் வந்தது. 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியும், பாலம் அமைக்கின்ற பணி 1½ ஆண்டுகளாக அப்படியே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–30

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்ற வாரம்தான் அந்த மனுவைக் கொடுத்திருக்கிறார். பாலம் அமைக்க வேண்டும், அந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்று அவர்கள் மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும். அந்தப் பாலம் அமைப்பதற்குண்டான நடவடிக்கை உறுதியாக எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது. புதிய சப்ஜெக்ட்டிற்கு போகாதீர்கள். நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 22 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** அதேபோல, ஈரோடு மாநகராட்சியில் என்னுடைய தொகுதி எப்படி இருக்கிறது என்பதற்கு ஓர் உதாரணம். மாநகராட்சியிலே செய்யப்பட்ட வேலைகளிலே ஈரோடு மேற்கு தொகுதியிலே மட்டும் கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய்க்கு பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. மாநகராட்சியினுடைய தீர்மானப் புத்தகத்தை ஆதாரமாக வைத்துதான் இதைச் சொல்கிறேன். அதேபோல, ஈரோடு கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட பகுதியிலே வெறும் 6 கோடி ரூபாய்க்கு மட்டுமே பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இதையெல்லாம் என்ன என்று சொல்வது என்று தெரியவில்லை. அதேநேரத்திலே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள். (குறுக்கீடு) திரு. வி.சி. சந்திரகுமார், நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள். பேசி முடியுங்கள். புதிய சப்ஜெக்ட்டுக்குப் போகக்கூடாது. (குறுக்கீடு) புதிதாகப் பேசக்கூடாது. நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** ஒரே ஒரு கருத்து. 2006–லே மயிலாடுதுறையிலே தங்களுடைய ஆட்சியிலேதான் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், கடந்த கூட்டத்தொடரிலே எங்கள் உறுப்பினர் பேசினார், அதற்கு முன்பாக நடந்த கூட்டத் தொடரிலும் பேசினார். ஆனால், இன்றுவரையிலும் அந்தப் புதிய பேருந்து நிலையத்திற்கு நிதி ஒதுக்கவில்லை. தயவுசெய்து இந்த ஆண்டிலேயாவது அதற்கு நிதி ஒதுக்கப்படுமா என்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, ஈரோடு மாநகராட்சியில் ஒரு பகுதியில் 20 கோடி ரூபாய் நிதி



2013 பிப்ரவரி 6] [திரு. கே.பி. முனுசாமி]

ஒதுக்கப்பட்டிருக்கிறது; மற்றொரு பகுதியில் 6 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். அந்தப் பகுதியினுடைய உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு எந்தெந்தப் பகுதிகளில் நிதி ஆதாரங்கள் தேவைப்படுகிறதோ, அந்தந்தப் பகுதிகளில் நிதி ஒதுக்கிக்கொண்டிருக்கிறார்கள். கார்ப்பரேஷனிலே அதற்கென்று ஓர் அமைப்பு இருக்கிறது. அந்த அமைப்பின் மூலமாக நிதி ஒதுக்கப்பட்டு செயல்பட்டு வந்துகொண்டிருக்கிறது. எனவே, ஈரோடு பகுதியில் நிதி தேவையில்லை என்று கருதுகிறேன். தேவையான பகுதிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று கருதுகிறேன். ஏற்கெனவே இதுபோன்ற கருத்தைச் சொல்லுகின்றபோது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தமிழ்நாடு முழுவதையும் தன் கட்டுப்பாட்டில் வைத்து, அனைத்து மக்களையும் தன் கண்களாகதான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, எல்லா வளர்ச்சிகளுக்கும் சமமான நிலையில் நிதி வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மயிலாடுதுறையில் பேருந்து நிலையத்தைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். நிலம் கையகப்படுத்துவதிலே பிரச்சினை இருக்கிறது. அது அந்த சட்டமன்ற உறுப்பினருக்கும் தெரியும். கையகப்படுத்தப்பட்ட உடனே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள் பேசுகின்றபோது, அவருடைய சட்டமன்றத் தொகுதியெல்லாம் புறக்கணிக்கப்படுவதாகச் சொன்னார்கள். எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த சேந்தமங்கலம் தொகுதியில் உங்களுடைய கட்சி சட்டமன்ற உறுப்பினர்தான் இருக்கிறார். தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஐந்து தொகுதியைக் காட்டிலும் அந்த சேந்தமங்கலம் தொகுதியில்தான் கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் அளவிற்குப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் அங்கு

[திரு. பி. தங்கமணி] [2013 பிப்ரவரி 6

*வாக்களித்த மக்கள் யாராக இருந்தாலும் சரி, மக்களைதான் பார்க்கிறார்களேயொழிய சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்கவில்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

***திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே கையெழுத்தில் 7 ஆயிரம் கோடி விவசாயக் கடனை இரத்து செய்து, வட்டியில்லா கடனை வழங்கிய தமிழ்த் தாயின் தலைமகன், ஒட்டுமொத்த தமிழினத்தின் ஈடு இணையற்ற காவலர், அய்யன் வள்ளுவனுக்கு வானுயர சிலை எழுப்பிய வாழும் வள்ளுவர், மக்களுக்காக உண்மையாக உழைக்கும் ஈடு, இணையற்ற இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், ஒய்வறியா சூரியன், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழுக்காகவும், தமிழர்களுக்காகவும் மெகா புயல் சாண்டியையும் பொருட்படுத்தாது தமிழர்களுக்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்த இளைஞர்களின் எழுச்சி நாயகன், எதிர்காலத் தமிழகத்தைக் காக்க வந்த கதிரவன், எழுஞாயிறின் கம்பீரக் கதிரொளி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்றக் குழுத் தலைவர் தளபதியார் அவர்களுக்கும் . . . (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கருத்தைச் சொல்லிவிடட்டும். ஆனால் மத்தியிலே கூட்டணியிலே இருந்துகொண்டு தமிழர்களை கொலை செய்வதற்கு உறுதுணையாக இருக்கும்... (குறுக்கீடுகள்) அப்படியா, சரி. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *கன்னிப் பேச்சா? (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டுகள் இல்லாமல் பேசுங்கள். குற்றச்சாட்டு இல்லாமல் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)*



2013 பிப்ரவரி 6]

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு அமைச்சர் குறுக்கிடுவதற்கு நிறைய இடங்கள் உள்ளன. அப்போது அவர்கள் குறுக்கிடலாம். இன்று ஆளுநர் உரையின்மீது நடக்கும் இந்த விவாதத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் *12–35*

*பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், தஞ்சை பெரியார், மன்னை நாராயணசாமி போன்றவர்கள், தமிழர்களுக்கும், தமிழகத்திற்கும், சுய மரியாதை குறையாத மதிக்கத்தக்க வாழ்க்கையை அமைத்துக் கொடுத்த மாமேதைகள் அலங்கரித்த தமிழக சட்டமன்றத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் தமிழ் இனத் தளபதியின் வழிக்காட்டுதலோடு பொறுப்பேற்று செயல்பட்டுக் கொண்டிருக்கும் நான் உள்பட இதர கட்சிகளிலிருந்தும் இங்கு பேரவைக்கும், மேலும் பல மாநிலங்களில், ஏன் பாராளுமன்றத்தில் கூட இளைஞர்கள் பொறுப்பேற்று அமர்ந்திருக்கும் இந்த நிலையில் இந்திய ஜனத்தொகையில் 70% இளைஞர்களே என்ற இத்தருணத்தில் ஒட்டுமொத்த இளைய சமுதாயமும் இன்றைய அரசியலைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது.*

*தேர்தலுக்குப் பிறகு ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் சேர்ந்து விவாதித்து நிறைவேற்றப்படும் திட்டங்கள்தான் மக்களுக்கு பயனுள்ளவையாக அமையும். பல வல்லரசு நாடுகளும் இந்த முறையைத்தான் கையாண்டு வருகிறார்கள். உலகிற்கே நாகரீகமான ஜனநாயக ரீதியான அரசியலைக் கற்றுக் கொடுத்து கொண்டிருக்கும் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், அவர் தம் ஆட்சிக்காலத்தில் இந்த மரபைத்தான் காப்பாற்றி வந்தார். எதிர்காலச் சந்ததியினருக்கு அரசியலில் ஈடுபாடு இல்லையென்றால் இந்த நாடே தடம் புரண்டு விடும் சூழ்நிலை ஏற்படும். இத்தகைய நிலையில்தான் அப்பழுக்கற்ற ஒரு தலைமையைத் தேடி அன்புத் தளபதியார் முன்னிலையில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் இன்று திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியில் இணைந்துள்ளனர். ஆக, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க காலக்கட்டத்தில் சட்டமன்றப் பேரவை நிகழ்வுகள் முழுமையான ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கும் வகையில் நடத்தப்படுவதும் அவசியம். ஆகவே, இந்த விவாதத்தின்போது குறுக்கீடுகளைக் குறைத்து, பொய்*

குற்றச்சாட்டுக்களைத் தவிர்த்து, பேரவையில் உறுப்பினர்கள் பேசும்போது மற்ற உறுப்பினர்கள் குறிப்புகளை மட்டும் எடுத்துக்கொண்டு அவர்கள் பக்கத்தின் வாதங்களை பின்னர் எடுத்துரைப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் துவங்குகிறேன்.

இந்த ஆளுநர் உரையைப் பற்றி ஒரே வரியில் கூற வேண்டுமென்றால், கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கும் ** 2013–லும் தமிழக மக்கள் மீளப்போவதில்லை என்று முன்னதாகவே தெரிவிப்பதற்கான ஒரு சுற்றறிக்கையாகவே உள்ளது. மேலும், இந்த ஆளுநர் உரையில் புதிய திட்டங்களாய் எங்கள் பெருமை வாய்ந்த மன்னார்குடி தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு இடங்களில் அத்தியாவசியமான வளர்ச்சிப் பணிகள் இடம் பெறாமல் எங்கள் தொகுதி புறக்கணிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, காலஞ்சிமேடு பாலம், பொதக்குடி, ஆதங்குடி பாலம், மன்னார்குடி மற்றும் நீடாமங்கலம் பேருந்து நிலையம், வடுவூர் ஏரி மற்றும் திருமேனி ஏரி போன்ற ஏரிகளைத் தூர் வாருதல், சட்டுருட்டி வாய்க்கால் சீரமைப்பு, கார்த்தநாதபுரம் பாலம் சீரமைப்பு, ஹரித்திரா நதி தெப்பக்குளத்தை பொழுதுபோக்குத் தலமாக மாற்றுவது, எடமலையூர் விளையாட்டு மைதானத்தை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம் திருமலைக்கோட்டு கிராமத்தில் அமைந்துள்ள திருமேனி ஏரி 265.51 ஏக்கராவும், இதன் கொள்ளளவு 67.95 எம்.சி.எப்.டி. ஆகவும் உள்ளது. இந்த ஏரியானது கடந்த 2010–2011 ஆம் ஆண்டு 117 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூர் வாரி சீரமைக்கப்பட்டு, மதகுகள் மற்றும் வாய்க்கால் சீரமைக்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக நல்ல நிலையில் உள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடமலையூர் விளையாட்டு மைதானத்தை பிரம்மாண்ட விளையாட்டு அரங்கமாக மேம்படுத்துவது, தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் தரம் உயர்த்தப்பட்டு, மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு அத்தியாவசிய நவீன உபகரணங்களை வழங்குவது, பொதக்குடி, திருமாக்கோட்டை போன்ற பல ஆரம்ப சுகாதார நிலையங்களில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமானே!" என்று சொல்வார்கள். பொய் என்ற வார்த்தையை உபயோகிக்கக்கூடாது, உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியை, அவர் தலைவரும் சொல்கிறார், இவரும் சொல்லி ஒட்டு கேட்டார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 7,000 கோடி ரூபாய் தள்ளுபடி செய்ததாகக் கூறினார் (குறுக்கீடு) ரூ.7,000 கோடி தள்ளுபடி செய்ததாகச் சொன்னதற்காக நான் பதில் சொல்கிறேன். இந்த அவை ஒரு உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். அவைக்கு தவறான தகவலை, அது கன்னிப் பேச்சாக இருந்தாலும்கூட, தவறான தகவலைச் சொல்லக்கூடாது இல்லையா? (குறுக்கீடு) சொல்லுகிறேன். 7,000 கோடி ரூபாயை ஒரே கையெழுத்திட்டு தள்ளுபடி செய்ததாகச் சொன்னார். அதுதான். ஒரு கையெழுத்து என்று சொல்லும்போது அதற்குப் பதில் சொல்ல வேண்டும் இல்லையா, அதற்குத்தான் சொல்கிறேன்.

பிற்பகல் 12–40

மொத்த விவசாயக் கடன்; இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மற்றும் எல்லா வங்கியிலும் பெற்ற கடன் மொத்தம் எவ்வளவு என்றால் 2006–2007–லிருந்து 2010–2011 வரை 5,844.92 கோடி ரூபாய். இதிலே மாநில அரசு வழங்கிய நிதி ரூ.3,288.69 கோடி. அவர்களே அந்த நேரத்தில் வட்டி கட்டாதது 4,042.8 கோடி ரூபாய். அந்தக் கடனை தள்ளுபடி செய்ய நபார்டு வங்கி கொடுத்தது 1,517.41 கோடி ரூபாய். அதுபோன்று இந்திய அரசு வழங்கியது ரூ.33.13 கோடி. ஆக, இந்தக் கூடுதலையும் சேர்த்தோம் என்றால் 5,844.92 கோடி ரூபாய். இதிலே வட்டி 1,005 கோடியே 69 இலட்சம் ரூபாய். இதிலே இவர்கள் கொடுக்காமல்

போனது—தவறான பதிவு இங்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அவர்கள் தள்ளுபடியாக அறிவித்த தொகையில் 506 கோடியே 39 இலட்சம் ரூபாயைக் கொடுக்கவில்லை. இதுதான் உண்மை. இதுமட்டுமல்ல, தள்ளுபடி செய்யப்பட்ட அந்தத் தொகையெல்லாம் யாருக்குச் சென்றது என்பது எல்லோருக்கும் தெரியும். (குறுக்கீடுகள்) பெரிய பெரிய விவசாயிகளுக்குத்தான் சென்றதேயொழிய, குறு, சிறு விவசாயிகளுக்கு இல்லை என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரிய விவசாயிகளுக்குத்தான் போனது என்று சொல்கிறார், வேறு ஒன்றுமில்லை. திரு. டி.ஆர்.பி. ராஜா, பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ராஜா, பேசுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார், அதில் என்ன Point of Order? உட்காருங்கள், உட்காருங்கள். திரு. ராஜா, பேசுங்கள். உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். (குறுக்கீடுகள்) Point of Order இல்லை. திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். என்ன இப்படி செய்கிறீர்கள்? உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார், உங்கள் உறுப்பினர் பேசுவதிலேயே Point of Order கேட்டுக் கொண்டு இருக்கிறீர்களே? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். திரு. ராஜா, நீங்கள் பேசுங்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** பொதக்குடி, திருமாக்கோட்டை போன்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் மருத்துவர்களை அமர்த்துவது, இவ்விரு இடங்களிலும் உபயோகப்படுத்தாத நிலையில் உள்ள புதிய கட்டடங்களை உபயோகப்படுத்துவது மற்றும் மன்னார்குடி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜா அவர்கள், அவருடைய பேச்சு கன்னிப் பேச்சு என்று சொன்னாலும், பல்வேறு தவறான குற்றச்சாட்டுக்களை இந்த அவையிலே பதிவு செய்கிறார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் காவிரி டெல்டா பகுதி மக்கள் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். அது மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியாக இருந்தாலும் சரி,



திருவாரூர் சட்டமன்றத் தொகுதியாக இருந்தாலும் சரி, நன்னிலம் சட்டமன்றத் தொகுதியாக இருந்தாலும் சரி, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதியாக இருந்தாலும் சரி, திருவாரூர் மாவட்டத்திற்குட்பட்ட இந்தத் தொகுதிகள் எல்லாம் பல்வேறு நேரங்களிலே பாதிக்கப்படுகிறபோது, அது வறட்சியாக இருந்தாலும், வெள்ளமாக இருந்தாலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிப்பு மக்களைச் சென்றடையாமல் காத்திருக்கிறார்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளைக் காக்கின்ற தலைவியும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளைக் காக்கிறார்கள் என்று சொன்னால்— அவர் ஒரே கையெழுத்திலே 7,000 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்தார்கள் என்ற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். நான் இன்னொரு கருத்தை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அவர்களுடைய ஆட்சியிலேதான், கடந்தகால ஆட்சியில், திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆலங்குடியில், முகம்மது அலி ஜின்னா என்பவருடைய மனைவி பரிதா பேகம் என்பவர் தற்கொலை செய்து கொண்டார். (குறுக்கீடுகள்) அவருடைய கூட்டுறவுக் கடனை வசூல் செய்வதற்கு, ஜப்தி செய்ததற்காக அவர்களுடைய ஆட்சியிலேதான் தற்கொலை செய்துகொண்டார் என்பதை இங்கே பதிவு செய்கிறேன். (குறுக்கீடுகள்) தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருபுவனம் சரோஜா. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் சொல்கிறார். அப்புறம் பேசலாம், உட்காருங்கள். அமைச்சர், சொல்லி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருபுவனம் சரோஜா தூக்கு போட்டு இறந்ததும் தி.மு.க. ஆட்சியில்தான் என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) அதுமட்டுமல்லாமல், மன்னார்குடி புறக்கணிக்கப்படுவதாக இங்கே சொன்னார்கள். மன்னார்குடியில், கடந்த கால ஆட்சியில். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.ஆர்.பி. ராஜா, அமைச்சர் பேசட்டும். உட்காருங்கள்.

[2013 பிப்ரவரி 6

*பிற்பகல் 12–45*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, மன்னார்குடி புறக்கணிக்கப்படுவதாகச் சொன்னார்கள். மன்னார்குடியில் கடந்த கால ஆட்சியில் (குறுக்கீடு) துணை முதலமைச்சராக இருந்த மு.க. ஸ்டாலின் அவர்கள் மன்னார்குடியில் இருந்தே, மன்னார்குடி பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டு வரப்படும் என்று அறிவித்தார்கள். மன்னார்குடி பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள் உடனே நடைபெறும் என்று அறிவித்தார்கள். அதைக் கிடப்பிலே போட்டது தி.மு.க. ஆட்சிதானே தவிர, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் இப்போதைக்கு 5,500 கோடி, 6,000 கோடி என்று ஒத்துக் கொண்டிருக்கிறார். அது சரி. ஆனால், உங்கள் ஆட்சியிலே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பது தான் கேள்வி. (குறுக்கீடுகள்) அதை விட்டு விடுங்கள். நான் அதற்குள் வரவில்லை. நான் அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போய்விட்டேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் இங்கேயே வருகிறார். அந்த நஷ்டத்திற்கு யார் காரணம், பழைய ஆட்சியில் கொப்பரைத் தேங்காய் ஊழல், மற்றதெல்லாம் எடுத்தால், இந்த சொசைட்டி முழுவதும் நலிந்து போனதற்கு முழுக்க முழுக்க அதிலே அங்கம் வகித்த தி.மு.க.வினுடைய நிருவாகிகள் தான் கொள்ளையடித்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அவர்களது ஆட்சியிலேயே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்தையாபாண்டியன் . . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பாகத்தான் சொல்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*



2013 பிப்ரவரி 6]

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியே விட்டிருந்தாலும் பரவாயில்லை. நீங்கள்தான் திரும்ப திரும்ப கிளறுகிறீர்கள். (குறுக்கீடுகள்) குப்பையைக் கிளறினால் குப்பைதான் வரும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள், அமைச்சர் பேசட்டும். உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். அதாவது அதிலே நிருவாகிகளாக இருந்தவர்கள் தான் 1996–ல் அந்த சொசைட்டியின் நிருவாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதில் நிருவாகிகளாக வந்தவர்கள் தங்களுடைய சுய இலாபத்திற்காக அதிகமான ஆட்களைப் பணியாளர்களாகப் போட்டு, வரம்பு மீறி அந்த சொசைட்டியை நிருவாகம் பண்ணச் செய்து, மேற்கொண்டு அதிக சம்பளம் போட்டு, தனக்கு கிம்பளம் கிடைப்பதற்காக கிம்பளம் போட்டு, (குறுக்கீடுகள்) அதனால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குப்பையை கிளறாதீர்கள் என்று சொன்னேன். அவர்கள் செய்ததுதான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள், பேசட்டும். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள்.*

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் உபயோகப்படுத்தப்படாத புதிய கட்டடங்களை உபயோகப்படுத்துவது மற்றும் மன்னார்குடி தொகுதியில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு நிறுத்தப்பட்டுள்ள முதியோர் உதவித் தொகையை மீண்டும் வழங்குவது போன்ற அறிவிப்புகள் இடம் பெறாதது . . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள், பேச ஆரம்பித்து விட்டார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, நீங்கள் பேசுங்கள்.*

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு நிறுத்தப்பட்டுள்ள முதியோர் உதவித் தொகையை மீண்டும்*

*வழங்குவது போன்ற அறிவிப்புகள் உரையில் இடம் பெறாதது இந்த ஆட்சியின் அலட்சியப் போக்கைக் காட்டுகிறது. (மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) முதியோர் ஓய்வூதியத் தொகை வழங்கவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வெறும் 500 ரூபாய் வழங்கப்பட்டு வந்த முதியோர் ஓய்வூதியத் தொகை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 30 இலட்சம் பயனாளிகளுக்கு முதியோர் ஓய்வூதியத் தொகை ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய ஒரே முதலமைச்சர் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள், குறுக்கீடு இல்லாமல் பேசி முடியுங்கள்.*

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக டெல்டா விவசாயிகளின் உண்மையான உற்ற தோழனாய் ஓர் அன்புச் சகோதரராக என்றும் இருப்பதால்தான் ஒரே கையெழுத்தில் 7,000 கோடி ரூபாய் விவசாயக் கடனை இரத்து செய்து கடன் சுமையால் நொடிந்து கிடந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் புத்துயிர் கொடுத்தார் தானைத் தலைவர் கலைஞர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 7,000 கோடிக்கு ஒரு கையெழுத்து என்கிறார். 7 பைசாவுக்கு போட்டாலும் ஒரு கையெழுத்துதான். 7,000 கோடிக்கும் ஒரே*



*கையெழுத்துதான். ஒரு இலட்சத்து 86,000 கோடிக்கும் ஒரு கையெழுத்துதான். ஆக, ஒரே கையெழுத்துதான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், உட்காருங்கள், திரு. ராஜா, குறுக்கீடு இல்லாமல் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசுகிறார், உட்காருங்கள்.*

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** *ஆனால், எங்கள் தலைவர் கலைஞர் அவர்களின் கையெழுத்தினால் எத்தனை விவசாயிகளின் துயர் துடைக்கப்பட்டது என்பதை மக்கள் அறிவார்கள். ஆக, இங்கே நீங்கள் எத்தனை கையெழுத்திட்டிருக்கிறீர்கள் என்பதை உங்களுக்கு நேரம் கிடைக்கும்போது சொல்லுங்கள், பரவாயில்லை. இந்த அரசின் மெத்தனப் போக்கால் நொந்து போய் குறுவை சாகுபடி பெரும்பகுதி விவசாயிகளால் கைவிடப்பட்டது. சம்பாவும் கருகிப்போய் இன்று ** விவசாயப் பெருங்குடி மக்களின் ஒரே ஒரு எண்ணம் தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழினத் தளபதி அவர்கள் விரைந்து . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் பேசுகிறபோது ** என்று சொன்ன அந்த வார்த்தை அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் ஆதாரத்தோடு பேசியிருந்தால் நான் நீக்கமாட்டேன். அமைச்சர் பேசியதற்கு அமைச்சர் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறார். நீங்கள் ஆதாரம் இல்லாமல் பேசினால் எப்படி? ஆதாரத்தை என்னிடம் கொடுத்துவிட்டுப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றும் இல்லை. ஆதாரம் கொடுத்துவிட்டுப் பேசினால் ஏற்றுக்கொள்ளலாம். அமைச்சர் பேசியதற்கு அமைச்சர் பொறுப்பேற்றுக் கொள்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உறுப்பினர் திரு. ராஜா, பேசி முடியுங்கள். பேசாவிட்டால் நான் வேறு உறுப்பினரை அழைக்க வேண்டியிருக்கும். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியாகக் கேட்டுக் கொண்டிருப்பதால் மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டியதிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிய பிறகு அவர் திரும்பவும் விளக்கம் கேட்கலாம். 10, 15 பேர் எழுந்து நின்று ஒரே குரலில் சொன்னால், யார் சொல்வது, யாருடையதைக் கேட்பது என்று தெரியவில்லை. எனவே ஏதாவது விளக்கம் கேட்க விரும்பினால் உறுப்பினர் ராஜா அவர்கள் விளக்கம் கேட்கலாம். ராஜா அவர்கள் விளக்கம் கேட்க மறந்துவிட்டால் நீங்கள் யாராவது ஒருவர் எழுந்து கேளுங்கள். 15 பேர், 20 பேர் எழுந்து கேட்டால் எப்படி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of Order என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி காய்ந்து போனதற்கும், கச்சத் தீவு கைவிட்டுப் போனதற்கும் நீங்கள்தான் காரணமே தவிர, வேறு யாரும் காரணம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, குறுக்கீடுகள் இல்லாமல் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். இல்லாவிட்டால் நான் வேறு உறுப்பினரை அழைக்க வேண்டியிருக்கும்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** விவசாயப் பெருங்குடி மக்களின் ஒரேயொரு எண்ணம் தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழினத் தளபதி அவர்கள் விரைந்து செயல்பட்டு விவசாயிகளின் துயர் துடைத்ததுபோல் இந்த ஆட்சியிலும் செய்ய வேண்டுமே என்பதாகத்தான் இருக்கிறது. ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவனாக, ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவனாக, விவசாயத்தில் ஆர்வம் மிக்கவனாக என் அன்பு விவசாய சகோதர சகோதரிகள் டெல்டா பகுதிகளில் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், இந்த ஆளுநர் உரையில் ஏதேனும் ஓர் அறிவிப்பு, குறைந்தபட்சம் இடைக்கால நிவாரணமாவது வழங்கப்படுமா என்று பூதக் கண்ணாடியை வைத்துக்கொண்டு பக்கம், பக்கமாகத் தேடினேன். ஆனால், எங்கே தேடினாலும் கிடைக்கவில்லை. விளம்பரங்களில் போடுவார்களே 'conditions apply', என்று. அப்படி ஏதேனும் எங்கேனும் சிறிதாக இருக்கிறதா என்றால், அதுவுமில்லை. தமிழகத்திற்கு...





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் கண்ணை பரிசோதித்து வந்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஏனென்றால், ஆளுநர் உரையிலேயே, நிவாரணம் வழங்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. இன்னும் (குறுக்கீடுகள்) நிவாரணம் வழங்கப்படும் என்று இருக்கிறது, நன்றாகப் படித்துப் பாருங்கள். (குறுக்கீடுகள்) காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு, (குறுக்கீடுகள்) அதாவது, இனிமேல்தான் வழங்கப்படும். (குறுக்கீடுகள்) இனிமேல்தான் நிவாரணம் வழங்கப்படும் என்று அர்த்தம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) இல்லை அவர் பேசி முடிக்கட்டும். திரு. ராஜா, உரையை முடியுங்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'வரும்; ஆனால் வராது' என்று சொல்வதைப்போலத்தான் என் காதில் விழுகிறது. தமிழினத்திற்கு உண்மையான புத்தாண்டு தைத் திருநாள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கன்னிப் பேச்சு என்று சொன்னதால் குறுக்கிடக் கூடாது என்றுதான் நினைத்தேன். ஆனாலும் குறுக்கிடுகின்ற வகையிலே அவர் ஏராளமாகப் பேசியதால் குறுக்கிட வேண்டிய கட்டாயத்தை அவரே ஏற்படுத்திக் கொண்டார். ஆனாலும்கூட அவருடைய பேச்சின் இறுதியில் அவர் சொன்ன ஒரு வார்த்தைக்கு விளக்கம் சொல்லாம் என்று கருதுகிறேன். இங்கே தமிழகத்தில் ** நடைபெறுகிறது என்று சொன்னார். மின்சார வெட்டை குறிப்பிட்டுச் சொன்னார். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த தற்காலிக மின் வெட்டிற்கு 100 சதவிகிதம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*காரணம் உங்களுடைய கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) ஆதாரத்தோடு சொல்வேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) வரிசையாகச் சொல்கிறேன். உங்களுக்குப் பொறுமை இருந்தால் செய்தியை வாங்கிக்கொண்டு பிறகு சொல்லுங்கள், பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அனைவரும் உட்கார்ந்துகொண்டு பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) இது சரியில்லை. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் விளக்கம் சொல்லுங்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்தத் தற்காலிக மின்வெட்டுக்கு 100 சதவிகிதம் காரணம் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி எள் அளவும், எள் முனை அளவுக்கும் காரணம் இல்லை. ஏனென்று சொன்னால், இதற்கு முன்பிருந்த அம்மா அவர்களின் ஆட்சியில் எப்படி தமிழகத்தில் மின் வெட்டே இல்லாத நிலை இருந்தது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். உண்மை நிலையை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக சில விளக்கங்களைச் சொல்கிறேன்.*

*கடந்த 2001 முதல் 2006 வரை நடைபெற்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஒருபோதும் மின் வெட்டே இருந்தது இல்லை. மாறாக, அதற்குப் பின்பாக வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் தொடக்கத்தில் இரண்டு ஆண்டுக்காலத்தில் மின் வெட்டு இருந்தது இல்லை. ஏனென்று சொன்னால், தேவைக்கு மேல் உற்பத்தித் திறனை ஏற்படுத்தி வைத்ததால் அங்கே அந்த இரண்டு ஆண்டுக்காலத்தில் நீங்கள் வசதியான சூழ்நிலையில் இருந்தீர்கள். ஆனால், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உற்பத்திக்கும், தேவைக்கும் ஏற்பட்ட மிகுந்த இடைவெளியை ஏறத்தாழ 4,000 மெகாவாட் அளவிற்கு மின் உற்பத்தித் தேவை கூடிவிட்டதை நீங்கள் கணக்கிலே கொள்ளாமல், அதற்குத் தேவையான அளவிற்கு மின் உற்பத்தியைப் பெருக்காததன் விளைவைத்தான் இன்றைக்கு நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். அதற்குப்பின் உங்களுடைய ஐந்து ஆண்டுக்கால ஆட்சியில் மொத்த உற்பத்தி வெறும் 206 மெகாவாட்தான். 4,000 மெகாவாட் உற்பத்தித் திறன் கூடுதல் தேவை இருக்கின்றபோது, அதை ஈடுசெய்வதற்கு உற்பத்தி செய்தது வெறும் 206 மெகாவாட்தான்.*



*அதுமட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம், கொண்டுவரப்பட்ட வல்லூர் மின் உற்பத்தித் திட்டம், என்.எல்.சி.–யோடு சேர்ந்து தூத்துக்குடி அனல் மின் திட்டம், மத்திய அரசு என்.டி.பி.சி. கூட்டு முயற்சியோடு சேர்ந்து உருவாக்கப்பட்ட வல்லூர் அனல் மின் திட்டம், இந்தத் திட்டங்களில் எல்லாம் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் மின் உற்பத்தியைத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்தில் மின் உற்பத்தி தொடங்கவேயில்லை. மாறாக, தொடக்க நிலையிலேயே இருந்துவிட்டது. நீங்கள் அந்தத் திட்டங்களையெல்லாம் விரிவுபடுத்தவில்லை. ஒருவேளை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலே உருவாக்கப்பட்ட திட்டங்கள் என்பதால்தான் நீங்கள் கிடப்பிலே போட்டுவிட்டீர்களோ, அல்லது குடும்பப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே நேரம் இல்லததால் இந்தப் பிரச்சினையிலே நீங்கள் கவனம் செலுத்த முடியவில்லையோ என்பதால், (குறுக்கீடுகள்) காரணங்கள் பல இருக்கலாம். (குறுக்கீடுகள்) ஆனால் உண்மை நிலை, (குறுக்கீடுகள்) இருங்கள் நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். இப்படியெல்லாம் ஒவ்வொரு வார்த்தைக்கும் எழுந்தீர்கள் என்றால் எப்படி? (குறுக்கீடுகள்) ஒவ்வொரு வார்த்தைக்கும் எழுந்து பதில் கேட்டீர்கள் என்றால் எப்படி? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பதில் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *அதுமட்டுமல்ல; இன்னும் பல்வேறு காரணங்களை நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் முழுமையாக சொன்னதற்குப் பின் நீங்கள் சொல்லும் பதிலை நாங்கள் கேட்பதற்குத் தயாராக இருக்கிறோம்.*

*அதற்கும் பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடுகள்) நாங்கள் சொன்ன விளக்கத்தைக் கேட்டதற்குப்பின் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நாங்கள் சொன்னதை நீங்கள் கேட்டதற்குப் பின் நீங்கள் சொல்வதை நாங்கள் கேட்பதற்குத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடுகள்) விளக்கத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை அவர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு, உட்காருங்கள். அமைச்சர் விளக்கத்தைக் கேட்டதற்குப்பின் திரு. ராஜா அவர்கள் பேசட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒவ்வொருவரும் விளக்கம் கேட்டீர்கள் என்றால், எப்படி விளக்கம் சொல்ல முடியும்? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யார் பேசுகிறார்களோ அவர்களுக்குத்தான் விளக்கம் சொல்ல முடியும். நீங்கள் ஒவ்வொருவரும் எழுந்து நின்று விளக்கம் கேட்டால் எப்படி? (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றும் கிடையாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ராஜா, (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *நீங்கள் சொன்ன குற்றச்சாட்டிற்கு நாங்கள் பதில் சொல்லவேண்டும் அல்லவா? ** என்றால் ** காரணமே நீங்கள் தானே? காரணமானவர்களே இன்றைக்கு. . . (குறுக்கீடுகள்) அதற்கு நாங்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறோம். நாங்கள் சொல்ல வருகிறோம். . . (குறுக்கீடுகள்) இதெல்லாம் நல்ல அணுகுமுறை இல்லை. இப்படியிருந்தால் நீங்கள் அவர்களை முதலில் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. செங்குட்டுவன், இதுபோல் பேசுவது அவைக்கு உகந்தது அல்ல. (குறுக்கீடுகள்) நான் எச்சரிக்கிறேன். இதற்கு மேல் எழுந்தால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். நீங்கள் நடந்துகொள்வது முறையல்ல. (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 1–00*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *அதேபோல இன்றைக்கு. . . (குறுக்கீடுகள்)*

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order *இல்லை. (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன்,* Point of order *கிடையாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே என்றுதான் சொல்லியிருக்கிறேன். அதற்கே* Point of order*–ஆ? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஜெ. அன்பழகன், நான் திரும்பத் திரும்ப சொல்லியும் நீங்கள் கேட்கவில்லை. உங்களை அவையிலிருந்து வெளியேற்றுகிறேன். அவைக் காவலர்கள் அன்பழகனை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகனை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்)*

*(திரு. ஜெ. அன்பழகன் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)*

*எல்லோரும் வரிக்கு வரி எழுந்து கேட்டால் எப்படி அவையை நடத்துவது? (குறுக்கீடுகள்) கையை நீட்டிப் பேசினால் என்ன அர்த்தம்? கையை நீட்டிப் பேசுவது அவையிலே என்ன மரபு? (குறுக்கீடுகள்) அவைத் தலைவரைப் பார்த்து கையை நீட்டிப் பேசுவது என்ன மரபு? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ராஜா, நன்றி சொல்லி ஒரு வார்த்தையில் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, அவைத் தலைவரைப் பார்த்து இந்த மாதிரி கையை நீட்டிப் பேசுவது என்ன மரபு? (குறுக்கீடுகள்)* Point of order *இப்படியா கேட்பது? இது முறையில்லை. நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. ராஜா நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். எல்லோரும் உட்காருங்கள்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தெளிவாக, புரட்சித் தலைவி அம்மா அவர்களும் இங்கே பலமுறை விளக்கமாக உங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மின்வெட்டிற்கு எங்களுடைய ஆட்சி காரணம் இல்லை என்று சொன்னாலும்கூட,*

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 பிப்ரவரி 6

அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருப்பதை நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். நான் பொறுப்பைத் தட்டிக்கழிக்க விரும்பவில்லை. இதற்குக் காரணம், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிதான் காரணம் என்று இருந்தாலும்கூட, நாங்கள் அதை பொறுப்பேற்றுக்கொள்கிறோம். எங்களுடைய ஆட்சிக் காலத்திலே வருகின்ற 2013–க்கு பின்பு தமிழகத்திலே மின்வெட்டு அறவே இருக்காது என்ற நிலையை நான் உருவாக்கிக் காட்டுவேன் என்று இங்கே வாக்குறுதி அளித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், 2013–க்கு முன்பாக மின்வெட்டு பிரச்சினை தீரும் என்று சொன்னாலும்கூட, அதற்கு முன்பாக இப்போது முதலே, வருகின்ற நவம்பர், டிசம்பர் மாதம் முதலே படிப்படியாக இந்த மின் வெட்டு நேரம் குறைக்கப்பட்டு, வருகின்ற ஜுன் மாதத்திலேயே தமிழ்நாட்டிலே மின் வெட்டே இல்லாத நிலையை உருவாக்குவேன் என்று அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர் கேட்டதற்காகச் சொல்கிறேன். எவ்வளவு நாளைக்குத்தான் இந்தப் பிரச்சினைக்கு நாங்கள் காரணம் என்று சொல்லிக்கொண்டிருக்கப் போகிறீர்கள் என்று கேட்டார். அதற்காகத்தான் சொல்கிறேன். நிச்சயமாக நீங்கள் காரணம் என்று சொன்னாலும்கூட, நீங்கள் காரணம் என்று சொல்லிவிட்டு பொறுப்பைத் தட்டிக் கழித்தால்தான் தவறு. ஆனால், ஐந்தாண்டுக் காலத்திலே மின்வெட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காண உங்களால் இயலவில்லை. ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே மின்வெட்டுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பார் என்பதை மீண்டும் ஒருமுறை இங்கே அழுத்தந்திருத்தமாக பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதிலே இப்போது முதல் சொன்னது சொன்னபடி செய்கின்ற ஆற்றல் படைத்த முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதால்தான், நேற்றுகூட விளக்கமாகச் சொன்னேன், அக்டோபர் மாதத்தில் மொத்த மின் உற்பத்தித் திறன் நாளென்றுக்கு 180 மில்லியன் யூனிட்தான் இருந்தது. அதற்கு அடுத்தபடியாக டிசம்பர் மாதத்தில் 199 மில்லியன் யூனிட் சராசரியாக தினசரி உற்பத்தி செய்கின்ற அளவு அதிகரித்தது. இப்போது ஜனவரி மாதத்தில் அந்த உற்பத்தித் திறன் ஏறத்தாழ தினசரி 225 மில்லியன் யூனிட் அளவிற்கு அதிகரித்து வந்திருக்கிறது. ஆக, 180 மில்லியன் யூனிட்டிலிருந்து 199 மில்லியன் யூனிட்டிலிருந்து, 225 மில்லியன் யூனிட் என்று நாளுக்கு நாள் படிப்படியாக உற்பத்தி



2013 பிப்ரவரி 6] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

பெருகிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னபடி செய்திருக்கிறார்களா, செய்துகொண்டு வந்திருக்கிறார்களா இல்லையா என்பதை இன்றைக்கு ஆதாரப்பூர்வமாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

அதேபோல, இது படிப்படியாக வளர்ச்சி பெற்று புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் எல்லாம் படிப்படியாக செயல்படத் தொடங்கியவுடன் வருகின்ற ஜுன் மாதத்திற்குப் பின்பு தமிழகத்திலே மின் வெட்டு இல்லாத நிலை வரும் என்று அம்மா அவர்கள் சொன்னதை மீண்டும் ஒருமுறை உங்களுக்கு உறுதியோடு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மேட்டூரிலே நடைபெறுகின்ற 600 மெகாவாட் மின் திட்டத்தில் இப்போது மின் உற்பத்தி தொடங்கப்பட்டிருக்கிறது. பரீட்சார்த்தமாக உற்பத்தியைத் தொடங்குகின்றபோது சில பிரச்சினைகள் ஏற்படும். தற்போது ஏற்பட்டிருக்கின்ற தற்காலிக குறைபாடுகளையெல்லாம் நிவர்த்தி செய்து மீண்டும் உற்பத்தியை தொடங்குகின்ற நிலையை எட்டியிருக்கிறது.

பிற்பகல் 1–05

அதைப்போலவே, வல்லூரில் முதல் யூனிட் 500 மெகா வாட் திறன் கொண்ட முதல் அலகு மின் உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது. இரண்டாவது அலகும் இப்போது 500 மெகா வாட் திறன் கொண்ட மின் உற்பத்தி அலகு மார்ச் மாதம் அளவிலே விரைவில் தொடங்க இருக்கிறது. ஆக, 2013 ஆகஸ்ட் மாத அளவிலே மூன்றாவது அலகும் உற்பத்தியைத் தொடங்க இருக்கிறது. அதைப்போலவே வட சென்னையில் 600 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு யூனிட்டுகள், 1200 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட முதல் யூனிட் உற்பத்தியைத் தொடங்கி இருக்கிறது. அதைப்போலவே, அடுத்த யூனிட்டிற்கு ஜுன் மாதத்திற்குள்ளாக இரண்டாவது யூனிட்டும் தொடங்க இருக்கிறது. அதிலும் மொத்தமாக தேவைக்கேற்ப நிச்சயமாக புதிய உற்பத்தித் திட்டங்களைத் தொடங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதனுடைய அடிப்படையில் மட்டுமல்ல, புதிய உற்பத்தித் திட்டங்களை விரைவுபடுத்துவதற்கும், ஏற்கெனவே இருக்கின்ற உற்பத்தித் திட்டங்களைச் சரியாக பராமரிப்பதன் மூலமாகவும் இன்னும் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய தேவையை அறிந்து புதிய

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 பிப்ரவரி 6

திட்டங்களுக்கான 3,300 மெகா வாட் அனல் மின் நிலையங்கள் 5x660 மெகா வாட் திறன் கொண்ட (Super Critical Thermal Power Station) பவர் ஸ்டேஷன் 5 யூனிட்டுகள் 3,300 மெகா வாட் அளவிற்கு உற்பத்தி செய்வதற்கு 1 யூனிட் அளவிற்கு இப்போது டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. அதைப்போலவே 4 யூனிட்டுக்கு இந்த மாதம் இறுதிக்குள்ளாக ஒப்பந்தப்புள்ளிகள் கேட்கப்பட இருக்கின்றன. ஆகவே, வருங்காலத்திற்கு வேண்டிய திட்டங்களையும் தீட்டி மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுத்தி இருக்கிறார்கள்.

ஆகவே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் உருவாக்கப்பட்ட அந்த மின்வெட்டுப் பிரச்சினைக்கு மாண்புமிகு அம்மாவினுடைய ஆற்றலாலும், திறமையாலும் வருகின்ற ஜூன் மாதத்திற்குள்ளாகவே முழுமையாகத் தீர்வு காணப்படும் என்பதை மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

தி.மு.க–வினர் இன்றைக்கு மின்வெட்டுப் பிரச்சினைக்குப் பதில் சொல்லவேண்டுமே என்று எழுந்து சென்று விட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், பல பிரச்சினைகளை உற்பத்தியில் மட்டுமல்ல, நிதி நிலைமையிலும் சிக்கலான நிலையை உருவாக்கிவிட்டுச் சென்றார்கள். 31–3–2006 இல் அம்மாவினுடைய ஆட்சி முடிகின்ற காலத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இருந்த கடன் ரூபாய் 10,561 கோடி. இந்த 10,561 கோடி ரூபாயும் அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் வந்தது அல்ல. ஏறத்தாழ தமிழ்நாடு மின்சார வாரியம் உருவாக்கப்பட்ட 50 ஆண்டுக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கடன் ரூ.10,561 கோடி. ஆனால், கடந்த ஐந்தாண்டுக்காலத்தில் தி.மு.க. மைனாரிட்டி ஆட்சியில் மட்டும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட கடன் சுமை ரூபாய் 45,233.25 கோடி. எவ்வளவு பாருங்கள்! அதைப்போலவே loan outstanding 49,639 கோடி. நிதிநிலையையும் சிக்கலாக்கிவிட்டுச் சென்றுவிட்டார்கள், உற்பத்தியையும் பெருக்கவில்லை, மக்களுக்கு மின்சாரமும் கொடுக்கவில்லை. மாறாக, ஏறத்தாழ 50 ஆயிரம் கோடி கடனை ஏற்படுத்திவிட்டு தமிழக மின்சார வாரியத்தை தத்தளிக்கவிட்டுச் சென்று விட்டார்கள். ஆனால், அந்த நிலையையெல்லாம் மாற்றி இன்றைக்கு நிதிநிலையை மீட்டு எடுத்திருக்கிறார்கள். அந்த நிதிநிலையிலும் ஒன்றைச் சொன்னால் இது உறுப்பினர்களுக்குப் புதிய செய்தியாக இருக்கும். இருந்தாலும் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.



2013 பிப்ரவரி 6] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

இப்படி மின்சார உற்பத்தியைப் பெருக்கி மக்களுக்கு மின் விநியோகம் செய்யவேண்டும் என்பது மட்டுமல்லாமல், கடந்த ஆட்சியில் இருந்த மின்சார வாரியத்தினுடைய நிதிநிலையைச் சீரமைப்பதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் எப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். ஒன்றே ஒன்றை மட்டும் இந்த நேரத்திலே சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தி.மு.க. ஆட்சியில் ரூபாய் 50 ஆயிரம் கோடி கடனை ஏற்படுத்திவிட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆனால், அந்தக் கடனைக் குறைப்பதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு எந்தெந்த முயற்சியெல்லாம் எடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் குறுகிய மற்றும் நடுத்தர காலக் கடன்களின் 50 சதவீதத் தொகையான 12,211 கோடி ரூபாயை தமிழக அரசே ஏற்றுக்கொள்ளும். தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய கடனில் 50 சதவீதக் கடனை அம்மா அவர்களுடைய அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், மீதமுள்ள 50 சதவீதக் கடன்களான 12,221 கோடி ரூபாயை கடன் சீர்திருத்தம் செய்துகொள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி, கடனுக்குரிய முதல் தொகையை மூன்று ஆண்டுகளுக்கு வங்கிக்குச் செலுத்தத் தேவையில்லை. இதன்மூலமாக தமிழ்நாடு மின்சார வாரியம் நிதிநிலைமையில் சற்று மூச்சுவிட முடியும்.

பிற்பகல் 1–10

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு தமிழக அரசு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலையைச் சீரமைப்பதற்காக P.F.C. – Power Finance Corporation என்ற Corporation மூலமாக, 5,000 கோடி ரூபாய் கடன் பெறுவதற்கு, தமிழ்நாடு அரசு அவர்களுக்கு guarantee– உத்தரவாதம் கொடுத்து, அந்தக் கடனை வாங்குவதற்கு வழிவகை செய்திருக்கிறது. அதைப்போல, R.E.C.–Rural Electrification Corporation Ltd., என்ற நிதி நிறுவனத்திடமிருந்து 5,000 கோடி ரூபாயைப் பெறுவதற்கும் அம்மா அவர்களுடைய அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. அதாவது, ஆக மொத்தம், 10,000 கோடி ரூபாய் நிதியைப் பெறுவதற்கு மாநில அரசே, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழிவகை செய்திருக்கிறது.

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 பிப்ரவரி 6

அதைப்போல, 2012–2013 ஆம் ஆண்டுக்கு நிச்சயமாக ஏற்படக்கூடிய கடனை இப்பொழுது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எல்லாச் செலவுகளும் கூடிவிட்டதால், இந்த இழப்பைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 12,111 கோடி ரூபாய் என்ற அளவிலே கடன் சுமை இருந்தது. அந்தக் கடன் சுமையை, நஷ்டத்தை ஆண்டுக்கு 12,000 கோடி ரூபாய் என்ற அளவிலே இருந்ததை, இந்த ஆண்டு 9,000 கோடி ரூபாய் என்ற அளவிற்கு அம்மா அவர்களுடைய அரசு குறைத்திருக்கிறது. அந்த 9,000 கோடி ரூபாய் தொகையிலும் ஏறத்தாழ 30 சதவீதத் தொகையை இந்த ஆண்டு ஏற்படக்கூடிய நஷ்டத்தில், இன்றைக்கு தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது. அம்மா அவர்களுடைய அரசு இதையும் தாயுள்ளத்தோடு ஏற்றுக்கொண்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எந்த அளவிற்கு நிதியுதவி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அந்த வகையிலே மட்டும் 2012–2013 ஆம் ஆண்டுக்கு 70 சதவீதம் தோராயமான பணம் இழப்பிற்கு, இணையாக 5,000 கோடி ரூபாய் அளவிலே கடன் வழங்க, வங்கியிலிருந்து கடன் பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இப்படி எல்லா வகையிலும் மாநில அரசு உதவி செய்கிறது. அந்த 30 சதவீதத் தொகை ரூ.2,554.90 கோடி ரூபாயை இன்றைக்கு மாநில அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதெல்லாம் சாதாரண விஷயமா? சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், 50,000 கோடி ரூபாய் தி.மு.க. அரசு நஷ்டத்தை ஏற்படுத்திச் சென்றதை, ஏறத்தாழ அதைப் பாதியாக குறைக்கின்ற அளவுக்கு இன்றைக்கு மாநில அரசே அந்தக் கடன் சுமையை ஏற்றுக்கொண்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிதிநிலையையும் சீரமைத்து இருக்கின்றது. அத்தகைய ஆற்றல் படைத்தவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், நிதிநிலைமை சீரமைக்கப்படவில்லை என்று சொன்னால், அது தொடர்ந்து இயங்க முடியாது. ஆகவே, உற்பத்தியைப் பெருக்கி, நிதிநிலைமையைச் சீரமைத்து, தமிழக மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிச்சயமாக நிறைவேற்றுவார்; நிறைவேற்றுகின்ற பணியிலே இப்பொழுது அம்மா அவர்கள் இன்றைக்கு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 பிப்ரவரி 6] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

இங்கே பல பேர் கேட்டார்கள். தி.மு.க. உறுப்பினர்கள் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இன்னும் சொல்லப்போனால், இன்னும் சில பிரச்சினைகளைக் கேட்டிருப்பார்கள். அந்தப் பிரச்சினைகளுக்குப் பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருந்திருக்கும். ஆகவே, இன்னும், தி.மு.க. உறுப்பினர்கள் பிரச்சினைகளை எழுப்பினால், அவற்றிற்கு பதில் சொல்வதற்கு எங்களுக்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. நேரம் இல்லாத காரணத்தால், அடுத்த முறை வாய்ப்புக் கிடைக்கின்றபோது, சொல்கிறேன். தி.மு.க.–வினர் எதிர்கொள்ள வரவேண்டும். தி.மு.க.–வினர் வந்து நேருக்கு நேர் விவாதம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். ஆனால், குற்றம் உள்ள மனசு குறுகுறுக்கும் என்பதாலும், அவர்கள் மடியிலே கனம் இருப்பதால், வழியிலே பயம் இருக்கிறது என்பதாலும், அவர்கள் இந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு பயந்து, வெளியேறிவிடுகிறார்கள். ஏதாவது சாக்குப் போக்கு சொல்லி, வெளியேறி விடுகிறார்களே தவிர, எதிர்கொள்வதற்குத் தயாராக இல்லை. காரணம் குற்ற உணர்வு அவர்களை குறுகுறுக்க வைக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

பிற்பகல் 1–15

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின் பேரிலே எனது கருத்துகளை பதிவு செய்கிற ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிற தங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரை என்பது ஒரு நல்ல நூலுக்கு முன்னுரையாக இருப்பதைப்போல. இந்த ஆளுநர் உரை என்பது கடந்த ஆண்டு, இந்த ஆட்சி நடைமுறைப்படுத்தியிருக்கிற ஏராளமான நலத் திட்டங்களுக்கு அணிந்துரையாகவும், வர இருக்கிற நடப்பு நிதியாண்டிலே இந்த ஆட்சி புதிதாக நடைமுறைப்படுத்தயிருக்கிற பல்வேறு திட்டங்களுக்கு முன்னுரையாகவும், ஆக ஒரு நல்ல அணிந்துரையாகவும், ஒரு சிறப்பான முன்னுரையாகவும் ஒருசேர அமைந்திருக்கிறது என்பதனால் இந்தத் தீர்மானத்தை நான் நன்றியோடு வழிமொழியக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2013 பிப்ரவரி 6

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

எனது கருத்துகளைப் பதிவு செய்வதற்கு முன்னால், இரண்டொரு தினங்களுக்கு முன்னால் உச்ச நீதிமன்றத்திலே கிடைத்திருக்கிற தமிழக மக்களின் உரிமைக்கான ஓர் அற்புதமான தீர்ப்பைப் பெற்றுத் தருவதற்கு மிகப் பெரிய அளவிலே நீண்ட நாள் போராட்டத்தை மாநில உரிமைகளுக்காக தலைமையேற்று நடத்திய நம்முடைய முதலமைச்சர், போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்களை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தைப் பற்றி மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு மேலாக யாரும் விளக்கவுரை சொல்லமுடியாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள், தொடக்க உரையில் சொன்ன ஆட்சேபகரமான வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், யார் ஆட்சியில் மின்சாரத் துறை ** தள்ளப்பட்டு, அதனால் தமிழகம் ** இருந்தது என்ற நல்ல விளக்கத்தினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் சொன்ன கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு முனைவர் செ.கு. தமிழரசன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே காவிரி கடை மடைப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்காகவும், காவிரி நதிநீரை அடிப்படையாக வைத்து வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிற வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்காகவும், இந்த நதிநீர்ப் பிரச்சினை வழக்கு என்பது ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்கு

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2013 பிப்ரவரி 6] [முனைவர் செ.கு. தமிழரசன்]

மேலாக தமிழகத்தில் நீண்ட நெடிய வரலாற்றோடு இணைந்துவிட்டதொரு வழக்காகவே இருந்து கொண்டிருப்பதை நாம் அறிவோம். 20 ஆண்டுகளுக்கு மேலாக காவிரி நதிநீர் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டும், அந்த நதிநீர் நடுவர் மன்றம் இறுதியாகவோ, உறுதியாகவோ ஒரு தீர்ப்பை அளித்திட முடியாத ஒரு நிலைமை நீடித்திருந்ததை நாம் பார்த்திருக்கிறோம். நம்முடைய போற்றுதலுக்குரிய தமிழக முதல்வர், அவர்களுடைய மிகக் கடுமையான போராட்டத்தின் விளைவாக ஒரு நீண்ட தொலைநோக்குப் பார்வையோடும் ஆழ்ந்த மதிநுட்பத்தோடும் அவர்கள் ஒரு நல்ல அணுகுமுறையோடு உச்ச நீதிமன்றத்திலே தொடர்ந்து தளராமல் வழக்கை எடுத்து வைத்து, நம்முடைய உரிமைகளுக்காக எந்த சமரசமும் இல்லாமல் போராடிய அந்தப் போராட்டத்தின் விளைவாக இன்றைக்கு மிகச் சிறந்ததொரு தீர்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. அந்தத் தீர்ப்பு இறுதியானது இல்லை என்றாலும்கூட, தமிழகத்திற்கு இருக்கிற அந்த காவிரி நதிநீர் உரிமையை மத்திய அரசு இதழிலே வெளியிடுவதற்கான அந்த ஆணையைப் பெற்றிருக்கிற அந்தத் தார்மீக உரிமை இருக்கிறதே, அது சட்டத்தின் மாட்சி மட்டுமல்ல நம்முடைய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சித் திறனுக்குக் கிடைத்திருக்கிற மாட்சி என்பதனாலே நான் மகிழ்ச்சியோடு எனது பாராட்டுகளை இந்த மாமன்றத்திலே பதிவு செய்திடவேண்டுமென்று விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்த ஆளுநர் உரையிலே என்ன இருக்கிறது, கொள்கை இருக்கிறதா, திட்டம் இருக்கிறதா என்று இந்த அவைக்கு வந்திருந்து பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்தபோதும், வராமலேயே வெளியே இருந்து 'வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ' என்று சிலர் பேசி கருத்து அளிக்கிறார்கள். இதில் கொள்கை இருக்கிறதா, திட்டம் இருக்கிறதா, கொள்கை என்று இருந்தால் தானே அது வரும், அது திட்டமாகும் என்று ஏகடியம் பேசுகிறார்கள். எடுத்த எடுப்பிலே இந்த ஆளுநர் உரையிலே மிகத் தெளிவாக ஒரு கருத்தியல் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 1–20*

இந்த ஆட்சியின் நோக்கம், குறிக்கோள், இலட்சியம் என்பது பங்கீட்டு நீதியுடன்கூடிய ஒரு பொருளாதார வளர்ச்சி. யாரோ சிலருக்குக் கிடைக்கிற வளர்ச்சி, ஒரு குடும்பத்திற்குக் கிடைக்கிற வளர்ச்சி, அந்தக் குடும்பத்தைச் சூழ்ந்திருக்கக்கூடியவர்களுக்குக்

கிடைக்கிற வளர்ச்சி அல்ல. பங்கீட்டு நீதி என்பதுதான் இந்த நாட்டின் ஜனநாயகத்தின் அச்சாணியாக இருக்கக்கூடிய ஒரு தன்மை. அனைத்துத் தரப்பு மக்களுக்கும், அது ஏழையாக இருந்தாலும், பணக்காரர்களாக இருந்தாலும், உழுபவனாக இருந்தாலும், நிலச் சொந்தக்காரனாக இருந்தாலும் ஒட்டுமொத்த சமூகத்திற்கு, மக்களுக்குக் கிடைக்கக்கூடிய வளர்ச்சியாக அந்த வளர்ச்சி இருக்க வேண்டும். அதுதான் பங்கீட்டு நீதி என்பது. அதுதான் social justice என்பது. அந்த அடிப்படையில் பங்கீட்டு நீதியுடன்கூடிய ஒரு பொருளாதார வளர்ச்சி இந்த ஆட்சியின், அரசின் மைய இலட்சியமாக இருக்கிறது என்கிற அந்தத் தத்துவத்தை தொடங்கி நம்முடைய ஆளுநர் உரை தொடங்குகிறது.

ஒரு நாட்டினுடைய வளர்ச்சி என்பது அந்த நாட்டின் தேசப் படத்தின் வளர்ச்சி அல்ல. அந்த நாட்டு மக்களின் வளர்ச்சி. அந்த நாட்டு மக்களின் வளர்ச்சி என்பது, வெகு மக்களின் வளர்ச்சி, வெகுமக்களின் வளர்ச்சி என்பது ஏழை, எளிய, நலிந்த அடித்தளத்து மக்களின் வளர்ச்சி. ஆகவே, பணக்காரர்களின் வளர்ச்சி. என்பதை கருத்திலே கொள்ளக்கூடாது. வாய்ப்பற்றவர்களின் வளர்ச்சி என்பதுதான் ஓர் அரசின் நோக்கமாகவும், அதனுடைய பிரதான இலட்சியமாகவும் கொண்டாட வேண்டுமென்று அரசியல் சட்டத்தை எழுதுகிறபோதே, அரசியல் சட்டத்தின் தந்தை அண்ணல் அம்பேத்கர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்போல, பங்கீட்டு நீதியுடன்கூடிய ஒரு பொருளாதார வளர்ச்சிக்காக இந்த அரசு முனைகிறது, செயல்படுகிறது என்கிற அந்த சித்தாந்தத்தைத் தொடக்கமாக வைத்து தொடங்கப்படுகிற நம்முடைய ஆளுநர் உரையிலே ஏராளமான திட்டங்களும், கொள்கைக் குறிப்புகளும் ஆங்காங்கே நிரவிக் கிடக்கின்றன.

குறிப்பாக, விருதுகளிலே தொடங்குகிறபோது, பகுத்தறிவுத் தந்தை பெரியாருக்கு விருது கண்டது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். சமூகப் புரட்சியின் சின்னமாக விளங்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு விருது கண்டது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அப்படி உழைத்தவர்களைப் பாராட்டுகிற அதன் வழியிலே உழைக்கும் தன்மையை உருவாக்குகிற, அந்த வழியிலே உழைத்துக் கொண்டிருக்கக்கூடியவர்களைச் சிறப்பிக்கிற அந்த உணர்வோடு, தமிழ் உணர்வோடும், சித்திரைத் திருநாளை மீண்டும் பெற்றெடுத்த



நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்கூறும் நல்லுலகம் பாராட்டுகிற வகையிலே, தமிழ் அறிஞர்களைச் சிறப்பிக்கிற வகையிலே இந்த நடப்பு ஆளுநர் உரையிலே, இந்த நிதியாண்டிலே, கம்பர் பெயரிலே ஒரு விருதையும், சொல்லின் செல்வர் என்று சிறந்த தமிழ் அறிஞர்களைச் சிறப்பிக்கிற ஒரு விருதையும் அறிமுகப்படுத்தியிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன், பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே, ஓர் உயரிய சமூக நோக்கோடு கடுமையான எச்சரிக்கையை இந்த ஆளுநர் உரையிலே, . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இன்னும் பத்து உறுப்பினர்கள் பேச வேண்டும். நீங்கள் ஐந்து நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையின் மரபுகளுக்கோ, உங்கள் உத்தரவுக்கோ நிச்சயமாக நான் மாறுபட்டு பேசுகிறவன் அல்ல. ஆனாலும், வெகுமக்களின், அடித்தளத்து மக்களின் ஒதுக்கப்பட்ட மக்களின் ஒரு பிரதிநிதியாக எனக்குக் கொஞ்சம் நேரம் அதிகமாக ஒதுக்கித் தர வேண்டுமென்று விழைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதனால்தான் உங்களுக்குக் கூடுதலாக ஐந்து நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** எடுத்த எடுப்பிலேயே நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஆளுநர் உரையின் முன்னுரையிலேயே ஒரு கடுமையான எச்சரிக்கையை, இன்றைக்கு அவசியப்படுகிற ஓர் எச்சரிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். சாதிய, மத உணர்வுகளை யார் எவ்வகையிலே தூண்டினாலும் இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்கிற ஒரு வரியை (மேசையைத் தட்டும் ஒலி) நான் கடந்த காலங்களிலே இருந்து பார்த்து இந்த வரிகளை, இந்த வரிகளின் பின்னணிகளை, இந்த வரிகளுக்குப் பின்னால் இருக்கின்ற வடிவங்களை, சூழல்களைப் பார்க்கிறேன். ஒரு கூடங்குளம் பிரச்சினையை வைத்து சிறுபான்மைச் சமுதாயமான கிருஸ்தவ மக்களை இந்த அரசுக்கு எதிராக்கிவிட முடியாதா என்று சிலபேர் துடித்தார்கள், தூபம் போட்டார்கள், அந்தப் பிரச்சினையை வளர்த்தார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சமரசமற்ற, ஒரு சாதியசார்பற்ற அந்தப்

போக்கினால் அதை முளையிலேயே கிள்ளி எறிந்தார்கள். ஒரு திரைப்படத்தின் வழியாக சிறுபான்மை இஸ்லாமிய சமுதாயத்தை இந்த அரசுக்கு எதிராக திருப்பிவிட முடியாதா என்று சிலர் திட்டமிட்டார்கள். அதை வளர்ப்பதற்கு நீர் ஊற்றினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழக்கம்போல அவருடைய அரசியல் தந்திரத்தால், அந்தச் சாதுர்யத்தால், திறனால் அதையும் மிக அழகாகக் கிள்ளி எறிந்தார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–25*

அதைப்போலவே தமிழகத்தில், அமைதிப் பூங்காவாகத் திகழக்கூடிய இந்த மாநிலத்திலே சாதிய மோதல்களை உருவாக்கி, அந்த மோதல்களிலே குளிர் காய முடியாதா, இழந்த செல்வாக்கை மீட்டெடுக்க முடியாதா, தனக்கும், தனது வாரிசுகளுக்கும், குடும்பத்தினருக்கும் ஏதோ அரசியலிலே ஓர் உயர்வு கிடைப்பதற்கான வழியைத் தேட முடியாதா, குட்டை குழம்பாதா, மீன் பிடிக்க முடியாதா என்றெல்லாம் சிலர் திட்டமிட்டு, சாதிய மோதல்களை உருவாக்குவதற்கு, சாதிய சிக்கல்களை உருவாக்குவதற்கு அமைதிப் பூங்காவாக இருக்கின்ற இந்த தமிழகத்தை அமளிக் காடாக்குவதற்கு, அப்படிப்பட்ட ஒரு சூழலை உருவாக்குவதற்கு விதை போட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இந்த விதைகளை முளைக்காதவாறு, முளையிலேயே கிள்ளி எறிவதற்குத்தான் ஒரே வரியிலே இன்றைக்கு இந்த ஆளுநர் உரையிலே முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். சாதிய, மத உணர்வுகளை யார் தூண்டினாலும் இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லியிருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். எளிய மக்களின் சார்பிலே அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தப் பிரச்சினைகளிலே நான் இப்படிப்பட்ட ஓர் ஆழமான கருத்தை வலுவாகத் தெரிவிப்பதன்மூலம் நான் இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தேசிய அளவிலே இருப்பதைப்போல ஒரு தாழ்த்தப்பட்டோர் நல ஆணையத்தை மாநில அளவிலே உருவாக்க வேண்டும். வேறு சில மாநிலங்களிலே இந்த மாநில ஆணையம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. நம்முடைய





மாநிலம் எப்போதுமே பகுத்தறிவுச் சிந்தனையிலும், சமூக சமத்துவச் சிந்தனையிலும் ஒரு முன்னோடி மாநிலமாக இருக்கக்கூடிய மாநிலம். ஆகவே, கேரளத்தைப்போல, மராட்டியத்தைப்போல, உத்திரப்பிரதேசத்தைப்போல, ராஜஸ்தானைப்போல தமிழகத்திலேகூட மாநில அளவிலான ஒரு தாழ்த்தப்பட்டோர் நல ஆணையத்தை, சுய அதிகாரம் நிரம்பிய அந்த ஆணையத்தை உருவாக்கிட வேண்டும் என்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன், எடுத்துரைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் நேரத்தைக் குறுக்கச் சொன்ன காரணத்தினால் நான் அதன் உள்ளே ஆழமாகச் செல்ல விரும்பவில்லை. ஏனென்றால் சமீபத்திலே தருமபுரி மாவட்டம், அண்ணா நகரம், நத்தம், கொள்ளன்குட்டாய் போன்ற கிராமங்களிலே 250–க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களினுடைய குடிசைகள் தரைமட்டமாகியது. அரை நூற்றாண்டு காலமாக பெங்களூருவுக்கும், கோயம்புத்தூருக்கும், பிற நகரங்களுக்கும்போய் கொத்தனார்களாக, கூலியாட்களாக, எடுபிடிகளாக வாழ்ந்து, உழைத்து, சேர்த்து, சேமித்து அவர்கள் கட்டிய வீடுகள், தொலைக்காட்சிகள், மோட்டார் சைக்கிள்கள், கார் உள்ளிட்ட அவர்களுடைய அனைத்துப் பொருட்களும், கோயில் நகைகளும்கூட கொள்ளை போயின. ஆகவே, அந்தச் சூழல் உருவாகிறபோது, தேசிய தாழ்த்தப்பட்ட ஆணையம் பெங்களூருவிலிருந்து வந்து அப்படியே தருமபுரியிலிருந்து பெங்களூருவுக்குப்போய் திரும்பியது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே தாழ்த்தப்பட்ட நல ஆணையம் என்ற ஒன்று இங்கே இருக்குமேயானால், இந்த ஆணையம் இத்தகைய பிரச்சினைகளை முறையாகவும், ஆழமாகவும், விரிவாகவும் ஆராய்வதற்கான வசதியும் அப்படிப்பட்ட உரிமையும் நமக்குக் கிடைக்கும். ஆகவே, பல வகைகளிலே பார்க்கிறபோது இந்த மாநில ஆணையமானது அவசியமாகிறது. எனவே, இது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே ஏராளமான கொள்கைகள், கோட்பாடுகள் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. மாநில சுயாட்சி என்று வாய் கிழிய, மார் தட்டி மேடைகளிலே பலர் ஆண்டுக்கணக்காக ஆவேசமாக முழக்கமிட்ட காட்சிகளைப் பார்த்திருக்கின்றோம். ஆனால், இந்த ஆட்சி இருக்கிறதே,

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2013 பிப்ரவரி 6

நம்முடைய போற்றுதற்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலான இந்த ஆட்சி இருக்கின்றதே, (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் போன்றதொரு ஆட்சி, மாநில மக்களின் உரிமைகளுக்காக, மாநில ஆட்சியின் அந்த சுய அதிகாரத்திற்காக, மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று வெறுமனே நம்முடைய கூட்டாட்சித் தத்துவம் சொல்கிறதே, அதன் உண்மைப் பொருளாக, உண்மை வடிவமாக ஒரு ஆட்சியும் ஒரு நிர்வாகமும் இருக்குமென்றால், அது நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலான ஆட்சியாகத்தான் இருக்க முடியும்.

*பிற்பகல் 1–30*

ஆளுநர் என்பவர் மத்திய அரசின் அடையாளமாக இருக்கக்கூடியவர்; மத்திய அரசின் பிரதிநிதியாக இருக்கக்கூடியவர்; மத்திய அரசால் நியமிக்கப்படுபவர்; மத்திய அரசிலே ஆளுகின்ற ஆளுங்கட்சிக்கு அனுசரணையாக இருக்கக்கூடியவர்; அப்படிப்பட்டவர்தான் ஆளுநராக வரமுடியும். அந்த ஆளுநரே மத்திய அரசின் மாறான கொள்கைகளை, மாநில அரசின் உரிமைகளை, அவர் வழியாக, அவர் வாயிலாக, அவர் வாயினாலேயே எடுத்துச் சொல்கின்ற வகையிலே இந்த ஆளுநர் உரை இருக்கிறதென்றால், அப்படிப்பட்டதொரு ஆளுநர் உரைக்கு அச்சாணியாக இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமருங்கள், அமருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். உங்கள் பேச்சை முடியுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** ஆளுநர் உரையிலே மத்திய அரசு அறிமுகப்படுத்தியிருக்கின்ற நலத் திட்டங்களெல்லாம் இனி காசாகத் தரப்படும், காசோலையாகத் தரப்படும், நேரடியாக அந்தப் பயனாளிகளுக்கே தரப்படும் என்றெல்லாம் சொல்கின்றபோது, இதை நம்முடைய மாநில அரசு ஒருபோதும் ஒப்புக்கொள்ளாது, ஏற்காது, நடைமுறைப்படுத்தாது. நலத் திட்டங்களிலே உதவித் தொகையைப்போல, கல்வி உதவித் தொகையைப்போல, தேவைப்படுபவற்றை மட்டும்தான் காசோலையாகத் தருவோமே தவிர, மற்றவற்றையெல்லாம் திட்டங்களாக நிறைவேற்றுவோம், நலத் திட்டங்களாக நிறைவேற்றுவோம் என்று ஆளுநர் வழியாகவே (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசின் மாறுபட்ட



2013 பிப்ரவரி 6] [முனைவர் செ.கு. தமிழரசன்]

கொள்கைகளுக்கு மாறுபட்டு நிற்கின்ற அப்படிப்பட்ட ஒரு நிலையை நாம் பார்க்கிறோம். அது காவிரிப் பிரச்சினையானாலும், மீனவர் பிரச்சினையானாலும், பன்னிரண்டு முறை மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன், பதில் இல்லை, மத்திய அரசு மௌனம் காக்கிறது, பாராமுகத்தோடு இருக்கிறது, கேளா செவியோடு இருக்கிறது என்று ஆளுநர் உரையிலே மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையை மிகத் தெளிவாகத் சொல்ல முடிகிறது என்றால், உண்மையிலேயே மாநிலத்தின் உரிமைகளுக்காகப் போராடுகின்றவர்கள், மாநிலத்தின் சுயாட்சிக்காகப் போராடுகின்றவர்கள், மாநிலத்தின் அதிகாரத்திற்காகப் போராடுகின்றவர்கள் தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டத்தில் யாராக இருந்தாலும் புரட்சித் தலைவியின் இந்த உறுதியை, இந்த சீரிய நோக்கை, அசையாத, தளராத கொள்கை வளத்தைப் பாராட்டியே ஆகவேண்டும்; பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். நான் இன்னும் ஒன்றிரண்டை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். நேரம் கருதி நான் சுருக்கிக் கொள்ள விழைகின்றபோதும், ஒன்றிரண்டை நான் இங்கே பதிவு செய்தாக வேண்டும். ஆளுநர் உரையிலே, வளர்ந்து வருகின்ற நகர்ப்புற வறுமை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது. சுருக்கமாகப் பதிவு செய்து, மகிழ்ச்சியாக நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) அடுத்த வாய்ப்பு வரும்போது பேசுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இந்த ஆளுநர் உரையிலே வளர்ந்து வருகின்ற நகர்ப்புற வறுமையை ஒழிப்பதற்காக முன்னுரிமை தந்து அதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்ற நம்முடைய மாநில அரசு, அதிலே ஒரு பகுதியாக சென்னையிலே ஏறக்குறைய 207 கோடி ரூபாய் அளவிலே நடப்பு நிதியாண்டிலே 2,775 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு, ஏழை மக்களுக்கு, குடிசை மக்களுக்கு, குடிசைகளை அகற்றும் வகையிலே கட்டுவதற்கு திட்டம் இயற்றியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏழை மக்களுக்குத் துணை நிற்கின்ற வகையிலே, புதிதாக வருகின்ற இளைஞர்களுக்கு நம்பிக்கை தருகின்ற வகையிலே, 2023 ஆம் ஆண்டுக்குள் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற ஒரு அற்புதமான

*திட்டத்தை, (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே அளிக்கப்பட்டிருக்கின்ற 50 இலட்சம் பணி நியமனங்களுக்கும் மேலாக இன்னமும் ஒன்றரை கோடி பேருக்கு நிச்சயமாக நமது மாநில அரசு 11 ஆண்டுக் காலத்திலே வேலைவாய்ப்பைத் தரும் என்கின்ற நம்பிக்கையை, உறுதியைத் தந்திருப்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*ஒன்றை நான் சொல்லியே ஆகவேண்டும். கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஒரே நாளில், ஒரே இடத்தில், இந்த மாநிலத்தில் கல்வித் துறையில், எந்தவிதமான பெரியதொரு ஐயமோ, கேள்விக்குறியோ எழாமல், 21,000 பேருக்கு, வேறு எந்த உலக ஜனநாயக நாட்டிலும் அப்படிப்பட்ட ஆசிரியர் பணி நியமனம் நடந்ததாக எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)* One Stroke, one order. *21,000 பேருக்கு பணி நியமனம் செய்த அரசு, அப்பழுக்கில்லாமல், ஒரு குறை இல்லாமல், எங்கிருந்தும் ஒரு ஐயமும் எழாமல், சின்ன ஒரு சந்தேகமும் வராமல், ஊழல் இல்லாமல் 21 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு தந்த அரசு. ஆகவே இதைச் செய்திருக்கிற இந்த அரசு, இன்னமும் அந்த ஒன்றரை கோடி மக்களுக்கும் வாழ்வளிக்கும் என்கிற நம்பிக்கையைப் பாராட்டி, என்னுடைய ஒரு கோரிக்கையை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.*

*பிற்பகல் 1–35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் உங்களுடைய உரையை மகிழ்ச்சியாக நிறைவு செய்யுங்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *தமிழகத்திலே பல இலட்சம், ஏறக்குறைய 75 இலட்சத்திற்கும் மேற்பட்ட பறை இசைக் கலைஞர்கள் இருக்கிறார்கள். அந்த இசை இன்றைக்கு ஒரு சமூகத்திற்கான தொழிலாகவே உருவாகிப்போனது காலத்தின் கோளாறு. ஆக, இந்தப் பறை இசைக் கலைஞர்களுக்காக ஒரு நல வாரியம் வேண்டும். ஓவியர்களுக்குக்கூட நல வாரியம் இருக்கிறது. வேறு பல தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு நல வாரியம் இருக்கிறது. ஆனால், பல்லாண்டுக்காலமாக இந்த இசையை, இது இல்லாத ஒரு இழவு இந்தியாவில் இருந்திட முடியாது என்கிற அளவுக்கு, வாழ்வின் இறுதிக் கட்டத்தோடும், வாழ்வின் ஒரு பங்காகவும் அமைந்து போயிருக்கிற, அதையே தொழிலாக வைத்திருக்கிற, பரம்பரை பரம்பரையாய் தொழிலாய் வைத்திருக்கிற, அதனால் ஓர் இழிவுக்கு உள்ளாகிற இந்த மக்களுக்கு விடுதலை கருதியும், இந்த மக்களின் மேம்பாடு கருதியும், அந்தத் தொழிலுக்கு ஒரு சிறப்புத் தகுதி வந்திட வேண்டும் என்பதற்காகவும் பறை இசைக் கலைஞர்களுடைய நல வாரியத்தை மாநில அரசு கனிவோடு பரிசீலித்து உருவாக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, கொஞ்சம் இருங்கள் அம்மா. திரு. உ. தனியரசு, பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, வரிசைப்படி வருகிறது அம்மா. (குறுக்கீடு) வருகிறது, வருகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தனியரசு, பேசுங்கள். (குறுக்கீடு) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் பேசுகிறார். (குறுக்கீடு) அம்மா, முன் வரிசைத் தலைவர்கள் வரிசையாக பேசிக்கொண்டு வருகிறார்கள். (குறுக்கீடு) இல்லை, வரிசையிலிருந்து அப்படி வருகிறார்கள். (குறுக்கீடு) நாளைக்கு இல்லை அம்மா, இன்றைக்கு முடிக்க வேண்டும். (குறுக்கீடு) உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**செல்வி கே. பாலபாரதி:** இன்றைக்கு இரண்டாவது நாள் பொது விவாதம். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. உ. தனியரசு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை அம்மா. நீங்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) நாளை போதுமான நேரம் இல்லாத காரணத்தினால், இன்றைக்கே முடிக்க வேண்டியிருப்பதால், இந்தப் புதிய முறையை எடுக்க வேண்டியிருக்கிறது. சென்ற முறையும் இப்படித்தான் கடைபிடிக்கப்பட்டிருக்கிறது அம்மா. (குறுக்கீடுகள்) நாளைக்கு முன் வரிசையில் இருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர்கள் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் இருங்கள், நான் பேசிவிடுகிறேன். இருங்கள். (குறுக்கீடுகள்) நாளைக்கு முன் வரிசையில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் பேச வேண்டியிருப்பதால், சென்ற முறை கையாண்டது மாதிரி இந்த முறையும் கையாண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்) உங்களுக்கு

*வாய்ப்பு இருக்கிறதம்மா. இன்றைக்கு நீங்கள் கண்டிப்பாகப் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு நீங்கள் பேசுகிறீர்கள் அம்மா. (குறுக்கீடுகள்) அவர்கள் அந்தக் கட்சியினுடைய தலைவர்கள். (குறுக்கீடுகள்) அம்மா, அவர்கள் அந்தக் கட்சியினுடைய தலைவர்கள். அவர்கள் முன் வரிசையில் அந்தக் கட்சியினுடைய தலைவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை அம்மா, நாளைக்கு கால அவகாசம் இல்லை. இன்றைக்கு முழுவதும் எடுத்துக்கொண்டு (குறுக்கீடுகள்) நாளைக்கு மறுநாள் எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பதிலுரையும் இருக்கிறது. (குறுக்கீடுகள்) நாளைக்கு முன் வரிசைத் தலைவர்கள் மட்டும். இன்றைக்கு மனித நேய மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள், நாளையதினம் கட்சித் தலைவர்கள் அம்மா. (குறுக்கீடுகள்) இன்றைக்கு முன் வரிசையில் நீங்கள் பேசுகிறீர்கள். வரிசைப்படி வருகிறீர்கள். (குறுக்கீடுகள்) இதே முறை முன்பும் கையாளப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையை அறையில் பேசி முடித்துக்கொள்ளலாம். இந்த விஷயத்தை அறையில் வைத்துப் பேசலாம். நாளையதினம் முன் வரிசைத் தலைவர்கள் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசட்டும், நீங்கள் இங்கே வாருங்கள் அம்மா. (குறுக்கீடுகள்) நீங்கள் இங்கே என் இருக்கைக்கு வாருங்கள் அம்மா சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. உ. தனியரசு, நீங்கள் பேசுங்கள். கால அவகாசத்தைப் பொறுத்து இந்த முடிவை எடுத்திருக்கிறோம்.* Due to the situation. *(குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள், நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தனியரசு பேசட்டும், பிறகு நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) பேசுங்கள் தனியரசு.*

*பிற்பகல் 1–40*

**திரு. உ. தனியரசு:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தனியரசு பேசட்டும், நீங்கள் உட்காருங்கள் அம்மா. உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு) உறுப்பினர் திரு. தனியரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசுகிறார். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர்கள் நாளையதினம் பேசுகிறீர்கள். (குறுக்கீடு) திரு. தனியரசு, நீங்கள் பேசுங்கள்.*





**திரு. உ. தனியரசு:** *2013 ஆம் ஆண்டிற்கான ஆளுநரின் பேருரைக்கு நன்றி பாராட்டிப் பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Discuss *செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடித்துவிடட்டும், நீங்கள் உட்காருங்கள் அம்மா. அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசுகிறார், நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன்.*

**திரு. உ. தனியரசு:** *2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் விநாடி தொடங்கி இன்றுவரை தான் தேர்தலில் . . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *நாளையதினம் எதிர்க்கட்சித் தலைவர் பேசுவார். (குறுக்கீடு) நாளையதினம் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒரே நாளில் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு)*

**திரு. உ. தனியரசு:** *சொன்ன வாக்குறுதிகளையெல்லாம் சுமை என்று கருதாமல், சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றுவதுதான் சுகம் என கருதிடும் . . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தனியரசு, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, நீங்கள் பேசுங்கள்.*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது.*

**செல்வி கே. பாலபாரதி:** *ஏன் நேரத்தைக் குறைத்துவிட்டீர்கள்? மத்திய அரசினுடைய பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் நடத்தப்படுகிற அனைத்து சீர்குலைவு நடவடிக்கைகளையும் தமிழக அரசு கடுமையாக எதிர்த்துவருவதும், மாநில மக்களின் உரிமையைத் தொடர்ந்து வலியுறுத்தி, போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதையும் குறைத்தோ, மிகைப்படுத்தியோ மார்க்சிஸ்ட்*

கம்யூனிஸ்டு கட்சி பார்க்கவில்லை. இது இக்கால உலகமய அரசியல் சூழ்நிலையில் மாநில அரசினுடைய, மக்களினுடைய உரிமைகளை வலுப்படுத்துவதற்கான மிக முக்கியப் போராட்டம் என்ற வகையிலே தமிழக மாநில ஆளுநர் உரை அமைந்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பாக வரவேற்கின்றோம்.

இரண்டாவது, தேயிலை தொழிற்சாலை, நகர்ப்புற குடிசை வீடுகள் மாற்றம் போன்ற மாநில அரசினுடைய திட்டங்கள் மக்களுக்குப் பயன்படும் என்ற முறையிலே அவற்றை வரவேற்கிறோம். அதேசமயத்தில், ஆளுநர் உரையில், வறுமை ஆண்டுதோறும் குறைந்து வருவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிக் குறைந்து வந்திருந்தால் மிகவும் மகிழ்ச்சியடைவோம். ஆனால், வறுமை ஆண்டுதோறும் வளர்ந்து வருகிறது. ஆளுநர் உரையில் அத்தகைய கூற்றில் உண்மையில்லை என்பது நமது மாநில அரசுக்கும் நன்றாகத் தெரியும். இந்த வறுமையை உயர்த்தக்கூடிய வேளையில், மத்திய அரசினுடைய இரட்டை டீசல் விலை உயர்வும் இணைந்திருக்கிறது. மத்திய அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கக்கூடிய on–line வர்த்தகத்தின்மூலமாக அத்தியாவசியப் பொருட்களினுடைய விலை உயர்வு என்பது தொடர்ந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், தமிழக அரசு இன்றைக்கு விலையில்லாமல் அரிசியை ரேஷன் கடைகளில் கொடுத்தாலும், 100 மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய மளிகைக் கடையில் அரிசியின் விலை கடுமையாக உயர்ந்து கொண்டிருப்பது அரசுக்கும் தெரியும், மக்களுக்கும் தெரியும். அரிசி மட்டுமல்லாமல், அவசியத் தேவையாகக் கருதப்படும் உணவுப் பொருட்களான பருப்பு விலையிலிருந்து காய்கறி, பால் ஆகிய அனைத்துப் பொருட்களினுடைய விலையும் கடுமையாக உயர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு தமிழக அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய வேண்டுகோளாக தங்கள் முன்னால் நான் வைத்துக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், அரசு சார்பில் canteen என்பது நம்முடைய தலைநகரிலே அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இது நல்ல நடவடிக்கை. ஆனால், இதே தலைநகரமான நம்முடைய சென்னையிலும் மற்ற மாவட்டங்களில் இருக்கக்கூடிய ஓட்டல்களில் மதிய உணவு சாப்பாடு . . .





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்முடைய தமிழகத்தில் உணவு மற்றும் பருப்பு இவைகளின் விலை உயர்ந்து கொண்டிருப்பதாகவும், அதிலே மாநில அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்கின்ற கருத்தினை இங்கே சொன்னார்கள்.

பிற்பகல் 1–45

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பது மக்களுக்காக, மக்கள் நலனுக்காக நடத்தப்படுகிற, மக்கள் நலனுக்காக ஒவ்வொரு நாளும் செயல்படுகிற அரசு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், தமிழக மக்களுக்கும் நன்றாகவே தெரியும். அதனடிப்படையிலேதான், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், தமிழகத்தில் இருக்கிற 1.84 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விலையில்லா அரிசி கொடுக்கிற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்; ஒரே முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதனை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் காலையிலே குறிப்பிட்டதைப் போல, நம்முடைய மாநிலத்தில் 3.18 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், விலை ஏறுகிறபோது வெளிச் சந்தையில் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக, விலையைக் கட்டுப்படுத்துகிற வகையில் ரூ.50 கோடி அளவில் ஒரு விலைக் கட்டுப்பாடு நிதியத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதனடிப்படையிலே சென்ற ஆண்டு புளி மற்றும் மிளகாய் விலை ஏறியபோது, ரூ.50 கோடியில் அமைக்கப்பட்ட ஆணைய நிதியிலிருந்து கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரியிலிருந்து புளியையும், இராமநாதபுரம் மற்றும் சாத்தூரிலிருந்து மிளகாயையும் வாங்கி வந்து நம்முடைய பொது

[திரு. இரா. காமராஜ்] [2013 பிப்ரவரி 6

விநியோகத் திட்டத்தின் மூலமாக மக்களுக்குக் கொடுத்து விலையைக் கட்டுப்படுத்தினார்கள்.

அதுபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் இந்த ஆண்டும் மேற்கு வங்காளத்திலிருந்து 700 டன் அரிசி வாங்கப்பட்டிருக்கிறது. அதனடிப்படையில் Mini Kit என்கிற உயர்ந்த இரக அரிசியின் விலை ரூ.31/–க்கும், சாதாரண இரக அரிசி ரூ.25/–க்கும் வழங்கப்படுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது, தமிழ்நாட்டில் விலை கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. சில ஓட்டல்களில் மதிய உணவு, ஒரு சாப்பாடு ரூ.200/-க்கு விற்பனை செய்யப்படுகிறது. இன்னும் சில ஓட்டல்களில் ரூ.55/–க்கு விற்கப்படுகிறது. ஆகவே, தொழிலாளிகள், ஏழ்மையில் இருக்கக்கூடியவர்கள், கட்டட வேலை செய்பவர்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில், ஓட்டல் உரிமையாளர்களை அழைத்து ஓட்டல்களில் மதிய உணவின் குறைந்தபட்ச விலையைத் தீர்மானிப்பதற்கு ஒரு நடவடிக்கை எடுத்தால், நம் அனைவருக்கும் உதவியாக இருக்கும் என்கிற ஆலோசனையைக் கோரிக்கையாக இந்த அரசுக்கு வைத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, உங்களுக்கு வாய்ப்பு அளிக்கும்போது நீங்கள் பேசுங்கள். இப்பொழுது நேரம் ஆகிவிட்டது. உட்காருங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** டாஸ்மாக் கடையை அரசே ஏற்று விற்பனை செய்வதால் அரசுக்கு அதிகப்படியான இலாபம் கிடைக்கிறது. அதுபோன்று மலிவு விலையில் அரிசி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களை பாக்கெட் மூலமாக அரசு மலிவு விலை விற்பனைக் கடையை அமைத்து விற்பனை செய்தால், விலையைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்.



2013 பிப்ரவரி 6] [செல்வி கே. பாலபாரதி]

அரசுக் கடை என்றால் அது கூடுதல் நம்பிக்கை பெறக்கூடிய ஒரு நடவடிக்கையாக இருக்கும். ஆகவே, எதிர்காலத்தில் அதுகுறித்து யோசித்து நடவடிக்கை எடுத்தால், மத்திய அரசை மாநில அரசு எதிர்க்கின்ற காலங்களிலே, மாநில அரசும் மக்களுக்காக சில நல்ல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது என்ற நம்பிக்கையைப் பெறமுடியும் என்ற முறையிலே இந்த ஆலோசனையை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, நகர்ப்புறத்தில் குடிசை வீடுகளை மாற்றுவது ஒரு நல்ல திட்டம். நகர்ப்புறத்தில் விலைவாசி மூன்று மடங்கு என்றால், வீட்டு வாடகை நான்கு மடங்காக இருக்கிறது. ஏழையெளிய மக்களுக்கு ஒரு மாற்று வீடு உருவாக்குவதற்கான திட்டம் என்பதும் தேவைப்படுகிறது. பட்டா வழங்கப்படுவதற்கு செப்டம்பர் 30 ஆம் தேதியோடு அரசாணை முடிந்துவிட்டது. ஆகவே, நகர்ப்புறத்தில் இப்பொழுது இருக்கக்கூடிய எந்தக் குடிசைகளை மாற்றவேண்டுமென்று சொல்கிறார்களோ, அந்தக் குடிசைகளுக்குப் பட்டா கொடுப்பதற்குரிய நடவடிக்கையையும் மாநில அரசு மேற்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையை முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு முறை வரன்முறைப்படுத்தி கொடுக்கக்கூடிய பட்டாவினுடைய காலக்கெடு செப்டம்பர் 30 ஆம் தேதியோடு முடிவடைந்திருக்கிற காரணத்தினாலே, அதனை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–50

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக வங்கியினுடைய கடுமையான நிபந்தனையின் காரணமாக, மத்திய அரசில் இருக்கக்கூடிய பல துறைகளில் இன்றைக்கு வேலைக்கு ஆள் எடுப்பதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் T.N.P.S.C. மூலம் 10,000 பேர் தேர்வு

செய்யப்படுவார்கள் என்று இப்பொழுது தமிழக அரசு அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், தமிழகத்திலுள்ள மாநில அரசுத் துறைகளில் இரண்டு இலட்சம் காலிப் பணியிடங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தத் துறைகளில் நேர்மையாக T.N.P.S.C. மூலமாக இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

ஓய்வுபெற்ற ஊழியர்களை Treasury போன்ற அமைப்புகளில் இன்றைக்குப் பயன்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்களை மாற்றி புதியவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் இன்னொரு விசுவரூபமாக வளரக்கூடாது. அதைக் கட்டுப்படுத்துவதற்கும் மத்திய அரசுக்கு எதிராக மாநில அரசு ஒரு நல்ல நடவடிக்கையைத் துவக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன்.

குரூப்–1 தேர்வு எழுதக்கூடிய கிராமப்புற மாணவர்களுக்கான வயது வரம்பைத் தளர்த்த வேண்டும். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30 வயது என்றிருப்பதை 35 வயதாகவும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 35 வயது என்றிருப்பதை 45 வயதாகவும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 40 வயதாகவும், வயது மாற்றம் செய்தால் இன்றைக்கு அவர்கள் T.N.P.S.C. Group–1 தேர்வில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

அதேபோன்று, தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கு மிகச் சரியாக இருக்கிறதென்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருந்தாலும், அது குறித்த ஒரு கவலை இன்றைக்கு எல்லோருக்கும் இருக்கிறது. அது சரி செய்யப்பட வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

மதுரையிலே நம்முடைய விடுதலைப் போராட்ட வீரர் பசும்பொன் தேவர் அய்யா அவர்களுடைய ஜெயந்தியை முன்னிட்டு நடந்த அந்த வேன் மீதான பெட்ரோல் குண்டு வீச்சு, அதில் பலதரப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுடைய மரணம், இதுகுறித்த சி.பி.ஐ. விசாரணை இவையெல்லாம் மாவட்டத்தில் ஒரு பதற்றத்தை உருவாக்கியது. இது முடிவதற்குள் தருமபுரியில் ஏற்கெனவே உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, ஐந்து மணி நேரம் தாழ்த்தப்பட்ட மக்களுடைய அந்தக் கிராமங்கள் சூறையாடப்பட்டன. அதோடு,





தாழ்த்தப்பட்ட மக்களுடைய உயிருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை; அவர்களுடைய உடலுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், உருவாக்கிய அத்தனை சொத்துக்களும் அழிக்கப்பட்டு விட்டன. இன்றைக்கு உயர் நீதிமன்றம் ஏழரை கோடி ரூபாய் அவர்களுக்கு நிவாரணமாகக் கொடுக்க வேண்டுமென்று அரசுக்குச் சொல்லியிருக்கிறது. காவல் துறையினுடைய உளவுத் துறைக்கு இது ஏன் இப்படி நடந்து முடிந்தது என்பது தெரியவில்லை? ஐந்து மணி நேரத் தாக்குதல் குறித்து உளவுத் துறைக்கு ஏன் தெரியவில்லை? ஏன் அரசுக்குச் சொல்லவில்லை? ஏன் தடுக்கவில்லை? இந்த இரண்டு சம்பவங்களும் எதிர்காலத்தில் நடவாதபடி தமிழக அரசு இன்னும் கூடுதல் கவனத்தோடு பரிசீலிக்க வேண்டும்.

அங்கு தென் மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட மக்கள், இந்தப் பக்கம் தாழ்த்தப்பட்ட மக்கள் இவர்கள் இருவருமே உழைக்கக்கூடியவர்கள், தொழிலாளர்கள், நடுத்தர மக்கள். இவர்களுடைய ஒற்றுமை வளர்க்கப்பட வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கமாகவும் இருக்கிறது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய நோக்கமாகவும் இருக்கிறது. இதைச் சீர்குலைக்கின்ற வகையில் பேசக் கூடாது. இப்பொழுது நான் அரசியலில் இருக்கிறேன் என்பதற்காக ஒரு பொதுக் கூட்டத்தில் போய் ‘பிற்படுத்தப்பட்ட மக்களெல்லாம் எங்களுக்கு எதிரிகள்’ என்று நான் பேசுவதற்கோ, ‘தாழ்த்தப்பட்ட மக்களைத் தீண்டக்கூடாது’ என்று நான் பேசுவதற்கோ எனக்கு உரிமை கிடையாது. என்னை கைது செய்வதற்கு அரசுக்கு அனைத்து அதிகாரமும் இருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் சட்டத்திற்குட்பட்டுதான் எந்த அரசியல் கட்சியினராக இருந்தாலும் பொது மேடைகளில் பேச வேண்டும், கருத்துகளை வலியுறுத்த வேண்டும் என்பது கறாராகப் பின்பற்றப்படுவதற்கு தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டே நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

அதேபோன்று, இதே காலங்களில் தமிழகத்தில் ஒரு புதிய அரசியல் நிலைமை, ** ஆகவே, என்னுடைய எல்லா வாதத்திற்குள்ளும் நான் செல்லவில்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கு ஆதாரம் கொடுத்துவிட்டுச் சொல்லுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** சரி. ஆகவே, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** குறித்துச் சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள், ** என்ற தவறான கருத்தை இங்கே பதிய வைத்தார்கள். அதனை நீக்கியதற்கு நன்றி.

சென்ற மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியைக் காட்டிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால், ஆதாயக் கொலையாக இருந்தாலும்சரி, கன்னக் களவு, திருட்டு வழக்குகளாக இருந்தாலும்சரி, ஆள்கடத்தல் வழக்காக இருந்தாலும்சரி, குற்றங்களினுடைய எண்ணிக்கை 2.5 சதவீதம் குறைந்து, நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சமுதாயத் தலைவர்களுடைய பிறந்த நாள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் போதிய உரிய பாதுகாப்பு உளவுத் துறையின்மூலமாக அறிக்கை பெற்று அங்கு நிறைவாகச் செயல்படுத்தி சட்டம்—ஒழுங்கு முழுமையாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் நிலைநாட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது, சட்டத்தின் மூலமாக நிலைநாட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்ற விவரத்தினையும் நான் இங்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2013 பிப்ரவரி 6]

*பிற்பகல் 1–55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்றி. உண்மையிலேயே சட்டம்—ஒழுங்கை அரசு கவனிக்கிறது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இதே நேரத்தில் ஒரு நேர்மையான காவல் துறை அதிகாரியையும் நாம் காப்பாற்ற முடியவில்லை என்பதையும் கவனத்தில் கொள்வதற்காகத்தான் நான் சொன்னேன், குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை என்பதைத் தாழ்மையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழையெளிய மக்களுக்கு இலவசப் பொருட்கள் கொடுத்து திருமணங்கள் நடத்தி வைக்கிறார்கள். அதை நம்முடைய தமிழகத்தினுடைய அரசியல் பாரம்பரியத்திற்குட்பட்டு, சாதி மறுப்புத் திருமணம் செய்பவர்களுக்கு முன்னுரிமை என்று மாநில அரசு அறிவிப்பு கொடுத்தால், இது ஒரு சிறப்பான முன்னுதாரணமாக இருக்கும் என்ற முறையில் அவர்களுக்கு ரூபாய் இரண்டு இலட்சமாக நிவாரண நிதியை உயர்த்திக் கொடுப்பதற்கும், அதுபோன்று சாதி மறுப்புத் திருமணங்களில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் யாராக இருந்தாலும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன் அவர்கள், பேசுங்கள். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, நன்றி சொல்லி உரையை நிறைவு செய்யுங்கள்

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதி மறுப்புத் திருமணங்களை ஊக்குவிக்கும்வகையில் மாநில அரசு சிறப்புத் திட்டங்களை அறிவிப்பதற்கு முன்வரவேண்டும். நம்முடைய பாரம்பரியம் என்ற முறையில் அதை அரசிடம் வலியுறுத்திக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று, நம்முடைய திண்டுக்கல், திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்டங்களில் வறட்சி என்பது துவங்கியிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக அறிக்கை அங்கு சமர்ப்பிக்கப்பட்டால்தான், நடவடிக்கை எடுக்கப்படும்

என்கிறார்கள். மக்காச்சோளம் போன்ற பயிர்கள் இன்றைக்கு விளையவில்லை. சோளத்தட்டையாக இருக்கிறது. கால்நடைகளுக்கு அறுத்தும் போடமுடியவில்லை. காரணம் R.I – வருவாய்த் துறை அதிகாரி, இன்சூரன்ஸ் அதிகாரி, வேளாண்மைத் துறை அதிகாரி இவர்களெல்லாம் அதைப் பார்வையிட்டு கணக்கெடுத்தால்தான் இந்தச் சோளத்தட்டையை அறுத்து கால்நடைகளுக்குப் போட முடியும். ஆகவே இந்த நிலையில் மாநில அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவு பிறப்பித்து . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதோ முடித்துவிடுகிறேன். அந்தப் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தின்படி, வறட்சியை ஆய்வு செய்ய முன்வரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டத்தில் ஈமு கோழிப் பண்ணை, Gold loan தருகிறோம் என்று சில ஏமாற்றுக் கம்பெனிகள் தொடங்கி மோசடி செய்துவிட்டார்கள். அதன்மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன், பேசுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் ஈமு கோழிப் பண்ணை பிரச்சினை பற்றி சொன்னார்கள். 22 அல்லது 23 தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன என்று நினைக்கின்றேன். அவர்கள் ஈமு கோழிப் பண்ணையை ஆரம்பித்து, சில பிரச்சினைகளை அங்கே உண்டாக்கியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் தீர விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். அரசின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி அந்த ஈமு கோழிகளினுடைய உயிரைக் காப்பற்றுவதற்கு தீவனத்திற்காக மட்டும் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கி செலவழிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் கூடுதல் நிதியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கித் தருவதற்கான உரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





சட்டம்–ஒழுங்கு பிரச்சினையைப் பொறுத்தமட்டில், மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் நேரடியாக பார்க்கவில்லையென்றாலும், தொலைக்காட்சி மூலமாக அறிந்திருப்பார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், மூன்று தினங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் துறை உயர் அதிகாரிகளையெல்லாம் அழைத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் நிருவாகத்தில் இருக்கின்ற பிரச்சினைகள், சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைகளையெல்லாம் தீர விசாரித்து ஆய்ந்து அதனைத் தடுப்பதற்குரிய வழிகள் குறித்தும், வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்தும் மூன்று நாட்களாக உட்கார்ந்து, ஒவ்வொன்றையும் கவனமாகக் கேட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் துறை அதிகாரிகள் சொன்ன 343 கோரிக்கைகளையும் ஏற்று (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக உத்தரவைப் பிறப்பித்து நடைமுறைக்குக் கொண்டுவந்த முதலமைச்சர் இந்தியாவிலேயே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி, அடுத்த வாய்ப்பு வரும்போது பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், பேசுங்கள். (குறுக்கீடு) இன்னொரு வாய்ப்பு வரும்போது பேசலாம். (குறுக்கீடு) திரு. உலகநாதன், நீங்கள் பேசுங்கள்.

***திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பளித்தமைக்கு உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு. . .

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, நீங்கள் பேசவேண்டியதை எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) சரி, செல்வி பாலபாரதி பேசுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட கல்லூரிக்குக் கட்டடம் வேண்டுமென்று மாணவர் அமைப்பினர் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அது குறித்து மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுக்கான புதிய பென்சன் திட்டத்தை ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று ஏற்கெனவே சொன்னதை இன்று மாநில அரசு அறிவித்திருக்கிறது. ஆனால், அவர்களுக்கு 10 சதவிகிதம் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. ஆக, என்ன நடந்துகொண்டிருக்கிறது? புதிய பென்சன் திட்டத்தை எதிர்த்திருக்கிறோம். ஆனால், அரசு அமல்படுத்துகிறதா என்பதை அறிய விரும்புகின்றோம்.

அதேபோன்று WAL MART வருவதை எதிர்த்து நாடாளுமன்றத்தில் வாக்களித்த ஆளுங்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியான நிலைப்பாட்டை எடுத்ததற்கு இந்த நேரத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறது. அதேநேரத்தில் இங்கே அண்ணா நகர் உட்பட சில இடங்களில் WAL MART நிறுவனம் பல இலட்சம் சதுர அடியில் நிலம் வாங்கி அலுவலகம் நடத்திவருகிறார்கள். அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் இருக்கக்கூடிய



2013 பிப்ரவரி 6] [திரு. பி. பழனியப்பன்]

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று மாணவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தக் கல்லூரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட ஓர் உறுப்புக் கல்லூரி. பொதுவாக, உறுப்புக் கல்லூரி ஆரம்பிக்கப்படும்பொழுது, அரசாங்கம் முன்வந்து உறுப்புக் கல்லூரி ஆரம்பித்து கட்டடம் கட்டுவதற்கோ அல்லது அதற்குச் சம்பளம் கொடுப்பதற்கோ வழி இருக்கிறது. ஆனால், அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அந்தப் பல்கலைக்கழகமே தங்களுடைய நிதிநிலைமைக்கேற்ப ஓர் உறுப்புக் கல்லூரியைத் தொடங்கலாம். ஆகவே, 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கல்லூரிக்கு இடமில்லை என்ற கோரிக்கை ஏற்கெனவே அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்கு மேற்கண்ட கோரிக்கை வந்த பின்பு, என்னையும் அந்த மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களையும் அந்த இடத்திற்கு அனுப்பி வைத்து உரிய இடம் பார்க்கச் சொன்னார்கள். அதனடிப்படையில், அருள்மிகு கோமதி அம்மன் சங்கரநாராயணர் கோயிலுக்குச் சொந்தமான நிலம் 5 ஏக்கர் தெரிவுசெய்யப்பட்டு, நிலமாற்றம் செய்யக்கூடிய முறையில், ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்படுகிற பணி நடைபெற்று வருகிறது. அந்தப் பணி முடிவடைந்த பின்பு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, அங்கு கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கையை நிச்சயமாக அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் contributory pension பற்றி இங்கே சில வினாக்களை எழுப்பியிருந்தார்கள். அரசு ஊழியர்களுடைய pension–ஓய்வூதியத்தின் நிலை, இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களிலும் contributory pension திட்டத்தை அமல்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. தமிழகத்தைப் பொறுத்தவரையில்,

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 பிப்ரவரி 6

அவர்களிடமிருந்து பெறப்படுகின்ற 10 சதவிகித contribution வைப்பு நிதியாக வைக்கப்படுகின்றது. புதிய contributory pension திட்டம் அரசின் ஆய்வில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 10 நிமிடங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்த உங்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவு, உடை, உறைவிடம் போன்ற இன்றியமையாத அடிப்படைத் தேவைகளை அனைவரும் குறிப்பாக, ஏழைகளும், ஒதுக்கப்பட்டோரும் நிறைவாகப் பெற்று அவர்கள் கண்ணியத்துடனும், கௌரவத்துடனும் வாழ வழி செய்வதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் குறிக்கோள் என ஆளுநர் உரையில் குறிப்பிட்டு இருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் குறிக்கோள் தங்களுக்குக் கிடைத்திட வேண்டுமென்றும், கண்ணியத்துடன், கௌரவத்துடன் வாழ்வதற்கான வழி இதுவரை பிறக்கவில்லையே என்றும் ஏழை, எளிய மக்கள் ஏங்கித் தவித்து வருகின்றனர். அவர்களின் நெடுநாள் ஏக்கத்தைப் போக்கிட விரைவாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, காவிரி டெல்டா மாவட்டம் தமிழகத்திற்கே உணவு அளிக்கக்கூடிய மாவட்டம். குறுவை, சம்பா, தாளடி என்று மூன்று போகம் சாகுபடி செய்த அந்த மாவட்டத்தில் இன்றைக்கு ஒரு போகம் சாகுபடி நடைபெறுமா என்ற கேள்வி எழுந்திருக்கிறது. இதற்கெல்லாம் மத்திய அரசுதான் காரணமாகும். குறிப்பாக, உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயப் பெருங்குடி மக்களை

"உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுஉண்டு பின்செல் பவர்"



2013 பிப்ரவரி 6] [திரு. கே. உலகநாதன்]

என வள்ளுவப் பெருந்தகை உழவர் பெருமக்களைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். அப்படிப்பட்ட புகழுக்குரிய விவசாயிகளின் நிலையே கவலைக்கும், வேதனைக்குரியதாகவும் உள்ளது.

காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சி பாராட்டுக்குரியது. காவிரி டெல்டா விவசாயிகளின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். உச்ச நீதிமன்றம் பிப்ரவரி 20 ஆம் தேதிக்குள் மத்திய அரசு அரசிதழில் வெளியிட வேண்டுமென்ற தீர்ப்பினை அளித்துள்ளது. இதனை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். மத்திய அரசு இனியும் காலம் தாழ்த்தாது அரசிதழில் வெளியிட வேண்டும். மேலும், கர்நாடகத்திலிருந்து உரிய தண்ணீரைத் தமிழகத்திற்குப் பெற்றுத்தர வேண்டுமாய் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

காவிரி டெல்டா மாவட்டம் உட்பட தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. வறட்சி பாதிப்பிலிருந்து பாதுகாக்க தமிழகத்திற்குத் தேவையான நிதியை மத்திய அரசிடம் கோரிப் பெறுவதற்கு சட்டமன்றம் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். தமிழகம் கோரும் நிதியை மத்திய அரசு வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

டெல்டா மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளதை வரவேற்கிறோம். தாமதமின்றி நிவாரணத்தை உடனடியாக வழங்க வேண்டுமாய் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம். விவசாயம் பாதிக்கப்பட்டதன் காரணமாக ** குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை பெற்று உரிய நிவாரணம் உடனடியாக வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதோடு, பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ரூ.10 இலட்சமும், விவசாயிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.25,000/—மும், விவசாயத் தொழிலாளர்களின் குடும்பத்திற்கு ரூ.10,000/—மும் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கே. உலகநாதன்] [2013 பிப்ரவரி 6

*பிற்பகல் 2–05*

காவிரி டெல்டா பகுதிகளில், மழை, புயல், வெள்ளப் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கவும், டெல்டா பகுதிகளில் கீழ் ஊற்றை அதிகப்படுத்தும் வகையில் தமிழக அரசின் சார்பில் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டும், இதுவரை செயல்படுத்தப்படாமல் உள்ளன. எனவே, வறட்சி பாதித்த இச்சூழலில் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும்விதமாக, அத்திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

விவசாய விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காத நிலையில், உரங்களின் விலையை நிர்ணயம் செய்துகொள்ளும் உரிமையை உர நிறுவனங்களுக்கே வழங்கி, இடுபொருட்களின் விலையை பன்மடங்கு உயர்த்தியிருப்பதையும், விவசாயிகளைச் சுரண்டி, உர ஆலை முதலாளிகள் கொள்ளை இலாபம் அடிப்பதற்கு மத்திய அரசு வழிவகை செய்துள்ளதையும் கண்டிக்கிறோம்.

உற்பத்திப் பொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவும், பாசன, வடிகால்கள் சீரமைக்கப்பட்டு, நீராதாரத்தை உத்தரவாதப்படுத்துவதுடன், குறைந்த வட்டியில் கடன் கிடைப்பதை உறுதி செய்திட வேண்டும். குத்தகை விவசாயிகளை அச்சுறுத்தும் வகையில் திறக்கப்பட்டுள்ள வருவாய் நீதிமன்றங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்திட வேண்டும். குத்தகை பாக்கிகளை இரத்து செய்வதுடன், கோயில், மட, தர்ம ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் சாகுபடி செய்துவரும் குத்தகை விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்கிட வேண்டும். கோயில் மனைகளில் குடியிருப்பவர்களுக்கு வாடகை நிர்ணயம் செய்துவரும் முறையை இரத்து செய்து, முன்பு இருந்ததுபோல், பகுதியாக வசூல் செய்வதுடன், ஏழையெளிய மக்களுக்குப் பட்டா வழங்கிட வேண்டும்.

குறிப்பாக, மனை இல்லாமலும், மனை இருப்பவர்களுக்குப் பட்டா கிடைக்காமலும் உள்ள நிலை குறித்து பரிசீலனை செய்து, உரிய சட்டத் திருத்தங்கள் மேற்கொண்டு அனைத்து ஏழையெளிய மக்களுக்கும் குடிமனைப் பட்டா 5 சென்டிற்குக் குறையாமல்



2013 பிப்ரவரி 6] [திரு. கே. உலகநாதன்]

கிடைக்க வழி செய்வதுடன், ரூபாய் 3 இலட்சத்தில் வீடு கட்டிக் கொடுத்திட வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

அரசு தற்போது குடும்பத்திற்கு 20 கிலோ விலையில்லா அரிசி வழங்கி வருகின்றது. தற்போது நிலவும் கடும் வறட்சியைக் கணக்கில் கொண்டு, 20 கிலோ என்பதற்கு மாறாக, 35 கிலோவாக உயர்த்தி வழங்க வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

சுனாமி மறுவாழ்விற்காகக் கட்டப்பட்டுள்ள வீடுகளில் குடியிருக்கும் மக்களின் நிலையைக் கருத்திற்கொண்டு, மேற்கூரையில் நீர்க்கசிவு ஏற்பட்டுள்ள 16,883 வீடுகளில் கான்கிரீட் கூரைகளின் மேல் ஓடுகள் பதிப்பதற்காக 30 கோடியே 69 இலட்சம் ரூபாயை அரசு வழங்க முன் வந்திருப்பதை முழு மனதுடன் பாராட்டி வரவேற்கிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோன்று, மத்திய, மாநில அரசுகளால் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பழுதடைந்து வசிக்க இயலாத நிலையில் உள்ளன. அரசு இதனைக் கவனத்தில் கொண்டு அவற்றைக் கணக்கெடுத்து, பழுதடைந்த வீடுகளைச் செப்பனிட அல்லது புதிதாகக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

விவசாயப் பணிகள் இல்லாத நிலையில், விவசாயத் தொழிலாளர்கள் வேலையின்றி அவதியுற்று வருகின்றனர். அவர்களது வறுமையைப் போக்கும் வகையில், வேலை உறுதியளிப்புத் திட்டத்தை முழு அளவில் செயல்படுத்துவதுடன், குடும்பத்திற்கு நூறு நாள் என்பதை மாற்றி, மீண்டும் சாகுபடி பணிகள் தொடங்கும் வரையில் தினசரி வேலை கொடுப்பதுடன், அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த தின ஊதியம் 132 ரூபாய் கிடைப்பதை உறுதி செய்வதுடன், விலைவாசி உயர்வைக் கருத்திற்கொண்டு, ஊதியத்தை அதிகரிக்க வழி செய்திட வேண்டுமாயும், அனைத்துத் தொழிலாளர்களுக்கும் அடையாள அட்டை வழங்குவதுடன் சிறப்பு முகாம் நடத்தி, அனைவருக்கும் வங்கிக் கணக்கு தொடங்கிட வழிவகை செய்வதுடன், இத்திட்டத்தை நகர்ப்புறப் பகுதிகளிலும் செயல்படுத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

நகரம், கிராமம் என்றில்லாது, அனைத்துப் பகுதிகளிலும் கொசுத் தொல்லை தாங்க முடியாத அளவில் உள்ளது. இதன்

[திரு. கே. உலகநாதன்] [2013 பிப்ரவரி 6

காரணமாக, சிக்குன்–குன்யா, டெங்கு காய்ச்சல் போன்ற நோய்கள் பரவி, மக்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகி வருகின்றனர். இந்நிலையைப் போக்கிட கொசு ஒழிப்பு நடவடிக்கையைத் தீவிரமாக மேற்கொள்வதுடன், விலையில்லா கொசு வலை வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டி நகரப் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்க்க புறவழிச் சாலை அமைக்க அரசு நிதியொதுக்கி டெண்டர் விடப்பட்டது. பணிகள் தொடங்கிய நிலையில், அங்குள்ள கோயில் நிர்வாக அதிகாரி முட்டுக்கட்டையாக உள்ளதால், பணிகள் தொடர முடியாமல் உள்ளது. அரசு உடனே தலையிட்டு, அதிகாரிமீது உரிய நடவடிக்கை எடுப்பதுடன், பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுத்திட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

பாசன வடிகால்களைத் தூர்வாரும் பணிகளை உடனடியாகத் தொடங்கிட வேண்டும். குறிப்பாக, இன்றைக்குக் காவிரி டெல்டா மாவட்டங்களில் இருக்கிற ஆறுகளில், ஒரு கிலோ மீட்டர், இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு ஆற்றுப் படுகைகள் இருக்கின்றன. ஆகவே, நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் வகையில், இந்தப் பகுதிகளில் ஏரிகளை வெட்டுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

திருத்துறைப்பூண்டி வட்டத்தை இரண்டாகப் பிரித்து, முத்துப்பேட்டையைத் தலைநகராகக் கொண்டு தனி வட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். அதேபோல, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் என்பது 49 ஊராட்சிகளைக் கொண்ட மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியமாகும். எனவே, நிர்வாக வசதியைக் கருத்திற்கொண்டு, பெருகவாழ்ந்தான் ஊராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டார ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூரிலிருந்து, மன்னார்குடி, கோட்டூர், திருத்துறைப்பூண்டி, தகட்டூர் வழியாக வேதாரண்யம் வரை உள்ள சாலையை தேசிய நெடுஞ்சாலையாக அறிவித்து செயல்படுத்துவதுடன், இச்சாலைக்கு 'உப்பு சத்தியாகிரகப் போராட்ட நினைவுச் சாலை' எனப் பெயரிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2013 பிப்ரவரி 6] [திரு. கே. உலகநாதன்]

பிற்பகல் 2–10

அரிச்சந்திரா நதி தென் கரை தாளந்திருவாசல் முதல் தலைஞாயிறு, ஆலங்குடி, ஆலத்தம்பாடி, ஆலிவலம் விக்கிரபாண்டி வழியாக மன்னார்குடி வரை செல்லும் சாலையை அகலப்படுத்தி, மன்னார்குடி–தாளந்திருவாசல் வரை பேருந்து இயக்கப்பட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டி தொகுதி முத்துப்பேட்டையில் மீனவர்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதியாகும். எனவே, முத்துப்பேட்டை பகுதியில் மீன்பிடி துறைமுகம் அமைத்துத்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

திருத்துறைப்பூண்டி நகரில் பல்வேறு அரசு அலுவலகங்கள் உள்ளன. அங்கு பணிபுரியும் அரசுப் பணியாளர்கள், கல்லூரி பேராசிரியர்கள், ஆசிரியப் பெருமக்கள் ஆகியோர் குடியிருப்பதற்கான வசதிகள் இல்லாத நிலையில், குடியிருக்க வீடுகள் இல்லாத நிலை உள்ளது. ஆகவே, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் குடியிருப்புகளைக் கட்டித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கோட்டூர் ஒன்றியம், விக்கிரபாண்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

திருத்துறைப்பூண்டி நகரில் விடுதலைப் போராட்ட வீரர் விவசாயிகள் இயக்கத்தின் விடி வெள்ளி, தோழர் பி. சீனிவாச ராவ் அவர்களுக்கு நினைவு மண்டபம் அரசால் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு நூலகம் அமைத்துத்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

திருவாரூர்–காரைக்குடி மற்றும் திருத்துறைப்பூண்டி–கோடியக்கரை வழித் தடத்தில் அகல இரயில் பாதை அமைக்கும் பணிகளை விரைவாக முடிக்கவும், காரைக்கால்–சென்னைக்கு பகல் நேர இரயில் இயக்கவும் மத்திய அரசை, தமிழக அரசு வலியுறுத்தி இந்தப் பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாய் செலவில் பசுமை வீடுகள்

[திரு. கே. உலகநாதன்] [2013 பிப்ரவரி 6

கட்டப்படுகின்றன. கூடுதல் பரப்பளவில் கட்டப்படும் வீடுகளை உடனடியாக இடிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக், சந்தித்து இதுகுறித்து கூறியபோது, ‘வீடுகள் இடிப்பதை தடுக்க முடியும், தடுக்கிறேன்’ என்று சொன்னார்கள். ஆனால், மீண்டும் கட்டிய வீடுகளை இடிக்கின்ற வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதனை உடனடியாகத் தடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துவிடுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்கு, உடனடியாக உத்தரவு பிறப்பித்து, அது நடைமுறைக்கு வந்துவிட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளை 300 சதுர அடிக்குக் கூடுதலாக 50, 60 சதுர அடி கட்டினால் அதை இடித்தார்கள். கூடுதலான பரப்பளவில், அவர்களது சொந்தப் பணத்தில் வீடுகள் கட்டுவதற்குத் தடை இருக்கக்கூடாது, அவர்கள் வீடுகள் கட்ட அனுமதிக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சொன்னார்கள். ஆனால், கீழே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு வந்துள்ள அரசாணை என்பது, 2011–2012 ஆம் ஆண்டுக்கானது என்று போட்டு, இப்பொழுது கட்டக்கூடிய வீடுகளை அதுபோன்று கட்டக்கூடாது என்று போட்டு, ஏற்கெனவே கட்டியவர்களுக்கு இரத்து செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் கட்டுவதற்கு எந்த அனுமதியும் கொடுக்காத நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின் அடிப்படையில், இரத்து செய்யப்பட்ட வீடுகளை மீண்டும் கட்டுவதோடு, இந்த ஆண்டும் தொடர்ந்து சொந்தப் பணத்தில் கூடுதல் பரப்பளவில் வீடுகள் கட்டிக் கொள்ள அனுமதியும் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிகாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2013 பிப்ரவரி 6] [திரு. சு. குணசேகரன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இட்ட ஆணையை துறை அலுவலர்கள் முறையாகச் செயல்படுத்தி வந்துகொண்டிருக்கிறார்கள். அவ்வாறு ஏதாவது ஒரு இடத்தில், இதுபோன்ற தவறுகள் நடக்கின்றபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுக் கூறுவார்களேயானால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

***திருமதி எஸ். கணிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்தில் ஒரு இராணுவ வீரருக்கு மகளாய் பிறந்து, கிளைச் செயலாளருடைய மனைவியான எனக்கு, கழகப் பணியாற்ற, பல்வேறு பொறுப்புகளைத் தந்து, மாவட்டப் பிரதிநிதியாகவும், மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளராகவும், மாவட்ட மகளிர் அணிச் செயலாளராகவும், மக்கள் பணியாற்றிட இரண்டாவது முறை சட்டமன்ற உறுப்பினராக்கிய எங்கள் குல தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர், வாராது போல வந்த மாமணியாய் தோன்றி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் ஆழ்கடலின் கலங்கரை விளக்கமாய், காவல் அரணாய், கருணை தெய்வமாய் காட்சியளித்துக் கொண்டிருப்பவர் நம் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இமயத்தை பணிய வைக்கும் இதயத் துணிவும், இல்லார்க்கு உதவுகின்ற இனிய கனிவும் ஒருசேரப் பெற்றவர் நம் உன்னதத் தாய்! தமிழகம் செய்த தவப் பயனாய்

தோன்றி, தன்னிகரற்ற தலைவியாய் விளங்கும் எங்கள் குல தெய்வம் அம்மாவே, உங்கள் பாதம் பட்ட இடமெல்லாம் நந்தவனமாகும், பார்வை பட்ட இடமெல்லாம் இன்பங்கள் பூத்துக் குலுங்கும்! பக்தனைக் காப்பதற்காக அமாவாசை இருட்டில் நிலவை வரவழைத்தார்களாம் அன்னை அபிராமி! இந்த நாட்டையும், நாட்டு மக்களையும் காப்பதற்காக ஐந்து ஆண்டுகள் இங்கு நடைபெற்ற அநீதி என்னும் அமாவாசை இருட்டை விரட்டி, நீதி நிலவை உதிக்கச் செய்த புரட்சித் தலைவி அம்மாவே நீங்கள்தான்! நாங்கள் நேரில் தரிசிக்கும் அன்னை அபிராமி! சூரியனையே சுட்டெரிக்கும் வல்லமை மிக்க ஆற்றல் அரசியே! ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்று சொல்லும்வண்ணம் ஒளிமயமான எதிர்காலத்தைத் தமிழகத்திற்குத் தர வேண்டி அற்புதத் திட்டங்களை அன்றாடம் செயல்படுத்த ஆணையிடும் சிங்கநிகர் தலைவியே! தமிழக ஆட்சி பீடத்தை எப்போதெல்லாம் நீங்கள் அலங்கரிக்கின்றீர்களோ, அப்போதெல்லாம் இங்கு பொற்காலம் என்று பூரித்து வாழ்த்துகின்றார்கள் நாட்டு மக்கள்.

பிற்பகல் 2–15

கடந்த 5 ஆண்டு காலமாய் கொடுங்கோல் ஆட்சியைவிட குடும்ப ஆட்சிதான் இங்கே நடைபெற்றது. துறைதோறும் தமிழை வளர்ப்பதாகச் சொன்னார்கள். ஆனால், துறைதோறும் ஊழலைத்தான் வளர்த்தார்கள். அப்பாவி மக்களை எல்லாம் ஏமாற்றி சொத்துக்களை எல்லாம் அபகரித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவரின் பாடல் வரி ஒன்றை இங்கே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

“ஏய்ப்பவர்க்கே காலம் என்று எண்ணிவிடாதே
பொய் எத்தனை நாள் கைகொடுக்கும் மறந்து விடாதே”

என்று இப்படிப்பட்டவர்களைப் பார்த்து அன்றே எச்சரித்தார் நம் புரட்சித் தலைவர்.

“மக்கள் நலன் மக்கள் நலன் என்றே சொல்லுவார்
தன் மக்கள் நலன் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்”

என்று அன்றே போலி வேடதாரிகளை நாட்டு மக்களுக்கு அடையாளம் காட்டினார் நம் பொன்மனச் செம்மல். ஒரு நாள்





இந்த நிலைமைக்கு எல்லாம் மாறுதல் உண்டு என்றும் உணர்த்தினார் நம் தங்கத் தலைவர். அந்த மாறுதலைத் தமிழகத்திற்குப் பெற்றுத் தந்ததும் ஓர் அன்னையின் அருட்கண் பார்வைதான். ஆம், நம்மையும் இந்த நாட்டையும் வாழ வைத்துக்கொணடிருப்பது நமது இதய தெய்வம் அம்மா அவர்கள்தான்.

நம் அன்னையின் அருட்பார்வை, அநீதியை அழிக்கும் அதர்மத்தை ஒழிக்கும். அதே சமயம், ஏழைகளைக் காக்கும், மக்கள் இன்னல்களைப் போக்கும். நம் தெய்வத் தாய் சிந்தும் புன்னகை, நாட்டு மக்கள் துயரங்களைத் துடைக்கும். அவரது கருணை விழிகளில் தோன்றும் கோபமோ அநீதி இழைத்தவர்களைச் சிறையில் அடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணங்கிய கைகள் பிரியும் முன்னே வரம் தரும் அன்னையே! ஒரு நாளைக்கு 18 மணி நேரம் உண்ணாமல் உழைத்து, உறங்காது விழித்து தமிழகம் காக்கும் எங்கள் பொன்மனத் தலைவியே! ஏழு கோடி தமிழ்ச் சமுதாயத்தைத் தாங்கிப் பிடித்திட்ட காலம் வழங்கிய கருணைக் கடலே!

கல்வித் துறையில் மாபெரும் புரட்சி, 2–வது பசுமைப் புரட்சி, மக்களின் பொருளாதார நிலை உயர, தொலைநோக்குத் திட்டங்கள் தந்து, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய பொன்மனத் தலைவி அம்மா அவர்களே! சூரியனையும் எப்படி ஆட்டுவிக்க வேண்டும் என அறிந்து “சூரிய சக்திக் கொள்கை, 2012” என்னும் திட்டத்தை முன்வைத்த தமிழகத்தின் தங்கத் தாயே! குப்தர்கள் காலம்தான் பொற்காலம் என வரலாற்றுப் பதிவுகளை எல்லாம் மாற்றி அமைத்த அம்மா தங்களின் ஆட்சிக் காலம்தான் தமிழகத்தின் பொற்காலம்.

இனி வரும் காலத்தில் இந்தியாவிற்கே பொற்காலம் என உணர்த்திக் காட்டியவர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாதான். அவர்களின் பொற்பாத கமலங்களை வணங்கி, ஆளுநர் உரையின் மீது பேச வாய்ப்பு தந்த அம்மா அவர்களை மீண்டும் ஒரு முறை வணங்குகின்றேன்.

“மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தர வேண்டும்” என்பதற்காக பல்வேறு சாதனைகளைப் புரிந்து நல்ல திட்டங்களை தினமும்

தந்து கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய திட்டங்களைப் பேசுவதற்கு நாட்கள் போதாது.

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்" எனறான் கவிமணி.

"மாதர்தமை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்றார் தேசிய கவிஞர் மகாகவி பாரதி.

"மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் முதலிடம் பிடிப்பது பெண்களே." இவ்வாறு பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மாநிலமாகத் தமிழகம் உள்ளது.

"அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பவன் அரசியல்வாதி, அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திப்பவனே ஜனநாயகவாதி" என்றான் ஓர் அறிஞன். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் அடுத்த தலைமுறையிலான நலனில் அக்கறை கொண்டு இளைஞர்களுக்காக ஒரு மாபெரும் திட்டத்தைத் தீட்டி, வரலாற்றுக்குப் பெருமை சேர்த்து உள்ளார். "தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை" என்னும் ஒரு சிறப்புப் படை தமிழ்நாட்டில் உருவாக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அறிவித்ததை, இந்நாட்டின் இளைய சமுதாயம் போற்றிப் பாராட்டியுள்ளது என இந்த மாமன்றத்தில் பதிவு செய்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய அறிவாற்றலால் 'தொலைநோக்குத் திட்டம் 2023' என்ற ஒப்பற்ற திட்டத்தை உருவாக்கி தமிழகத்தை முன்னோடி மாநிலமாக மாற்ற பல்வேறு திட்டங்களை உருவாக்கி வருகிறார்கள்.

பிற்பகல் 2–20

மழைநீர் சேகரிப்பு அமைத்ததன்மூலம் நிலத்தடி நீர் பெருகியதும் அம்மா ஆட்சியில்தான். சிறப்புக் காவல் இளைஞர் படை அமைத்து, 50,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பிற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். சீருடைப் பணியாளர்களுக்கு "உங்கள் சொந்த இல்லம்" என்ற திட்டத்திற்கு கடந்த 26–10–2012 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் மேலைக்கோட்டில் அடிக்கல் நாட்டினார்கள் அம்மா.





தாய் தன் பிள்ளைகளின் தேவை என்ன என்பதை அறிந்து செய்வதைப்போல் அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு மக்கள் கேட்காமலேயே செய்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு சமூக நீதிக் கொள்கைக்கு இந்தியர்களுக்கு வழிகாட்டியாக இருப்பது தமிழ்நாடு அரசுதான். அதைச் சட்டமாக்கியதும், அரசியல் சட்டத்தில் ஒன்பதாம் அட்டவணையில் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்ததும் நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அதனால்தான் அம்மா அவர்கள் சமூக நீதி காத்த வீராங்கனை என பலரால் பாராட்டப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பேரவை அறுபது ஆண்டுகள் நிறைவு செய்ததை வைர விழாவாகக் கொண்டாடிய பெருமைக்குரியவர் நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் முன்வைத்த கோரிக்கைகளை ஆய்வு செய்து, 343 அறிவிப்புகளையும் மாநாட்டிலேயே அறிவித்துள்ளதும், இதுவரை எந்த மாநிலமும் கண்டிராத நிகழ்வாக உள்ளது என்று கூறப்பட்டுள்ளதைக் கண்டு மக்கள் பெருமிதம் அடைகிறார்கள். மேலும், அந்த அறிவிப்பில் எனது மதுராந்தகம் தொகுதியில் அடங்கிய 15 கிராம மக்களின் நெடுநாள் கோரிக்கையான கத்திரிச்சேரி பாலம் கட்டப்படும் என்று அறிவித்த நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் காவல் துறையில் மகளிருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் மகளிர் காவல் நிலையம் கொண்டு வந்தார். தற்போது, மாவட்டந்தோறும் மகளிர் விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளதை கண்டு தாய்குலமே போற்றும் தாயாக விளங்குகிறார் அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள புதிய கட்டடத்தை சிறப்பு பல்நோக்கு மருத்துவமனையாக மாற்றிய அம்மா அவர்களின் முடிவு சரியானது என்று சென்னை உயர் நீதிமன்றமும், உச்ச

*நீதிமன்றமும் அறிவித்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் மருத்துவமனையில் ஏழை எளியவர்கள் உயர்தர சிகிச்சை பெற முடியும் என்று அறிவித்துள்ளதை கண்டு மக்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றனர்.*

*அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முப்பருவமுறை, தொடர் மற்றும் ஒட்டுமொத்த தேர்வு மதிப்பீடு முறை என்று அறிவித்துள்ளது மாணவ, மாணவியர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் ஆகிய அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளது. அதுமட்டுமில்லாமல், எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மாணவ, மாணவியர்களுக்கு பேருந்துப் பயண அட்டை, புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், மிதி வண்டிகள், காலணிகள், சீருடைகள், புத்தகப் பைகள், வடிவியல் பெட்டிகள், உலகப் படப் புத்தகம், வரைபடங்கள், கலர் பென்சில்கள் வழங்கி வரும் மாண்புமிகு அம்மா அவர்களை, பெற்ற தாய், தந்தையரும், மாணவச் செல்வங்களும் போற்றுகின்றனர்.*

*சித்திரை மாதத்தின் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு தினமாக காலங்காலமாக இருந்ததை, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி மாற்றியதை மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் சித்திரை மாதத்தின் முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என மாற்றி, தமிழர்களை போற்றும் விதத்தில் பல்வேறு விருதுகளை வழங்கி வந்துள்ளார்கள் நமது அம்மா அவர்கள். இந்த ஆண்டிலிருந்து சிறந்த அறிஞருக்கு கம்பர் விருதும், சிறந்த பேச்சாளருக்கு சொல்லின் செல்வர் விருதும் வழங்கப்படும் என அறிவித்துள்ளது தமிழ்மொழி வளர்ச்சிக்கும், கலாச்சாரத்திற்கும் சிறப்பாகப் பங்களிப்பு செய்த தமிழ்ச் சான்றோர்களும், தமிழ்ப் புத்தாண்டு தினத்தை சித்திரைக்கு மாற்றி முத்திரை பதித்துள்ள நமது அம்மாவுக்கு தமிழக மக்கள் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளார்கள்.*

*அதேபோல, கடந்த தைத் திருநாளில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1 கோடியே 84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 30 கோடி ரூபாய் செலவில் ஒரு கிலோ அரிசியும், ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ரொக்கமாக ரூ.100/– உள்ளிட்ட பொருட்களை வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.*

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் முடித்து விடுகிறேன். இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்படுவதாகக் கூறி கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2 ஏக்கர் நிலம் மற்றும் இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்படுவதாகக் கூறி, அவர்களுடைய கட்சிக்காரர்கள் மட்டும் பயன் அடைகின்ற வகையில் திட்டமாகச் செயல்படுத்திக் கொண்டார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் எந்தத் திட்டமாக இருந்தாலும், ஒளிவு, மறைவு இன்றி மக்கள் பயன்பெறும் திட்டமாக அறிவித்து, குறிப்பாக எந்தத் திட்டங்களாக இருந்தாலும் மகளிர் பெயரிலேயே பட்டா வழங்கும் ஒப்பற்ற தாயாக விளங்கும் பெண் குலத்து தெய்வம், அதனால்தான் பெண் சமுதாயம் அம்மாவை பெறாத தாயாக நினைத்து வணங்குகிறார்கள்.*

*அதேபோல், சூரியனையே சுட்டெரிக்கும் வல்லமை மிக்க ஆற்றல் அரசியே! எங்கள் பொன்மனத் தலைவி அம்மா அவர்களே, வருகின்ற பிப்ரவரி 24 ஆம் தேதி பிறந்த நாள் காண இருக்கும் எங்கள் குல தெய்வமே! கழகத்தின் காவல் தெய்வமே! அம்மா அவர்கள் உடல் நலம் ஆரோக்கியத்தோடு இருக்க வேண்டும் என்று இறைவனை வேண்டி, ஆளுநர் உரைமீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறி, பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

*பிற்பகல் 2–25*

***திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைமீதான விவாதத்திலே பங்குகொள்ளும் நல்வாய்ப்பினை அளித்த தங்களுக்கு முதலில் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற முறையிலும், டெல்டா பகுதியிலிருந்து வந்தவன் என்ற முறையிலும் இன்றைக்கு அந்தப் பகுதி இருக்கக்கூடிய நிலைமையை நானும் கவலையோடு நோக்கிக் கொண்டிருக்கின்றேன்.*

[திரு. என். ஆர். ரெங்கராஜன்] [2013 பிப்ரவரி 6

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மழை பொய்த்துவிட்டது, வடகிழக்குப் பருவ மழை எந்த அளவிற்கு எங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று நினைத்தோமோ, அதுவும் பொய்த்துவிட்டது. காவிரி ஆற்றில் கர்நாடக அரசு தண்ணீர் விடவில்லை; காவிரியில் தண்ணீர் இல்லை. எனவே, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, தொழிற்சாலைகள் எதுவும் கிடையாது. முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய, நெல் விவசாயம், தென்னை, கரும்பு போன்ற விவசாயத்தை மட்டும் நம்பி இருக்கக்கூடிய எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களெல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது வருத்தத்திற்குரியதாக இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். எனவே, இப்படிப்பட்ட ஒரு நிலைமையிலே இந்த கவர்னர் உரையைப் பொறுத்தவரையிலே, அறிவிப்புகள் ஏதேனும் இருக்கும் என்று நினைத்தாலும்கூட, அறிவிப்புகள் இல்லாவிட்டாலும்கூட, ஆய்வு செய்து நிச்சயமாக நிவாரணம் வழங்குவோம் என்ற ஒரு வார்த்தையை நீங்கள் கொடுத்திருக்கின்றீர்கள்; அதை ஏற்றுக்கொள்கின்றோம். அதை நீங்கள் கொடுக்கும்போது விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 25,000 ரூபாயும் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பத்திற்கு 10,000 ரூபாயும் வழங்க வேண்டும்.

அதேபோன்று, தஞ்சையைப் பொறுத்தவரையிலே, தென்னை மிக அதிகமாக இருக்கக்கூடிய பகுதி. எங்களுடைய அமைச்சர் அவர்களுக்குக் கூட நன்கு தெரியும். தஞ்சை மாவட்டம் என்பது அதிகமாக தென்னை விளையக்கூடிய பகுதி. இப்போது தென்னை மரங்களும் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நேற்றுமுன்தினம்கூட மதுரை பக்கத்திலிருந்து, ஒரு செய்தித்தாளிலே வந்த ஒரு செய்தியை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு தேங்காய் என்பது, இப்போது வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்டு, ஒரு வாழைக்காயைப் போல இருக்கிறது என்று சொல்லி ஒரு படத்தைப் போட்டு அவர்கள் காண்பித்திருந்தார்கள். எனவே, அப்படி தென்னையும் இதுபோன்று பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய காரணத்தினாலே, தஞ்சை மாவட்டம் முழுவதுமே அதுபோன்று பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் வருத்தத்தோடு நான் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன். எனவே, அதற்குத்



2013 பிப்ரவரி 6] [திரு. என். ஆர். ரெங்கராஜன்]

தக்க நிவாரணம் வழங்கி நீங்கள் உதவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

டெல்டா மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே ** (குறுக்கீடு) இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். ** என்று சொல்கிறார்கள், அதை நீங்கள் ஆய்வு செய்யுங்கள். ஆனால், மறைமுகமாக இதற்குக் காரணமாக இந்த வறட்சி இருக்கிறது. வறட்சி என்பது ஏற்பட்டதற்கு நான் யாரையும் தனிப்பட்ட முறையில் காரணம் சொல்ல விரும்பவில்லை. மழை பொய்த்துவிட்டது; காவிரியில் தண்ணீர் வரவில்லை, வறட்சி ஏற்பட்டு இருக்கின்றது. ஆனால், ** வறட்சிதான் அதற்கு முக்கியமான காரணம். அதன்காரணமாக அதிர்ச்சியில் இறந்ததாகக்கூடச் சொல்கின்றார்கள். எதுவாக இருந்தாலும், அதையும் ஆய்வு செய்து அந்தக் குடும்பத்திற்குத் தக்க உதவி வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையைக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் வைத்துக்கொள்கின்றேன்.

இப்போது அந்தப் பகுதியிலே வாய்க்கால்கள் காய்ந்திருக்கக்கூடிய நிலையில் உள்ளன. கடந்த ஆட்சியில் நபார்டு திட்டத்தின்மூலமாக காவிரி ஆற்றின் வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டன. அதிலே வடகாடு வாய்க்கால் என்று சொல்லக்கூடிய ஒரு வாய்க்கால் என்பது விடுபட்டுப் போய்விட்டது. விடுபட்டுப் போனதற்கு, அப்போதே 190 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு புதிய திட்டத்தை அறிவித்து அதை நாங்கள் செயல்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். ஆனால், அது செயல்படுத்தப்படவில்லை. எனவே, தங்களது அரசாவது இந்த முறை அந்த வடகாடு வாய்க்காலை முழுவதுமாகத் தூர் வாரி, கரைகளைப் பலப்படுத்துவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, வறட்சி நிவாரணப் பணியாக, தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் யார் யார் காத்திருப்பில் இருக்கின்றார்களோ, அவர்களுக்கெல்லாம் இலவச மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டுமென்று கோருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வாய்க்காலினுடைய பணி இந்த முறை ஆய்வு செய்யப்பட்டு, வரும் ஆண்டிலே தூர் வாரப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, யார் யார் காத்திருப்பில் இருக்கின்றார்களோ, இலவச மின் இணைப்பிற்கு விண்ணப்பித்துவிட்டு நீண்ட நாட்களாக காத்திருப்பில் இருக்கும் அத்துணை விவசாயிகளுக்கும் உடனடியாக, முன்னுரிமை கொடுத்து மின் இணைப்புகளை வறட்சி நிவாரணப் பணியாக நீங்கள் வழங்க வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, பட்டுக்கோட்டை பகுதியிலே மணல் கிடைக்காமல், குவாரிகள் திறக்கப்படாமல் இருக்கக்கூடிய காரணத்தினாலே மணல் கிடைக்கவில்லை. மணல் கிடைக்காத காரணத்தினாலே கட்டுமானத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. மணலினுடைய விலை மிகக் கடுமையாக இருக்கின்றது. எனவே, மணல் கிடைப்பதற்கு தாங்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தினுடைய உத்தரவிற்கிணங்க பல மணல் குவாரிகள் மூடப்பட்டன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதற்குப் பின்னால், மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் வாயிலாக உத்தரவு வாங்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றமும் ஆணையிட்டு, அதை மத்திய அரசும் எங்களுக்குச் சுற்றறிக்கையாக அனுப்பியிருக்கிறது. அதற்குப் பின்னால் இப்போது 43 மணல் குவாரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மணல் விலை குறைக்கப்பட்டிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எங்கே மணல் விலை அதிகம், எங்கே கிடைக்கவில்லை என்று சொன்னால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2013 பிப்ரவரி 6]

பிற்பகல் 2–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவலைத் தெரிவிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோன்று, இன்றைக்குத் தமிழகம் எங்கும் ஆதி திராவிடர் மக்களுக்கு அரசால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் முழுவதுமாக பழுதடைந்திருக்கின்றன. அந்த வீடுகளை பழுதுநீக்கம் செய்வதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டத்தின்கீழ் பணம் கொடுக்கலாம் என்று சொல்லி இருக்கின்றீர்கள். பணம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். இருந்தாலுங்கூட, அவர்களுக்கு அந்த 25,000 ரூபாயை கையில் இருந்து போட்டு செலவழிப்பதற்கான வசதி வாய்ப்புகள் இல்லாத காரணத்தினாலே பல இடங்களிலே சிரமமாக இருக்கின்றது, எங்களால் கட்ட முடியவில்லை என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள். உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையிலே மாண்புமிகு மூத்த அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அரசைப் பொறுத்தவரையிலே, ஒருங்கிணைந்த திட்டமாக ஒரு திட்டத்தை ஏற்படுத்தி அவர்கள் அனைவருக்கும் இந்த வீடுகளை அரசே பழுதுநீக்கம் செய்து கொடுப்பதற்கு ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, அதிராம்பட்டினம் பேரூராட்சியில் இருக்கக்கூடிய கடற்கரையில் மீனவர்கள் படகைத் தள்ளிக் கொண்டு செல்லக்கூடிய அந்த வாய்க்கால் என்பது தூர்ந்து விட்டது என்று நீண்டகாலமாக அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கான திட்ட மதிப்பீடு சுமார் 50 இலட்சம் ரூபாய் வருமென்று சொல்கிறார்கள். எனவே, மீன் வளத் துறையின்மூலமாக மீனவர்களுக்கு வாய்க்காலை அமைத்துக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே

[திரு. என். ஆர். ரெங்கராஜன்] [2013 பிப்ரவரி 6

கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013 ஆம் ஆண்டின் ஆளுநர் உரையின்மீது புதிய தமிழகம் கட்சியினுடைய கருத்துகளை முன் வைப்பதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் உரையின்மீது பல்வேறு கருத்துகளைச் சொல்வதற்கு நினைத்திருந்தாலுங்கூட நேரமின்மையின் காரணமாக சில முக்கியமான கோரிக்கைகளை மட்டும் நான் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையில் பக்கம் 28–இல், பருவ மழை பொய்த்ததாலும், காவிரியில் தண்ணீர் திறந்துவிட கர்நாடகம் மறுத்ததாலும் டெல்டா பகுதியில் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, டெல்டா விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்பின் அடிப்படையில் உரிய நிவாரணம் அரசால் விரைவில் அறிவிக்கப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், தென் மேற்கு மற்றும் வட கிழக்குப் பருவ மழை பொய்த்துவிட்ட நிலையில், டெல்டா மாவட்டங்களில் மட்டுமல்ல, தென் மாவட்டங்களிலும் மிகப் பெரிய வறட்சி; அதேபோல, மேற்கு மாவட்டங்களிலும் வறட்சி; இங்கே டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்புகளைப் பார்வையிட அமைச்சர் குழு சென்று இருக்கிறது. எனவே, தென் மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்புகள், மேற்கு மாவட்டங்களில் தென்னை போன்ற பயிர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்புகளையும் கண்டறிவதற்கு உடனடியாக அமைச்சர் குழு செல்ல வேண்டுமென்பதுதான் புதிய தமிழகம் கட்சியினுடைய வேண்டுகோள். அதேபோல, டெல்டா விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குகின்றபோது, தென் மாவட்ட விவசாயிகளுக்கும் உரிய நஷ்ட ஈடு வழங்குவதற்குண்டான நடவடிக்கையை மாநில அரசு எடுக்க வேண்டும் என்பது மிக மிக முக்கியமான கோரிக்கையாகும்.

அடுத்தது, இந்த மின்சாரத் தட்டுப்பாட்டைப்பற்றி எல்லா கட்சியின் உறுப்பினர்களும் கோரிக்கை எழுப்பி இருக்கிறார்கள்.



2013 பிப்ரவரி 6] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

இப்போது என்னுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், சென்னையிலே இரண்டு மணி நேரம் மின்சாரத் தட்டுப்பாடு, கிராமங்களிலே 10 மணி அல்லது 14 மணி நேரம் மின்சாரத் தட்டுப்பாடு. இந்த மின்சார விநியோகம் இங்கே சென்னைக்கு ஒருவிதமாகவும், புறநகர் பகுதிகளுக்கு ஒருவிதமாகவும் இருப்பதை மாற்றி சீரான மின்சாரம் வழங்க வேண்டுமென்பதுதான் ஒட்டுமொத்த பொது மக்களுடைய கோரிக்கை. அதைத் தமிழ்நாடு அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்பதுதான். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இரண்டு மணி நேரம் மின்வெட்டு, மற்ற பகுதிகளிலே 10 மணி நேரம் மின் வெட்டு இருக்கிறது என்று சொன்னார். அங்கெல்லாம் இன்றைய நிலையில் அது 6 மணி நேரத்திற்கு மேல் என்று படிப்படியாக குறைக்கப்பட்டு, 12 மணி நேரமாக இருந்த மின்வெட்டு அதிகபட்சமாக 6 மணி நேரம் என்ற அளவிலேதான் மின் வெட்டு இப்போது இருக்கிறது. அது இன்னும் குறைக்கப்பட்டு வருகிறது. இன்னும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, ஜூன் மாதத்திலே நிறைவாக தேவைக்கேற்ப மின்சாரம் வழங்கப்பட்டு, மின் வெட்டே இல்லாத சூழ்நிலை ஏற்படும் என்று அம்மா அவர்கள் அறிவித்து அதைச் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சொன்னபடி அதுவும் செய்யப்படும்.

பிற்பகல் 2–35

சென்னையில் மட்டும் சிறப்பு முன்னுரிமை வழங்குகிறார்கள் என்று சிலர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். சென்னையிலே மின் வெட்டை அமல்படுத்தக்கூடாது என்று உயர் நீதிமன்றமும் ஆணை வழங்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவேளை அந்த ஆணை வழங்கவில்லை என்றாலும்கூட, எல்லோருக்கும் சமச்சீரான மின் விநியோகம் என்று செய்தாலும்கூட, இதனால் தமிழ்நாடு முழுமைக்கும் பெரிய அளவிலே மின்சாரம் பெறுகிற நேரம் அதிகரிக்கப்போவது இல்லை. அதிகபட்சம் போனால் அரை மணி நேரம் அல்லது 20 நிமிடங்கள் கூடுதலாகக் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. பெரிய அளவிலே நிவாரணம் கிடைக்கப்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 பிப்ரவரி 6

போவதில்லை. நீதிமன்ற உத்தரவு ஒருபுறம், மற்றொருபுறம் சமச்சீரான மின்சாரம் வழங்கினாலும்கூட, அதனால் மற்ற பகுதிகளுக்குப் பெருமளவிற்கு, நீங்கள் எதிர்பார்க்கிற அளவிற்கு பலன் கிட்டப் போவதில்லை. இதனால் எந்தவிதத்திலும் யாரும் பாதிக்கப்படப் போவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த சட்டமன்றத் தொடரிலேயே மிக முக்கியமான கருத்தை முன் வைத்தேன். எந்த அரசாக இருந்தாலும் அந்த அரசினுடைய திட்டங்கள் முழுமையாக மக்களுக்குக் கொண்டு செல்லப்பட்டால்தான், 5 ஆண்டுக் காலம் கழித்த பிறகு அந்த அரசினுடைய திட்டங்களை மக்கள் மதிப்பீடு செய்வதற்கு ஏதுவாக இருக்க முடியும். ஆனால், இப்போது அரசினுடைய திட்டங்கள் முழுக்க, முழுக்க அனைத்துமே அரசு அதிகாரிகளை மட்டுமே நம்பியிருப்பதாக இருக்கிறது. அரசினுடைய சிறப்புத் திட்டங்கள் ஆனாலும் சரி, வேறு எந்தத் திட்டங்கள் ஆனாலும் சரி, ** ஒரு தோற்றம் வெளிப்படையாகத் தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொத்தாம் பொதுவாக ஏதாவது ஒன்றை மேலெழுந்தவாரியாகச் சொல்லிவிட்டுப் போகக்கூடாது. எந்தவகையில் எந்த ** இருக்கிறது? குறிப்பிட்ட சம்பவத்தை நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னால், அதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு கருத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2013 பிப்ரவரி 6] [திரு. கே.பி. முனுசாமி]

தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்கள் முழுவதுமாக, நேரிடையாக மக்களுக்குச் செல்லக்கூடிய வகையிலே இப்போது தீட்டப்பட்டிருக்கின்றன; நடைமுறையில் செயல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் அவர்களும் இதுபோன்ற சமூக நலத் திட்டங்களை அறிவித்தார்கள், நடைமுறைப்படுத்தினார்கள். ஆனால் தேவைப்பட்டவர்களுக்குக் கொடுத்தார்கள். தேவையில்லாதவர்களுக்குக் கொடுக்காமல் திருப்பி எடுத்துச் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலையை அங்கே உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் எடுத்துக்கொண்டார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசியல் கலப்படம் இல்லாமல், அரசியல்வாதி உள்ளே நுழையாமல் அந்தந்தப் பகுதியில் இருக்கிற அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசுத் துறை அதிகாரிகள் வாயிலாக நேரிடையாக, உதாரணத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், விலையில்லாத மிக்சி, கிரைண்டர், ஃபேன், இன்று ஒவ்வொரு கிராமங்களிலும் எடுத்துச் செல்லப்பட்டு, அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர், அந்தப் பகுதியில் இருக்கிற மாவட்ட வருவாய் அலுவலர், அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினர், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் முன்னிலையில் இவை வழங்கப்பட்டு வருகின்றன. இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, பொத்தாம் பொதுவாக ஆட்சியினுடைய செயல்பாடுகளைப்பற்றி விமர்சனம் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் ஒரு point சொல்ல வந்தேன். அதற்குள் நீங்கள் வேறு விஷயத்திற்குப் போய்விட்டீர்கள். அதாவது சட்டமன்ற உறுப்பினர் அதிகமாக முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்றுதான் நான் சொல்ல வந்தேன். பல திட்டங்கள் சட்டமன்ற உறுப்பினரால் எடுத்துச் செல்லப்படுகிறபோது, 5 ஆண்டுக் காலத்தின் இறுதியில், மாவட்ட ஆட்சியர்கள் மாற்றப்படுவார்கள். தாலுகா அலுவலர்கள் மாற்றப்படுவார்கள், B.D.O–க்கள் சென்று விடுவார்கள். இந்த அரசின் திட்டங்கள்,

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2013 பிப்ரவரி 6

நல்ல திட்டங்கள் என்று மக்களிடத்திலே யார் எடுத்துச் சொல்வது? (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நிகழ்ச்சி நடக்கும்போதும் அது அரசு நிகழ்ச்சி. அரசு நிகழ்ச்சி நடக்கும்போது அரசின் பிரதிநிதி, மக்கள் பிரதிநிதி, நிச்சயமாக பத்திரிகையில் அவர்கள் பெயர் வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் பெயர் வருகிறது. அவர் அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொள்கிறார். தயவுசெய்து தாங்கள் செல்லவில்லை என்பதற்காக தவறான கருத்தைச் சொல்லக்கூடாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** என்னுடைய ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலே ஒரு I.T.I. இருக்கிறது. நாங்கள் அலுவல் காரணமாக வெளி மாநிலங்களுக்குச் சுற்றுப் பயணம் சென்றிருக்கிறோம், இரண்டு நாட்கள் தள்ளி வையுங்கள் என்று அந்தப் பகுதியின் அமைச்சருக்கு, சட்டமன்ற உறுப்பினருக்கு, சொல்லியும் கேட்கவில்லை. அந்த அமைச்சர் அந்தப் பகுதியில் உள்ள I.T.I–யில் கணினி வழங்குகிறார்கள், சைக்கிள் கொடுக்கிறார்கள். நாங்கள் எப்படி தொகுதிக்குள் மக்கள் தொடர்பான. . .

பிற்பகல் 2–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் என்ன பிரச்சினை என்றால், பொருள்கள் வந்துவிடுகின்றன. உதாரணத்திற்கு மிக்சி, கிரைண்டர், ஃபேன் போன்ற பொருள்கள் வந்துவிடுகின்றன. அந்தப் பொருள்களை வைப்பதற்கு இடம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் வேகமாகத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு வந்து மக்களிடத்தில் நேரடியாகச் சென்றுகொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நிறுத்தி வைப்பதற்குரிய நேரம், காலம் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பல்வேறு பணிகள் இருக்கலாம். அந்தப் பணிகளுக்கிடையே உங்களுக்கு முறையாக



2013 பிப்ரவரி 6] [திரு. கே.பி. முனுசாமி]

அறிவிக்கப்படுகிறது. அந்த அறிவிப்பின் வாயிலாக நீங்கள் வர வேண்டும். தனிப்பட்ட முறையில் நீங்கள் வெளியே செல்லும்போது, அது தவிர்க்க முடியாதது ஆகும். அதேபோல, உதாரணத்திற்கு மடிக்கணினி வந்தவுடன் உடனே கொடுக்கவில்லை என்றால், கல்லூரி மாணவர்கள் மறியலில் ஈடுபடுகிறார்கள். எனவே, இதனை உடனே கொடுத்தாக வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டத்தின்மூலம் வழங்கும் பொருட்களைக் கொடுப்பதற்கு நீங்கள் ஏன் லேட் செய்கிறீர்கள் என்று கல்லூரி மாணவர்கள் கேட்கிறார்கள். உடனே கொடுங்கள் என்று சொல்கிறார்கள். பொருள்களை வேகமாகக் கொடுக்க வேண்டிய நிலைமை உருவாகி விடுகிறது. சட்டமன்ற உறுப்பினர் சட்டமன்றக் குழுவின் சார்பாக டெல்லி சென்றிருந்தால், அது அரசின் குற்றம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் முதலில் சொன்ன கருத்து வேறு. அந்தக் கருத்தை அவர் சொல்லி முடித்துவிட்டு, அடுத்து யார் கொடுப்பது என்ற பிரச்சினைக்குள் சென்றுவிட்டார்கள். அந்தக் கருத்தில் முதலில் சொன்ன கருத்து ** இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அந்தக் கருத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது குற்றச்சாட்டாக இருப்பதால், அது குற்றம் இல்லை, யாரெல்லாம் விலையில்லாத அரிசியை வாங்கிக்கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் விலையில்லாத மிக்சி, கிரைண்டர், ஃபேன் இவைகளையெல்லாம் அவர்களது இல்லம் தேடிச் சென்றுகொண்டிருக்கின்றன என்பதுதான் உண்மை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்ன அந்தக் கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *அதில் எந்தத் தவறும் இல்லை. அதாவது ** என்பது . . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *யார் கொடுப்பது என்பது பற்றி நீங்கள் சொல்லவில்லை. அதாவது நீங்கள் சொன்னது என்ன? மக்கள் நல சிறப்புத் திட்டங்களைக் கொண்டு சேர்ப்பதில் மிகப்பெரிய ** இருக்கிறது என்று சொன்னீர்கள். அது தவறு. கொண்டு சேர்ப்பதில் எந்தத் தவறும் இல்லை.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். நான் கடந்த முறை இதைத்தான் சொன்னேன். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வாகனங்கள் கண்டிப்பாக கொடுக்கப்பட வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அவர்களுக்கு அலுவலகம், ஒரு செயலகம் கண்டிப்பாக இருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதி குறைந்தது 5 கோடி ரூபாயாக இருக்க வேண்டும். இதெல்லாம் இருந்தால்தான் ஒரு ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் விரைந்தும், பரந்தும் மக்களிடத்தில் செல்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். இதைத்தான் நான் ** என்று சொல்ல வந்தது. அதாவது, அந்த ** என்பது அரசுக்கும். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலக அறை வேண்டும் என்று சொல்வது உகந்தது அல்ல. ஏனென்று சொன்னால், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தனி அலுவலகம் அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், அடுத்து ஒரு கருத்தைச் சொன்னீர்கள். ரூபாய் 5 கோடி என்று சொன்னீர்கள். அனேகமாக இந்தியத் துணைக் கண்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதி ரூபாய் 2 கோடி என்பது தமிழகத்தில் மட்டும்தான் இருக்கிறது என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, இன்னும் இரண்டு நிமிடத்தில் உரையை முடியுங்கள். இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டும்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்–ஒழுங்கைப் பற்றி சொல்லுகின்றபோது, தமிழ்நாடு அரசு முடிந்த அளவிற்கு சட்டம்—ஒழுங்கைப் பாதுகாப்பதிலே முனைப்பைக் காட்டி வருகிறது என்பதிலே எந்தவிதமான கருத்து மாறுபாடும் கிடையாது. ஆனால், சில இடங்களில், குறிப்பாக சரளை மண் அள்ளுவது, மணல் குவாரிகளில் மணல் அள்ளுவது, இதில் ஆளும் கட்சியின் பெயரைச் சொல்லிக்கொண்டு சிலபேர் தவறுகளில் ஈடுபடுகிறார்கள். உதாரணத்திற்கு கடந்த முறை நான் ஒரு குற்றச்சாட்டை இந்த அவையிலே பதிவு செய்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எழுந்து எங்கே ஆதாரம் என்று கேட்டார்கள். ***

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். ** என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

*பிற்பகல் 2–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே இடம் பெறாத ஒருவருடைய பெயரைக் குறிப்பிட்டு அவர்மீது குற்றச்சாட்டு சுமத்தியிருக்கிறார். அவருக்குத் தன்னிலை விளக்கம் சொல்லக்கூடிய வாய்ப்பு இங்கே இல்லை. ஆகவேதான் அந்தக் குற்றச்சாட்டுகளை ஒட்டுமொத்தமாக அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.*

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி தனிப்பட்ட நபர் பற்றி குற்றச்சாட்டாகக் குறிப்பிட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *நான் சென்றது* **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின் துறை அமைச்சர் சொன்னதுபோல் குற்றச்சாட்டாக சொன்ன விவரங்களும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அது தொடர்புடைய குற்றச்சாட்டுகள் அனைத்தும் நீக்கப்படுகின்றன.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *எல்லாவற்றையுமே நீக்கிவிட்டால் எப்படி? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் நீக்கச்சொல்லவில்லை.* ** *உறுப்பினர் சொல்லிய குற்றச்சாட்டுகளைத்தான் இங்கே அவைக் குறிப்பிலிருந்து நீக்கச் சொல்கிறோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார். அவையில் இல்லாத ஒருவரைச் சொன்னதால் நீக்கவேண்டுமென்று சொன்னார். அதனால் நீக்கப்படுகிறது.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *டாக்டர் கிருஷ்ணசாமி, இந்த சப்ஜெக்ட்டை விட்டுவிட்டு வேறு சப்ஜெக்ட்டில் பேசி உரையை முடியுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ** *(குறுக்கீடுகள்)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.*



2013 பிப்ரவரி 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் இந்த சப்ஜெக்ட்டை விட்டுவிட்டு வேறு சப்ஜெக்ட்டில் பேசி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்ன கருத்தை முழுவதுமாக நீக்கவேண்டுமென்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) இப்போது பேசிய கருத்தும் மாண்புமிகு அமைச்சர் சொன்ன கருத்தும் இதுசம்பந்தப்பட்டதாக இருக்கின்ற காரணத்தால் இதை முழுவதுமாக அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டு அடுத்த கருத்துக்கு மாண்புமிகு உறுப்பினர் செல்வதற்கு உத்தரவிட வேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *டாக்டர் கிருஷ்ணசாமி சொன்ன குற்றச்சாட்டும், தொழில் துறை அமைச்சர் சொன்னதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *தமிழகத்தில் இருக்கக்கூடிய 384 ஒன்றியங்களில் 184 ஒன்றியங்களில் நிலத்தடி நீர் அபாயகரமான கட்டத்திற்குச் சென்றிருக்கிறது. அதாவது மத்திய அரசினுடைய தேசிய நீர் வளக் கொள்கையை நாம் எதிர்க்கிறோம் என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், மாநில அரசு இங்கே தென் மாவட்டங்களில் ஏற்கெனவே வறட்சிக்கு இலக்காகும் பகுதியான ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி தொடர்ந்து வறட்சியில் இருக்கக்கூடிய பகுதி. தூத்துக்குடி மாவட்டப் பகுதியும் அப்படி இருக்கக்கூடிய பகுதி. காலையில் எழுந்தால் பல் துலக்குவதற்கும், கால் கழுவுவதற்கும், குளிப்பதற்கும்கூட தண்ணீர் கிடையாது. ஆனால், ஒரு கம்பெனி இறால் மீனை கழுவுவதற்கு தண்ணீர் வேண்டுமென்பதற்காக அவர்கள் நிலத்தடி நீரை எடுத்துச் செல்ல அனுமதி கொடுக்கிறார்கள். ஆனால் அங்கே குடிப்பதற்கு தண்ணீர் இல்லை. நாங்கள் நிலத்தடி நீரை வணிக நோக்கத்திற்காக எடுத்துச்செல்வதைத் தடைசெய்யவேண்டுமென்று சொல்கின்றபோது அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் இன்றுவரையிலும் எடுக்கவில்லை. எனவே, பொதுவாக நிலத்தடி நீரை குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு கொண்டு செல்வதற்கு . . .*

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் அவர்களுக்கு என்ன நிலையோ தெரியவில்லை. இங்கே மாறி மாறி பேசிக்கொண்டிருக்கிறார். அதாவது யாரோ ஒருவருக்கு இறால் மீன் கழுவுவதற்காக நிலத்தடி நீர் கொடுக்கிறார்கள் என்று பேசிக்கொண்டிருக்கிறார். குளிப்பதற்கு நீர் இல்லை என்று சொல்கிறார். குற்றச்சாட்டு இருந்தால் விவரமாகச் சொல்லுங்கள். எந்தப் பகுதியிலே எந்த ஊரிலே என்ன நடந்தது என்று விவரம் சொல்லுங்கள். ஆதாரம் சொல்லுங்கள். தயவு செய்து பொத்தாம் பொதுவாகச் சொல்லக்கூடாது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *டாக்டர் கிருஷ்ணசாமி, உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

*பிற்பகல் 2–50*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *அங்கிருந்து தொடர்ந்து குறைந்தபட்சமாக 500 லாரிகளில் தண்ணீரைக் கொண்டுசெல்கிறார்கள். ஆனால், ஒட்டப்பிடாரத்திற்கென்று இருக்கக்கூடிய பஞ்சாயத்து கிணற்றில் தண்ணீர் கிடையாது. ஒட்டப்பிடாரம் பக்கத்தில் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து தொகுதிக்கு வெளியே போகிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *தண்ணீர் எங்கிருந்து செல்கிறது?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Habitation *ஒட்டப்பிடாரம் பக்கத்தில் இருக்கிற பாஞ்சாலங்குறிச்சியில் இருக்கக்கூடிய இடத்திலிருந்து 20 கி.மீ. தொலைவில் இருக்கக்கூடிய அந்தத் தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் லாரிமூலம் எடுத்துச்செல்லப்படுகிறது.*



2013 பிப்ரவரி 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *அந்தத் தண்ணீர் யாரால் எங்கு எடுக்கப்படுகிறது? அரசு கொடுக்கிறதா அல்லது உள்ளாட்சியிலிருந்து எடுத்துச்செல்கிறார்களா?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *அவர்களுடைய நிலத்திலிருந்து எடுத்துக் கொண்டு போகிறார்கள். நிலத்தடி நீரிலிருந்து எடுத்துச் செல்கிறார்கள். அதன் பக்கத்தில் இருக்கிற பஞ்சாயத்து இடத்திலுள்ள தண்ணீர் எல்லாம் குறைந்துபோய்விடுகிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *அவர்களுடைய நிலத்திலிருந்து எடுத்துக் கொண்டு போனால் நாம் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *டாக்டர், இன்னும் மூன்று பேர் பேசவேண்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *எந்த இடத்திலிருந்து தொழிற்சாலைக்கு குடிநீர் எடுத்துச்செல்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொல்லவேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் புதிய சப்ஜெக்ட்டுக்கு போகவேண்டாம், உரையை முடியுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *நிலா* sea–foods *என்னும் ஒரு தொழிற்சாலை மட்டுமல்ல; அங்கு இருக்கக்கூடிய நான்கு தனியார் மின் நிறுவனங்களுக்கும். அதாவது நிலா* sea foods *என்னும் இறால் பண்ணைக்கும். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2013 பிப்ரவரி 6

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *எந்த வருடத்திலிருந்து என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லவேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *பல மாதங்களாக, பல வருஷங்களாக எடுத்துச் செல்கிறார்கள் (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *எந்த வருடத்திலிருந்து என்று சொல்லுங்கள். கடந்த ஆட்சியிலிருந்து போகிறதா?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *இது தனிப்பட்ட ஆட்சியைக் குற்றம் சொல்வது இல்லை. கடந்த சில வருடங்களாகவே இச்செயல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஆட்சி என்று சொல்ல முடியாது. அந்த ஆட்சியிலும் போய்க் கொண்டிருந்தது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றுதான் சொல்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆதங்கம் அங்குள்ள மக்களுக்கு குடிப்பதற்கு நிறைவான தண்ணீர் வேண்டும் அவ்வளவுதான். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு உறுதியாக அனைத்து மக்களுக்கும் நிறைவான தண்ணீர் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியை உங்களுக்குச் சொல்வதோடு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மூன்று நிலைகளில் நிலத்தடி நீரின் அளவு குறைகின்ற பட்சத்தில் யாராவது தனிப்பட்ட முறையில் நிலங்களை உறிஞ்சுவார்கள் என்று சொன்னால், அரசு கடுமையாக நடவடிக்கை எடுத்து மக்களுக்குத் தண்ணீர் வழங்கும் என்பதை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்வார்கள்*



2013 பிப்ரவரி 6] [திரு. கே.பி. முனுசாமி]

*என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உங்களுக்கு திருப்தியான பதிலைச் சொல்லிவிட்டார்கள். முடியுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *இதைத்தான் எதிர்பார்த்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக அரசுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, கடைசியாக ஒரு கோரிக்கை. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் நன்றி சொல்லி உட்காருங்கள். இன்னும் இரண்டு பேர் பேசவேண்டும்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *முக்கியமாக ஒன்றைக் கூறுகிறேன், பாராட்டுவதைப்பற்றி அண்ணன் குணசேகரன் அவர்கள் நேற்று சொல்கின்றபோது எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஒரு அரசினுடைய குறைகளைச் சுட்டிக்காட்டுகின்ற காரணத்தாலே அரசை காயப்படுத்துவதாக பொருள் அல்ல. ஆனால் என்னைப் பொறுத்தமட்டிலும் இந்த அரசை எந்த இடத்தில் பாராட்ட வேண்டுமோ அந்த இடத்தில் பாராட்டுவதில் தவறு கிடையாது.*

*கடந்த நவம்பர் மாதம் 7 ஆம் தேதியிலிருந்து 9 ஆம் தேதி வரையிலும் இலண்டனில் ஒரு மாநாடு நடைபெற்றது, ஈழத் தமிழ் மக்களுக்காக. அந்த மாநாட்டில் 14–க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்கள், நாடாளுமன்ற வளாகத்தில் கலந்து கொண்டார்கள். உலகத்தினுடைய பல்வேறு நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். அதற்குப் பிறகு அன்று மாலையில் ஒரு பெரிய மாநாடு நடந்தது. அதிலும் கலந்துகொண்டார்கள். எல்லோரும் அந்த மாநாட்டில் பேசுகின்றபோது ஒவ்வொரு கட்சியும் தாங்கள் ஈழத் தமிழர்களுக்கு என்ன செய்தோம் என்பதைச் சொல்லிக் கொண்டு இருந்தார்கள். இங்கே இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியினுடைய பொதுச் செயலாளரும்*

கலந்துகொண்டனர். பல்வேறு கட்சிகளில் இருந்தும் கலந்து கொண்டார்கள். ** எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், ஒரு மிக முக்கியமான தீர்வாகச் சொல்லப்பட்டிருக்கிறது, அதாவது, இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கவேண்டுமென்று. அப்படிச் சொல்லுகின்றபோது அந்த இலண்டன் மாநாட்டினுடைய மிக முக்கியமான தீர்மானம் என்னவென்று சொன்னால், அதாவது இலங்கைக்கு எதிராக சர்வதேச சுதந்திரமான விசாரணை ஒன்றை நிறுவிடவேண்டும். அதற்கு தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி அனுப்பினால்தான் அதை இந்திய அரசு காதுகொடுத்துக் கேட்கும் என்பதை நான் சொல்லிவிட்டு, ஏற்கெனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கச்சத் தீவை மீட்பதற்கும், ராஜபக்ஷே அரசுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிப்பதற்கும், அதைபோல 3 தமிழர்களைப் பாதுகாப்பதற்கும் ஏகமனதாக இங்கே தீர்மானம் அனுப்பியிருக்கிறார். எனவே, இங்கே நாம் ஒரு மேடையில் இருக்கக்கூடியவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் ஏகமனதாக வற்புறுத்தினால் நிச்சயமாக இந்தத் தீர்மானம் நிறைவேறும் என்று அவர்களை மனதார அந்த இடத்திலே நான் பாராட்டி இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, சரி பாராட்டியதற்கு நன்றி, உட்காருங்கள்.

பிற்பகல் 2–55

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அந்த அடிப்படையிலே மிக முக்கியமான வேண்டுகோள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த மாண்புமிகு அவைக்கும் நான் வேண்டிக்கொள்வது, இலங்கை அரசுக்கு எதிராக மார்ச் மாதம் 22 ஆம் தேதி ஐ.நா.–வில் மனித உரிமைகளுக்கான தீர்மானம் கொண்டுவரப்படுகிறது, இதிலே இந்தியா ஒரு சரியான முடிவெடுக்கவேண்டும். ஏற்கெனவே கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தின் அடிப்படையிலே அமைக்கப்பட்ட விசாரணைக் குழு உண்மையை விசாரிக்கவில்லை. அந்த மனித உரிமை மீறல்கள் அல்லது இனப் படுகொலைகள் பற்றி விசாரிக்கவில்லை. எனவே, சர்வதேச நாடுகள் உள்ளடங்கிய ஒரு விசாரணை ஆணையம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





நிறுவப்பட வேண்டுமென்று சொன்னால், இந்தியா வலுவாக அமெரிக்கா கொண்டுவரக்கூடிய தீர்மானத்தை ஆதரித்தே தீரவேண்டும். அதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால், தமிழக அரசு இந்த சட்டமன்றத்திலே மீண்டும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால்தான், அதுகுறித்து நிச்சயமாக ஒரு நல்ல தீர்வு கிடைக்கும். தமிழர்களுக்கு நல்ல விடிவுகாலம் கிடைக்கும். அதைத்தான், மீண்டும் இந்த அவையிலே, இந்த ஒட்டுமொத்த சபையின் சார்பாக, புதிய தமிழகம் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, நான் முடிப்பதற்கு முன்பாக ஒரேயொரு கோரிக்கை. வழக்கம்போல் வைப்பது என்றாலும்கூட, அது மிக முக்கியமானது. இங்கே பங்கீட்டு ரீதியுடன்கூடிய பொருளாதார வளர்ச்சி ஒடுக்கப்பட்டவர்களும் நிறைவாக, கண்ணியத்துடனும், கௌரவத்துடன் வாழ வழி செய்வதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் குறிக்கோள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்தமட்டிலும், இந்த மக்களுடைய முன்னேற்றத்திற்கு ஏறக்குறைய 200 கோடி ரூபாய்க்கு மேலாக உயர் கல்வி படிக்கக்கூடிய மாணவர்களுக்கு நேரடியாக அவர்களுடைய கல்விக் கட்டணத்தை தமிழக அரசே வழங்குவதெல்லாம் பாராட்டுக்குரியது. என்னுடைய வேண்டுகோள் என்னவென்று சொன்னால், ஒரு சமுதாயம் முன்னேறுவதற்கு வெறும் பொருளாதாரம் மட்டுமல்ல. அந்தச் சமுதாயம் முன்னேற, அந்த சமுதாயத்திற்குண்டான கௌரவம் இருக்கவேண்டும். நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவது, ஏறக்குறைய 76 சாதிகள் உள்ளடங்கிய ஒரு துறைக்கு பொதுவான ஒரு பெயரிடவேண்டும். அது ஒன்றுதான் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். அதைப்போல பள்ளர், குரும்பர், காலாடி, பண்ணாடி, தேவேந்திரகுலத்தார், மூப்பன் என்று அழைக்கக்கூடிய அனைவரையும் சேர்த்து தேவேந்திரகுல வேளாளர் என்று அழைப்பதற்கு எந்தவிதமான சிரமமோ, சிக்கலோ அதில் கிடையாது. யாரும் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப் போவதும் கிடையாது. ஏனென்று சொன்னால், இது யாருக்கும் எதிரானது அல்ல. எல்லா சமுதாயத்தினரும் கௌவரத்தோடு அழைக்கப்படுகிறார்கள். நாயக்கர், நாயக்கர் என்று அழைக்கப்படுகிறார்கள்; கவுண்டர், கவுண்டர் என்று அழைக்கப்படுகிறார்கள்; நாடார், நாடார் என்று

அழைக்கப்படுகிறார்கள். ஆனால், தேவேந்திரகுல வேளாளரை மட்டும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் இருக்கக்கூடியவர்களை பள்ளர் என்றோ அல்லது வேறு எப்படியோ அழைப்பது, எந்த விதத்தில் சரியாக இருக்கமுடியும்? ஏற்கெனவே, நாங்கள் பலமுறை முதலமைச்சர் அவர்களிடத்திலே இது குறித்து கோரிக்கையாக வைத்திருக்கின்றோம். அதை நிச்சயமாக இந்த அரசு நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கின்றேன்.

அதைப்போல உள்ஒதுக்கீட்டில் மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பாதிப்பை கண்டறிவதற்கு அமைச்சர் குழு ஒன்றை நியமித்து, அது குறித்து அந்த அமைச்சர் குழு முடிவெடுக்கும்படி விடவேண்டும். ஏனென்று சொன்னால், பெரும்பான்மையான சமுதாயத்தினர் அதிலே பாதிப்புக்கு ஆளாகின்றனர் என்பதை மட்டும் சுட்டிக்காட்டி நான் இந்த ஆளுநர் உரையின்மீது புதிய தமிழகம் கட்சியின் சார்பாக பல்வேறு கருத்துகளை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றிகூறி, விடைபெறுகிறேன். வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகின்றபோது, இலங்கை தமிழர்களுக்காக லண்டனில் நடைபெற்ற மாநாட்டில் ** எங்கள் கட்சியின் சார்பாக, இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய மாநிலச் செயலாளர் திரு. தா. பாண்டியன் அவர்கள் கலந்துகொண்டார்கள். தேசிய செயலாளர், ராஜ்ய சபா உறுப்பினர், திரு. டி. ராஜா அவர்கள் கலந்துகொண்டு, நம்முடைய தமிழக சட்டமன்றத்திலே ஒருமனதாக நிறைவேற்றியிருக்கக்கூடிய தீர்மானத்தைப் படித்து சொன்னது மட்டுமல்ல, தமிழர்களுக்காக, உறுதியாக இந்தச் சட்டமன்றத்தில் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல, இனப் படுகொலை தடுத்து நிறுத்தப்படவேண்டும்; அங்கே அரசியல் தீர்வு ஏற்பட வேண்டுமென்று மாநாட்டிலே உரையாற்றினார்கள். அதற்கான செய்திகளும், அதற்கான பத்திரிகை செய்திகளும், குறிப்பும் எங்களிடத்திலே உள்ளன. அவர்கள்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





சொல்லியிருக்கக்கூடிய கருத்து அவைக் குறிப்பிலே இடம்பெறக் கூடாது என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும். அவர், ராஜ்ய சபா உறுப்பினர் திரு. டி. ராஜா அவர்கள் சொன்னதை குற்றச்சாட்டு போன்று சொல்லியிருக்கிறார். எனவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டாக சொன்ன அந்தப் பகுதியா? (குறுக்கீடு) கலந்து கொண்டார்கள். ** அதனால், டாக்டர் கிருஷ்ணசாமி பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கலாம் என்று உத்தரவிடப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** உள்ஒதுக்கீடு இரத்து செய்யப்பட வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் வலியுறுத்தினார்கள். அடுக்கப்பட்ட மூட்டையில், அடி மூட்டையாக இருக்கிற அருந்ததியர்களுக்கு உள்ஒதுக்கீடு என்பது இங்கெல்லாம் விவாதித்து, நீண்டகாலமாக போராடப்பட்டு கொடுக்கப்பட்டது. அப்படி கொடுக்கப்பட்டிருக்கிற அந்த உள்ஒதுக்கீடு இருந்தால்தான், அவர்கள் மேம்பட முடியும் என்று நான் வலியுறுத்துகிறேன். எனவே, அந்தக் கருத்தை அவர் வலியுறுத்தக்கூடாது என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, அந்த சப்ஜெட்டை அதோடு விட்டுவிடுங்கள். அப்புறம், அது வேறு எங்கேயோ போகும். உட்காருங்கள். (குறுக்கீடு) அந்த சப்ஜெக்ட் வேண்டாம், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2013 பிப்ரவரி 6

பிற்பகல் 3–00

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கவர்னர் அவர்கள் உரையில் பேச வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு கவர்னர் உரையில் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பற்றி கூறியிருக்கின்ற வார்த்தை கவர்னர் உரையில் ‘தளர்வுறாத துணிவு, அசையாத உறுதி, திடமான முடிவு, தீர்க்கமான நடவடிக்கை ஆகியவற்றின் உறைவிடமாகத் திகழும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்’ என்று குறிப்பிட்டிருப்பது, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால் அவர்களுடைய நடவடிக்கையைப் பார்த்து, அவர் சிறப்பாகச் செய்கின்ற செயல்களைப் பார்த்து, மாண்புமிகு கவர்னர் அவர்கள் இவ்வளவு சிறப்பாகச் சொல்லியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய கோரிக்கையை ஏற்று, கள்ளர் சீரமைப்புத் துறையிலே உசிலம்பட்டி, செக்கானூரணி, ஆண்டிப்பட்டி போன்ற மூன்று பகுதிகளில் 3 பாலிடெக்னிக்குகளை உருவாக்கிக் கொடுத்தும், அவை ஒவ்வொன்றிற்கும் 13 கோடியே 80 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்தும் இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மனமார அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

அதேபோன்று, செக்கானூரணியில் பெண்கள் பள்ளி வேண்டும் என்று பலமுறை நாங்கள் கேட்டபோது, அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கள்ளர் சீரமைப்புத் துறையில் இருக்கின்ற பள்ளியாக பெண்களுக்கு ஒதுக்கி, 2 கோடியே 20 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நாங்கள் மனமார பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இன்றைக்கு இலங்கையில் இருக்கின்ற தமிழர்கள்மீது, பரிவு காட்டுகின்ற வகையில் தி.மு.க. டெசோ மாநாடு நடத்துகிறார்கள், தீர்மானத்தை ஐ.நா. சபைக்கு கொண்டு செல்கிறார்கள், டெல்லிக்கு



2013 பிப்ரவரி 6] [திரு. பி.வி. கதிரவன்]

கொண்டு செல்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், 2009–லே கேப்டன் பிரபாகரன் அவர்களை முள்ளிவாய்க்கால் பகுதியில் கொன்றபொழுது, இதே தமிழகத்தில் ஆட்சி புரிந்தவர்கள் தி.மு.க.–காரர்கள். மத்தியிலும் இதே காங்கிரஸ் அரசு, ஐக்கிய முன்னணி அரசு ஆண்டு கொண்டிருந்தது. ஆனால், அப்பொழுதெல்லாம் வவுனியாவில் இலங்கைத் தமிழர்களை எல்லாம் முள்வேலியில் அடைத்து வைத்து, பாதிப்புக்குள்ளாகின்ற இலங்கைத் தமிழ் மக்களைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மத்திய அரசும், இந்த தி.மு.க. அரசும்தான். ஆனால், இன்று தாங்கள் மார்தட்டி இந்த இலங்கை தமிழர்களுக்காகப் போராடுவோம் என்று சொல்வது, இந்த நாடகம் தமிழக மக்களிடம் நிற்காது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, மத்திய அரசு, அதாவது காவிரி நடுவர் நீதிமன்றத் தீர்ப்பை மத்திய அரசு அரசிதழில் வெளியிட வேண்டும் என்று அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி எல்லாம் பல முறை கேட்டு வந்திருக்கிறது. ஆனால், அந்த நேரத்தில் தமிழகத்தில் ஆட்சியில் இருந்தவர்கள் யார்? மத்தியில் ஆட்சியில் இருந்தவர்கள் யார்? இங்கே தி.மு.க. ஆட்சியில் இருந்தார்கள். மத்தியில், ஐக்கிய முன்னணி அரசு இருந்தது. அந்த ஐக்கிய முன்னணி அரசிலே தி.மு.க. அங்கம் வகித்தார்கள். ஆனால், அப்போது அவர்களுக்குத் தெரியவில்லையா! இது தமிழகத்திற்கு முக்கியமானது, காவிரி டெல்டா பகுதி மக்களையெல்லாம் பாதிக்கின்ற ஒன்று, தமிழக மக்களைப் பாதிக்கின்ற ஒன்று. தமிழர்களைப் பாதிக்கின்ற பகுதியை விடக்கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தெரியவில்லையா? இங்கு இருக்கின்ற காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியவில்லையா? ஏன் இப்படியெல்லாம் செய்தார்கள்? மாண்புமிகு முதல்வர் அவர்கள் உச்ச நீதிமன்றத்திலே சொல்லி, உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து, இன்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பை அளித்திருக்கிறது. 20 ஆம் தேதிக்குள் மத்திய அரசின் அரசிதழில் வெளியிட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று நிறைவேற்றப்பட்டிருப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களை பாராட்டுவது என்னுடைய கடமை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தை சிறந்த தமிழகமாக மாற்ற வேண்டும் என்று 'தொலைநோக்குத் திட்டம் 2023' என்ற திட்டத்தைக் கொண்டு வந்து. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உட்காருங்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** இன்றையதினம் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து தமிழக மக்களுக்காக ஒவ்வொரு நாளும் திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களை தமிழக அரசு அறிவித்துக் கொண்டிருப்பது இந்த மக்களுக்காகத் தன்னைத் தேர்ந்தெடுத்த அந்த மக்களுக்காக உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் தொலைநோக்குத் திட்டத்தைக் கொண்டு வந்து ஒவ்வொரு ஆண்டும் அதற்குப் பணம் ஒதுக்கிக் கொண்டிருப்பதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மத்திய அரசு டீசல் விலை, பெட்ரோல் விலையை உயர்த்த எண்ணெய் நிறுவனமே விலையை நிர்ணயம் செய்யும் என்று உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. இது தமிழக மக்களுக்கும், இந்திய மக்களுக்கும் எவ்வளவு பாதிப்பை உண்டாக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இன்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அதாவது, எண்ணெய் நிறுவனத்தினுடைய விலையை எண்ணெய் நிறுவனமே நிர்ணயம் செய்யலாம் என்று சொன்னால் நாளைக்கு என்ன நிலை வரும்?

பிற்பகல் 3–05

பொதுவாக, டீசல், பெட்ரோல் விலை ஏறினாலே அனைத்துப் பொருட்களின் விலைகளும் ஏறும் என்பது இந்திய மக்களுக்குத் தெரியும், ஆட்சியில் இருப்பவர்களுக்கும் தெரியும். அதுமட்டுமல்ல, இரட்டை விலை. தமிழகத்திலே 45 காசு டீசல் விலையை ஏற்றினால்—தமிழக போக்குவரத்துத் துறை கடந்த ஐந்தாண்டுக் கால தி.மு.க. ஆட்சியிலே நலிவுற்று, நலிவடைந்து இருந்ததை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, போக்குவரத்துத் துறையைச் செப்பனிட்டு, பணம் ஒதுக்கி, நல்ல நிலைக்கு வரும்போது—இன்றைய தினம் 11 ரூபாய் 45 காசு இரட்டை விலை விதித்திருக்கிறார்கள் என்று சொன்னால், மத்திய அரசு என்ன சிந்தனையில் இருக்கிறது? தமிழகப் போக்குவரத்துக் கழகத்தில் பள்ளி மாணவர்கள், ஏழையெளிய மக்கள் அதில் செல்கிறார்கள், வயதானவர்களுக்குச் சலுகை வழங்கப்படுகிறது, இப்படி சலுகைகள் வழங்குகின்ற, மக்கள் சேவை செய்கின்ற போக்குவரத்துக் கழகத்திற்கு இரட்டை விலை கொண்டு வருவது எப்படி நியாயம்?





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிரவன் அவர்கள் பேசும்போது தவறுதலாக கடந்த தி.மு.க. ஆட்சியின்போது என்று சொல்வதற்குப் பதிலாக ** என்று சொல்லிவிட்டார். எனவே, கடந்த தி.மு.க. ஆட்சி என்று திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தி.மு.க. ஆட்சி என்று திருத்தம் செய்துகொள்ளவும்.

**திரு. பி.வி. கதிரவன்:** கடந்த ஐந்தாண்டுக் காலம் தி.மு.க. ஆட்சி இருந்தது. அவர்கள் ஆட்சிக் காலத்திலே போக்குவரத்துத் துறை எப்படி இருந்தது என்பது அனைவருக்கும் தெரியும். அந்த அடிப்படையில் மத்திய அரசு, குறிப்பாக போக்குவரத்துத் துறைக்கு. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், என்ன சொல்லுங்கள்?

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில விஷயங்களை discussion செய்தால்தான் உண்மை வெளியே வரும். அதற்கு வாய்ப்புத் தர வேண்டாமா, அதற்கு தானே நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் தற்போது 3.06 ஆகிவிட்டது. சீக்கிரம் பேசுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** நேரமாகிவிட்டால் எங்களுக்கு சாப்பாடு போடுங்கள். வெளி மாநிலங்களில் அதிகமான நேரம்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஒதுக்குகிறார்கள். இதை நான் குற்றமாகச் சொல்லவில்லை. அன்புக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. கதிரவன் மட்டுமல்ல, எல்லோரும் மத்திய அரசைப் பற்றி பேசுகிறார்கள். ஆனால், ஒரு நாட்டினுடைய பிரதமர் தன்னை தாழ்த்தி கர்நாடக அரசின் முதலமைச்சரிடத்தில் காவிரியிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று சொல்கிறார். தமிழக மக்களிடம் அன்பு இல்லாமலா சொல்கிறார்? கர்நாடக அரசு கேட்கவில்லை. கர்நாடகத்தில் உள்ள பாரதிய ஜனதா கட்சி முதலமைச்சர் கேட்கவில்லை. அதனால் 356 விதியை அமல்படுத்த முடியுமா? அதற்குரிய சக்தி இன்றைய சூழ்நிலையில் இருக்கிறதா? ஆகவே தான் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டில்லியிலே நடந்த காவிரி நதி நீர் ஆணையக் கூட்டத்திலே மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். உத்தரவு இட்டதைச் செயல்படுத்த முடியவில்லையே, அப்படிச் செயல்படுத்தமுடியவில்லை என்றால் என்ன அர்த்தம்? உங்களால் செயல்பட முடியாது என்றுதானே அர்த்தம். ஒரு திட்டத்தை, சட்டத்தைக் கொண்டுவந்தால் அதை நிறைவேற்ற வேண்டும். அப்படி நிறைவேற்ற முடியவில்லை என்றால் செயல்படாத பிரதமர் என்றுதான் அர்த்தம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. கதிரவன், உரையை ஒரு நிமிடத்திற்குள் முடியுங்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு மத்திய அரசு மானிய விலையில் டீசல் வழங்க வேண்டுமென்பதை வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். டெல்டா பகுதியில் பருவமழை பொய்த்து விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உயர்மட்டக் குழு அமைத்து அந்தப் பகுதியிலே ஆய்வு செய்து அவர்களுக்கு நிவாரணத்தை விரைவிலே வழங்குவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன், விரைவில் வழங்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று முல்லைப் பெரியாறு அணையிலும் இந்தமுறை தண்ணீர் திறந்துவிடப்பட்டது. வைகை அணையிலும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. வைகையிலே திருமங்கலம் பிரதான கால்வாய்க்கும், மேலூர் கால்வாய்க்கும் 20—இலிருந்து 25 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டு அடைக்கப்பட்டது. ஆனால், அந்தப் பகுதி மக்கள் தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயத்தைத் தொடங்கிவிட்டார்கள். இப்போது தண்ணீர் விடுவதற்கு இயலவில்லை, இயற்கை மழை பொய்த்ததால் மறுக்கவில்லை. ஆனால், அந்தப் பகுதியிலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள், சொல்லப்போனால், திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய 5 மாவட்ட விவசாயிகளுக்கும் நீங்கள் நிவாரணம் வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று, நமது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

பிற்பகல் 3–10

**திரு. பி.வி. கதிரவன்:** சீக்கிரம் உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்களைப் பாராட்டுகின்ற வகையிலே, விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழர்களுக்கெல்லாம் 200 ஆண்டுகளுக்கு முன்னால் தனியாக இருந்து ஆங்கிலேயர்களை விரட்டியடித்த மாபெரும் தலைவி வீர மங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவிடம், தீரன் சின்னமலை அவர்களுக்கு நினைவிடம், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலன், சுயமரியாதை சுடரொளி ஜீவரெத்தினம், தியாகி சங்கரலிங்கம் போன்றவர்களுக்கெல்லாம் நினைவிடம் கட்டி பெருமை சேர்த்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி, முல்லைப் பெரியாறைக் கட்டிய கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களுக்கு நினைவிடம் கட்டி, அந்த நினைவிடத்தில் அவரது முழு உருவச் சிலையை உருவாக்கி திறந்து வைத்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. அதேபோன்று, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கல்லணையைக் கட்டிய கரிகால்சோழனுக்கு நினைவிடம் ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதி அளித்ததைப் பாராட்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். நேரமாகிவிட்டது.

**திரு. பி.வி. கதிரவன்:** 1920 ஆம் ஆண்டு மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தொகுதியிலே பெருங்காமநல்லூரிலே ஆங்கிலேயர்களை எதிர்த்து 16 பேர் நேருக்கு நேர் போரிட்டு இறந்திருக்கிறார்கள். அந்தத் தியாகிகளுக்கு அந்த இடத்தில், அந்தப் பகுதி மக்கள் மரியாதை செய்துவருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களுடைய நினைவிடத்தில் வருகின்ற ஏப்ரல் 3 ஆம் தேதி அரசு விழாவாக எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசுக்கு வைத்து நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள், 5 நிமிடத்தில் உரையை முடித்துவிட வேண்டும்.

***திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரை மீதான விவாதத்திலே கலந்துகொள்ள வாய்ப்பளித்த தேசிய முற்போக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கேப்டன் அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். நேரம் 5 நிமிடம் ஒதுக்கியிருக்கின்றீர்கள், என்னுடைய தொகுதி சம்பந்தமாக சில பிரச்சினைகள் இருக்கின்றன, அதை இந்த அவையிலே நீங்கள் பதிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை எழுதிக் கொடுங்கள். பதிந்து கொள்ளலாம்.

**திரு. எல். வெங்கடேசன்:** எனது தொகுதிப் பிரச்சினைகள். திருவண்ணாமலையில் இருந்து மணலூர்பேட்டை வழியாக தியாகதுருகம் வரை செல்லுகின்ற சாலையில் தென்பெண்ணை ஆற்றின் தரைப்பாலம் உள்ளது. மழைக் காலங்களிலும் ஆற்றில் வெள்ளம் வருகின்றபோதும் அந்தப் பகுதியில் போக்குவரத்து முற்றிலும் துண்டிக்கப்படுகிறது. எனவே, மணலூர்பேட்டையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ஒன்றை அமைக்க வேண்டும்.





திருக்கோவிலூர் நகரில் பெருகி வரும் மக்கள்தொகை, 140 கிராம மக்கள் வந்து செல்லுகின்ற சூழ்நிலை ஆகியவற்றால் தினசரி போக்குவரத்து நெரிசலில் சுமார் 30 வருடங்களாக மக்கள் சிக்கித் தவிக்கின்றார்கள். புதியதாக ஒரு பேருந்து நிலையத்தை திருக்கோவிலூரிலே அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழுவை அமைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருக்கோவிலூர் நகரம் முழுவதும் ஆக்கிரமிப்புகள் நிறைய உள்ளன. இந்த ஆக்கிரமிப்புகளில் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள், இடங்கள், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஆவியூரான், சித்தேரியான் வாய்க்கால்கள் மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகளும் அடங்கும். திருக்கோவிலூர் நான்கு முனை சந்திப்பில் அரசு மருத்துவமனை, பெண்கள், ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகியவை அமைந்துள்ளன. இந்த இடங்களுக்கு தினசரி சுமார் ஐந்தாயிரம் பேர் வந்து செல்கிறார்கள். இந்த இடத்தில் மழை பெய்தாலோ, வெயில் அடித்தாலோ ஒதுங்கி நிற்க அவர்களுக்கு இடம் இல்லை. பயணியர் நிழற்குடை அமைக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை வைத்தார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மக்களின் கோரிக்கைளை ஏற்று, நிழற்குடை அமைக்க ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கியும், இதுவரையில் பயணியர் நிழற்குடை அமைக்கப்படவில்லை. ஏனென்றால் ஆக்கிரமிப்பாளர்களும் ஆக்கிரமிப்பை அகற்ற மறுக்கின்றார்கள். அதிகாரிகளும் ஆக்கிரமிப்பை அகற்ற பயப்படுகிறார்கள். திருக்கோவிலூர் நகரம் 50 சதவிகிதம் அளவிற்கு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசு உடனடியாக இதில் தலையிட்டு பாரபட்சம் பார்க்காமல் பெரும்பான்மையான மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு ஆக்கிரமிப்புகளை இரும்புக் கரம் கொண்டு அகற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவெண்ணெய்நல்லூர் அருள்மிகு மங்களாம்பிகை சமேத ஸ்ரீகிருபாபுரீஸ்வரர் ஆலயம் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் தடுத்தாட்கொள்ளப்பெற்று பாடல் பெற்ற ஸ்தலம். இங்கு தினந்தோறும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் வந்து தரிசனம் செய்கிறார்கள். எனவே, இந்தப் பாடல் பெற்ற ஆன்மீக ஸ்தலத்தை சுற்றுலா ஸ்தலமாக அறிவிப்பதுடன் அன்னதான திட்டத்தையும் இங்கு செயல்படுத்த வேண்டும்.

திருவெண்ணெய்நல்லூர் பகுதியில் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. பிரதான தொழிலும் இங்கு விவசாயமே. ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் இங்கு செயல் இழந்துள்ளது. எனவே, விவசாயிகள் விளைபொருட்களை மற்ற இடத்திற்கு எடுத்துச்செல்லும் நிலை உள்ளது. ஆகவே, இங்கே புதியதாக ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை அரசு இடத்தில் புதிய பொலிவுடன் கட்டித்தர வேண்டும்.

திருவெண்ணெய்நல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையமாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்குள்ள ஏரி சுமார் 100 ஆண்டு காலமாக தூர் வாரப்படாமல் உள்ளது. இதனை உடனடியாகத் தூர் வார நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சுந்தரரால் பாடல் பெற்ற ஸ்தலமான திருவெண்ணெய்நல்லூரில் வரலாற்றை குறிக்கும் வகையில் சுந்தரர், கம்பர், சடையப்ப வள்ளல் ஆகியோரின் நினைவாக நினைவு வளைவு ஏற்படுத்திட வேண்டும். திருவெண்ணெய்நல்லூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா ஒன்றை இந்த அரசு உருவாக்கிட வேண்டும்.

ஒன்றரை கிலோ மீட்டர் தூரமுள்ள திருவெண்ணெய்நல்லூர் கடை வீதி சுமார் 60 ஆண்டு காலமாக சேதமடைந்த நிலையிலேயே உள்ளது. நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த சாலையை கான்கிரீட் சாலையாக மாற்றினால்தான் இந்தச் சாலை மக்களினுடைய பயன்பாட்டிற்கு ஏதுவாக இருக்கும். இல்லையென்றால் அதன் வழியாக தற்பொழுது ஏற்படுகின்ற புழுதி தூசுகளால் மக்கள் பலவிதமான நோய்களுக்கு ஆளாவதுடன், போக்குவரத்துப் பிரச்சினையும் பெருமளவு ஏற்படுகின்றது. எனவே, சிமெண்ட் சாலை அமைக்க இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருவெண்ணெய்நல்லூர் மகளிர் பள்ளிக்கு போதிய வகுப்பறை கட்டடம், கழிப்பிட வசதி, பள்ளி மதிற்சுவர் மற்றும் காந்தி நகர் முதல் மழையம்பட்டு வரை சிமெண்ட் சாலை அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

முகையூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கண்டாச்சிபுரத்தை பேரூராட்சியாக தரம் உயர்த்தவும், அங்கே 30 படுக்கை வசதி





கொண்ட ஆரம்ப சுகாதார மையம் அமைக்கவும், அங்கே சார் பதிவாளர் அலுவலகம், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், புதியதாக தீயணைப்பு நிலையம் போன்றவற்றையும், கண்டாச்சிபுரம் பிரதான சாலையின் இரு பக்கமும் சுமார் 1000 மீட்டர் அளவிற்கு கழிவுநீர் வடிகால் வாய்க்கால் அமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருக்கோவிலூர் கால்நடை உதவி இயக்குநர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம், காட்டு பையூர், ஆயந்தூர், இளந்துறை ஆகிய கிராமங்களில் புதிய கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டித் தரவும், திருக்கோவிலூர் வணிக வரித் துறை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டவும், அரகண்டநல்லூர் துணை சார் பதிவாளர் அலுவலகத்திற்கும், திருவெண்ணெய்நல்லூர் துணை சார் பதிவாளர் அலுவலகத்திற்கும் புதிய கட்டம் கட்டித் தரவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருவெண்ணெய்நல்லூரில் அரசு கலைக் கல்லூரி கட்ட நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் இன்று வரை கல்லூரி ஆரம்பப் பள்ளிக் கட்டடத்திலும், வாடகைக் கட்டடத்திலும் இயங்கி வருகிறது. உடனே அந்தக் கல்லூரிக்குத் தேவையான கட்டடத்தைக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காரணை பெரிச்சானூர் என்ற இடத்தில் தற்போது பொருத்தப்பட்டுள்ள 16 கிலோ வாட் மின் மாற்றியோடு மேலும் ஒரு 16 கிலோ வாட் மின்மாற்றியைப் பொருத்த வேண்டும். மேலும் திருக்கோவிலூரில் துணை மின் நிலையத்தில் உள்ள 16 கிலோ வாட் மின் மாற்றியை மாற்றிவிட்டு அதற்குப் பதிலாக 25 கிலோ வாட் மின் மாற்றியை அமைக்க வேண்டும்.

மேலும், எனது தொகுதி ஒன்றியத்திற்கு உட்பட்ட திருக்கோவிலூர்—தேவிஅகரம், காட்டு பையூர்— எல்ராம்பட்டு, வடமருதூர் பல்லக்காலனி சாலை, வில்லிவளம் ஆதிதிராவிடர் காலனி சாலை, ஆயந்தூர்— புரவடை சாலை, ஏமப்பூர்—செம்மார் இணைப்பு சாலை, செம்மார்—கரடிப்பாக்கம் இணைப்பு சாலை, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான கடலூர்—சித்தூர் சாலை, விழுப்புரம்—மாம்பழப்பட்டு—திருக்கோவிலூர் சாலை, திருக்கோவிலூர்—வேட்டவலம் சாலை, திருக்கோவிலூர் ரெயில்வே சாலை, அரகண்டநல்லூர்—ஆயந்தூர் சாலை, காட்டு பையூர் சாலை, கொடுங்கால் சாலை, அண்டராயநல்லூர் சாலை, கொளப்பாக்கம் சாலை, விளந்தை சாலை, கண்டாச்சிபுரம்—

அரகண்டநல்லூர் சாலை, ஆலம்பாடி சாலை, ஆதிச்சனூர்–வசந்த கிருஷ்ணாபுரம் சாலை, வடகரை தாழனூர் சாலை, மணக்குப்பம் சாலை, வடகரை தாழனூர்–திருமலைப்பட்டு சாலை, மாரங்கியூர்–ஏனாதிமங்கலம் மலட்டாறு குறுக்கே மேம்பாலம், பையூர்–கொங்கராயனூர் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ஆதிச்சனூர் இடையே துரிஞ்சலாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம், தேவனூர்–கோட்டமருதூர் இடையே துரிஞ்சலாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ஆகியவற்றை சரி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று நடந்த மேதகு ஆளுநர் உரையின்மீதான விவாதத்திலே, மாண்புமிகு அரசுக் கொறடா அவர்கள் சொன்ன இரண்டு கருத்துகளை மட்டும் எடுத்து நான் இந்த அவையிலே விவாதம் செய்ய விரும்புகிறேன். அதிலே ஒன்று மத்திய அரசு, அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு டிஜிட்டல் ஒளிபரப்பு சேவைக்கான அனுமதியை வழங்கவில்லை என்று சொன்னார். அது கண்டிக்கத்தக்கது. அதேசமயத்திலே இன்றையதினம் தமிழ்நாடு அரசு கேபிள் நிறுவனம் அனலாக் முறையிலே சேனலை ஒளிபரப்பி வருகிறது. இந்த அனலாக் முறையிலே 106 சேனல்கள் ஒளிபரப்பப்படுகின்றன. இந்த 106 சேனல்கள் எந்த அடிப்படையில் ஒளிபரப்பப்படுகின்றன? அதாவது, அரசு கேபிள் டி.வி. தொடங்கப்படுவதற்கு முன்பாக இலவசமாக ஒளிபரப்பப்பட்ட சேனல்கள் எல்லாம் இன்று கட்டணச் சேனல்களாக மாறியிருக்கின்றன. இப்படி கட்டணச் சேனல்களாக மாறி இருப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை. அதேசமயத்திலே இந்த நாட்டு மக்களுக்கு இலவசமாக ஒளிபரப்ப நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று சொல்லுகின்ற சில சேனல்கள், உதாரணத்திற்கு கேப்டன் செய்தி சேனல் போன்ற சேனல்களை ஏன் இந்த அரசு கேபிள் டி.வி. நிறுவனம் ஒளிபரப்பத் தயங்குகிறது? இதற்கான காரணம் என்ன? அப்படியானால், அந்த 106 சேனல்களும் ரிசர்வ் செய்யப்பட்டிருக்கின்றனவா? அந்த 106 சேனல்கள் எந்தெந்த முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன என்பதை இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு செய்த தவறை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக செய்யாது. எந்தச் சேனலாக இருந்தாலும் முறையாக விண்ணப்பித்தார்கள் என்று சொன்னால், அதை ஆய்வு செய்து அது எடுத்துக்கொள்ளப்படும். நீங்கள் இஷ்டத்திற்கு இங்கிருந்தோ, மேடையில் இருந்து பேசிக்கொண்டே இருந்து, விண்ணப்பம் செய்யவில்லை என்று சொன்னால் யார் என்ன செய்ய முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெங்கடேசன், உங்களுக்குக் கொடுத்திருப்பது 5 நிமிடங்கள். பிரச்சினை ஏதுமில்லாமல் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 3–15

**திரு. எல். வெங்கடேசன்:** நான் பேசி முடித்துவிடுகிறேன். நான் வேறு எதையும் பேசவில்லை. கேப்டன் செய்தி சேனல் ஆரம்பித்த பிறகு இரண்டு டி.வி. சேனல்களுக்கு அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் அனுமதி கொடுத்திருக்கிறது. ஜி. டி.வி., லோட்டஸ் டி.வி. போன்ற 2 தொலைக்காட்சிகளுக்கு ஒளிபரப்பு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த தனியார் தொலைக்காட்சி அதற்கான விண்ணப்பத்தை விண்ணப்பித்திருக்கிறது. ஆனால், காலதாமதம் செய்துகொண்டிருக்கிறது. இதற்கு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமா என்று நான் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்ற உறுப்பினர் தவறான கருத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார். மத்திய அரசு முதலிலேயே நமக்கு தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. ஆரம்பிப்பதற்கு உத்தரவு வழங்கி, மத்திய அரசிலே அங்கம் வகிக்கின்ற தி.மு.க.வுடைய அதிகார மையத்தில் இருந்து கொண்டு, மீண்டும் அந்த உரிமத்தை உடனடியாக வழங்காமல் காலதாமதம் செய்யும் நிலையினை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு உருவாக்கிக் கொண்டிருக்கும் நிலையிலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் பேசுகின்ற நேரத்தில், காவிரி நீராக இருந்தாலும் சரி, கேபிள் டி.வியாக

[திரு. ந. சுப்பிரமணியன்] [2013 பிப்ரவரி 6

இருந்தாலும் சரி, அதை முக்கியமாகக் கையில் எடுத்துக் கொண்டு அங்கே பேசுகின்ற நேரத்தில், அதற்கு வாய்ப்பு அளிக்கவில்லை. கேபிள் டி.வி.யின் அரசு உரிமத்தை வழங்க காலதாமதம் செய்கின்ற நிலையிலே மத்திய அரசு இருக்கிறது என்பதை அம்மா அவர்கள் தெரிவிக்கின்ற நேரத்தில், அவர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படுகிறது. மத்திய அரசு டிஜிட்டல் உரிமம் வழங்காததன் காரணமாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிமம் பெற்றபின்பு, எந்தெந்த டி.வி. அரசு கேபிள் டி.வி.–யில் சேர்க்கப்படும் என்பதை தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் முடிவு செய்யும் என்பதை இந்தப் பேரவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(7–2–2013)* வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 3–17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*22. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜே1) துறையின் 5–12–2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 148 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.* [*1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]

*23. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை.* [*1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*] *(தமிழ், ஆங்கிலம்)*

*24. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)*



2013 பிப்ரவரி 6]

*619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*] *(தமிழ், ஆங்கிலம்)*

*25. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*] *(தமிழ், ஆங்கிலம்)*

*26. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*] *(தமிழ், ஆங்கிலம்)*

*27. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கையும், ஆண்டு கணக்குகளும்,* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*] *(தமிழ், ஆங்கிலம்)*

*28. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*] *(தமிழ், ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*6. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கை. (2012–2013)*